முள்ளில் ரோஜா

சகோதரி ஸ்டெல்லா தினகரன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

முள்ளில் ரோஜா

சகோதரி ஸ்டெல்லா தினகரன்

வெளியீட்டாளர் :

இயேசு அழைக்கிறார்

72, ராஜாஜி சாலை,

சென்னை - 600 001.

		வருடம்	பிரதிகள்
முதலாம் பதிப்பு	:	1990	2000
இரண்டாம் பதிப்பு	:	1993	2000
மூன்றாம் பதிப்பு	:	1997	2000
நான்காம் பதிப்பு	:	2000	2000
ஐந்தாம் பதிப்பு	:	2003	3000
ஆறாம் பதிப்பு	:	2006	3000
ஏழாம் பதிப்பு	:	2011	3000

Copyright 2011 by Sis. Stella Dhinakaran

All Rights Reserved
under international copyright law.
Contents and / or cover may not be reproduced
in whole or in part in any form without the express written
consent of the publisher.

ISBN No. 978-93-81334-21-8

Printed at : Rathna Offset Printers, Chennai - 600 014.

பொருளடக்கம்

பதிப்பாளர் உரை 4

1. சாரோனின் ரோஜா! 7

2. நெருக்கமான முட்கள்! 14

3. முள்ளில் ரோஜா! 22

4. நிலைகுலைந்த ரோஜா! 35

5. வாழ்வில் நறுமணம்! 65

6. இறைத் தொண்டில் நற்கந்தம்! 76

7. மேன்மையை ஈர்க்கும் ரோஜா! 91

பதிப்பாளர் உரை

...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்...

யோவான் 16:33

என்றார் இயேசு! ஆண்டவர் நமக்கு வாக்கு அளிக்கும் இந்த ஜெயம் அரைகுறையானது அல்ல! அது முற்றிலும் ஜெயம் தருகிற வெற்றி!

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.

ரோமர் 8:37

இந்த உண்மையை அறிந்தும் அனுபவித்தும் வருகிற மக்கள் வெகு சிலரே! ஏனையோர், உலகில் பல்வேறு உபத்திரவங்களும் பாடுகளும் வரும்போது, அதிகமாய் கலங்கித் தவிக்கிறார்கள். குறிப்பாக, சகோதரிகளாகிய நாம் அதிகமாய் தவிக்கிறோம்.

என் வாழ்க்கையில் இப்படிப்பட்ட தவிப்பு பற்பல சமயங்களில் வரத்தான் செய்தது. ஆனால், அந்த நேரங்களிலெல்லாம் சாரோனின் ரோஜாவாகிய அன்பின் ஆண்டவர் இயேசு, எப்படியெல்லாம் என்னை ஆற்றினார், தேற்றினார் என்பதைத்தான் இப்புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். என்னைக் காட்டிலும் அதிகமான பாடுகள்பட்டு, அதின் மத்தியிலும் ஆண்டவருக்கென்று சூரியனைப் போன்றும், நட்சத்திரங்களைப் போன்றும் பிரகாசிக்கிற மக்கள் ஏராளம்பேர் இருக்கலாம். அதே சமயம் பாடுகளினூடே அவைகளை சகிக்க முடியாமல் கண்ணீரில் வாழும் அன்பு சகோதரிகளும் பலர் இருக்கலாம். இப்படிப்பட்ட சோர்வுற்ற சகோதரிகளுக்கு ஆறுதல் உண்டாக்கவே, என் வாழ்க்கை

சரிதையை, நான் கடந்து சென்ற அல்லது நாங்கள் குடும்பமாக கடந்து சென்ற பாடுகளையும், பரமன் இயேசுவின் கிருபையும், இரக்கமும், அன்பும், தயவும் அந்த சமயங்களிலெல்லாம் எவ்வாறு எங்களை ஆறுதல்படுத்தியது என்பதையும் விவரித்திருக்கிறேன்.

...நான் உங்களைத் தாங்குவேன்;...நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன். ஏசாயா 46:4

என்று வாக்கருளிய ஆண்டவர், உண்மையாய் எங்களைத் தாங்கினார், ஏந்தினார், சுமந்தார், தப்புவித்தார்.

கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்கள் குடும்பத்தில் பெருகியது போல அவர்தரும் ஆறுதலும் எங்கள் உள்ளத்தை அவ்வப்போது நிரப்பி வந்தது. அதினிமித்தமாக எங்களைப் போன்று, உபத்திரவத்தில் தவிக்கும் மக்களுக்கு ஆறுதல் செய்யும் திராணியை நாங்கள் பெற்று கொண்டோம். கர்த்தர் இன்று அந்தவிதமான ஊழியத்தையே எங்களுக்குக் கொடுத்து, அநேகருடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் கண்ணீரை துடைக்கும் கருவிகளாய் எங்களை உபயோகித்து வருகிறார்.

அன்பு சகோதரிகளே! நீங்களும் இவ்வுலகின் பாடுகள், துன்பங்கள், ஏமாற்றங்கள், இவைகள் அனைத்தின் மத்தியிலும், முள்ளின் நடுவே காணப்படும் ரோஜாவைப் போன்று மணம் வீசி, கர்த்தர் விரும்பும் அழகுடன் வாழ தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் அருள்புரிவாராக!

சென்னை - 28. திருமதி. ஸ்டெல்லா தினகரன்
ஜனவரி 1990 பதிப்பாளர்.

1 சாரோனின் ரோஜா!

நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமுமாயிருக்கிறேன். உன்னதப்பாட்டு 2:1

ஆம்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே அந்த சாரோனின் ரோஜா! அவர் முற்றிலும் அழகுள்ளவர்! அவர் வெண்மையும் சிவப்புமானவர்! பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்! அவர் வாய் மிகவும் மதுரமானது! இன்னும் அவருடைய அழகை பற்றிய வருணனையை வேதபுத்தகம் அழகாய் தெளிவுப்படுத்துகிறது (உன்னதப்பாட்டு *5:10-16*).

இவ்வுலகில் மனிதனாக அவதரிக்குமுன்பு, தம்முடைய பிதாவின் மடியில் அவர் செல்லப்பிள்ளையாக இருந்தார் (நீதிமொழிகள் *8:30*). அவர் தேவனுடைய தற்சுரூபமாகவும், அவர்தம் சாயலாகவும் இருந்தார் (கொலோசெயர் *1:15*; 2 கொரிந்தியர் *4:4*). பூக்களில் மேன்மைபெற்ற ரோஜாவைப் போன்று இத்தகைய சிறந்த நிலைமையிலிருந்த இவரை, பிதாவாகிய தேவன் மானிடராகிய நம்பொருட்டு இவ்வுலகிற்கு மனிதனாக அனுப்ப சித்தம் கொண்டார். தம் சிருஷ்டிகளாகிய நம்மை தேவன் அவ்வளவாய் நேசித்தார்!

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர்...

ரோமர் 8:32

அது மாத்திரமின்றி, அவருடைய தரித்திரத்தினாலே நாம் ஐசுவரியவான்களாகும்படிக்கு நமது நிமித்தமாக அவர் தரித்திரராய் இவ்வுலகத்தில் அவதரித்தார் (2 கொரிந்தியர் 8:9). அந்த நிலையிலேயே முடிவுபரியந்தம் வாழ்ந்தார். ஒவ்வொரு வேளையும் உணவு எங்கிருந்து வரும் என்பதை அறியாத நிலைமையிலும், உறங்குவதற்கு சரியான இடமில்லாமலும், ஒரு நிலையற்ற வாழ்க்கை வாழ்ந்தார்.

...நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. லூக்கா 9:58; மத்தேயு 8:20

என்று அவரே கூறினார். பல சமயங்களிலும், அவருடன் தோளோடு தோள்நின்று காரியங்களை மேற்கொள்ளும் நிலைமையில் அவருக்கு எவருமில்லை. சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு தம்முடன் மூன்றரை வருடங்கள் ஊழியத்தில் பங்குகொண்ட தம் அன்பு சீடர்களை, அந்த துக்கத்தை மேற்கொள்ள விழித்திருந்து ஜெபிக்க வேண்டினார். அவர்களோ சற்றும் கவலையின்றி, பாரமின்றி நன்றாய் உறங்கிவிட்டார்கள் (மத்தேயு 26:38,40). அத்தகைய சமயங்களிலெல்லாம் அவருடைய உள்ளம் தனிமையினால் எத்தனை தவியாய் தவித்திருக்கும்! "ஐயோ, என் தவிப்பை உணர்ந்துகொள்ள எவருமே இல்லையே! என்னுடன் கூடவே இருந்த இவர்களுக்கே நான் சொல்லும் காரியங்கள் விளங்காமல் போகுமானால், வேறு யார் என்னைப் புரிந்துகொள்ளப் போகிறார்கள்?" என்று கலங்கியிருப்பார். ஆகவேதான், அடிக்கடி இரவு நேரங்களில் தனித்து மலைகளிலும், பற்பல தனிப்பட்ட இடங்களிலும் தம்

பிதாவை நோக்கி ஜெபித்து வந்தார் (லூக்கா *6:12; 5:16;* மாற்கு *1:35*).

தேவ மைந்தனாகிய அவர் எதற்காக இந்த விதமான பாடுகளை அனுபவிக்க வேண்டும்? ஆனால் இதுவே தேவாதி தேவனுடைய சித்தமும், தீர்மானமுமாயிருந்தது. அதை யாரால் மாற்றமுடியும்? ஆனால், தேவகுமாரனாகிய இயேசுவோ, தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற மகிழ்ச்சியோடு தம்மை ஒப்புக்கொடுத்தார்.

> ...நான் என்னை அனுப்பினவருடைய (பிதா) சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. **யோவான் 4:34**

> ...மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிற தெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.
> **யோவான் 5:19**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவுக்கு கீழ்ப்படிவதிலும், அவருடைய சித்தத்தை முழுமனதோடு நிறைவேற்றுவதிலும் மிகவும் கவனமாய் இருந்தார்.

இயேசுவானவர், தம்முடைய அனுதின வாழ்க்கையில் மாத்திரமின்றி, ஊழியத்திலேயும் தேவன் தம் சிருஷ்டி களைக் குறித்து கொண்டிருந்த பாரத்தையே தாமும் கொண்டிருந்தார். விதவைகள், மனிதரால் தள்ளப்பட்ட வர்கள், வாழ்க்கையில் நெருக்கப்பட்டவர்கள், பாவத்தில் சிக்குண்டவர்கள் யாவர் மீதும் மனதுருக்கம் கொண்டவ ராய், அவர்களை சகல கட்டுகளிலிருந்தும் விடுவிப்பதில் முழு கவனம் செலுத்தினார்.

கணவனை இழந்த பெண்ணொருத்தி, தன் ஒரே மகனை இழந்து தவிப்பதையும், கண்ணீர்விட்டுக் கதறுவதையும் கண்டபொழுது, அவருடைய மனம் தேவனுடைய அன்பால் நிரம்பியது. உடனே அந்த ஸ்திரீயினிடம் சென்றார். மிகுந்த மனதுருக்கத்துடன், "மகளே, அழாதே!" என்று சொல்லி அவளைத் தைரியப்படுத்தி மரித்த அவளுடைய மகனின் சரீரத்தைத் தொட்டு, அவனை உயிரோடு எழுப்பினார். அந்தத் தாயின் கண்ணீரைத் துடைத்து, அவளை மகிழ்ச்சி வெள்ளத்தில் பூரிக்கும்படி செய்தார் (லூக்கா 7:11-15). அதுபோன்றே தன்னை அன்போடு அவ்வப்போது உபசரித்து வந்த அன்பு சகோதரிகளாகிய மார்த்தாளும், மரியாளும் தங்கள் ஒரே சகோதரனாகிய லாசருவை இழந்தபொழுது, அவர்கள் கண்ணீரைத் துடைக்க அவர்கள் இருந்த ஊரிற்கே புறப்பட்டு வந்தார். லாசரு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு நான்கு நாட்கள் ஆனபோதிலும், தேவனுடைய வல்லமையைக் காண்பிக்க, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த அவர் புறப்பட்டு வந்தார். கல்லறையண்டையில் வந்து, கல்லை எடுத்துப் போடும்படி கூறினார். அவர்கள் அப்படியே செய்தார்கள். தான் "தேவ குமாரன்" என்று தன்னைப் பெருமிதப்படுத்தாமல் தேவனை நோக்கி, "பிதாவே நீர் எனக்கு செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்கு செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" (யோவான் 11:41,42) என்று பிதாவோடு சம்பாஷனை செய்து, அவர்தம் சித்தத்தின்படி அந்த அற்புதத்தை நிகழ்த்தினார். தேவனுடைய நாமம் இதன் மூலம் மகிமைப்பட்டது.

வேறொரு சமயம் எருசலேமை நோக்கிப்பார்த்து கண்ணீர் விட்டழுதார் (லூக்கா 19:41). இவ்விதமாக தேவனுடைய அன்பினால் நிறைந்தவராக, மக்களுடைய துயரங்களைத் தம் துயரமாக எடுத்து, அவர்கள் குறைவு

களுக்காக தமது உள்ளத்திலே மிகவும் நெருக்கப்பட்டார். எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாக சிலுவையில் பாடுகளுக்குட்படுத்த தம்மை முற்றிலுமாய் அர்ப்பணித்தார்.

ரோஜாவைப் போன்றிருந்த அவருடைய அழகு முகம் அந்தக்கேடடைந்தது; சௌந்தரியம் முற்றிலும் மாறியது; அவரைப் பார்க்கும்போது விரும்பத்தக்க ரூபம் இல்லாத நிலைமையிலிருந்தார் (ஏசாயா 53:2). சாரோனின் ரோஜா முட்களிடையில் நெருக்கப்பட்டது. அவர் இவ்விதமாய் நெருக்கப்பட வேண்டும் என்பதுதான் தேவனுடைய சித்தம்! அநேகம் பிள்ளைகளை மகிமையிலே கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது (எபிரெயர் 2:10). சிலுவையின் வேதனைகளை இயேசு தம்மேல் ஏற்றுக்கொண்டு, பொறுமையுடன் சகித்தார். அவமானத்தை சற்றும் பொருட்படுத்தவில்லை. எந்த மனிதருக்காக தம்மை ஒப்புக்கொடுக்கும்படி இவ்வுலகத்திற்குப் புறப்பட்டு வந்தாரோ, அதே மனிதர்களால் அலட்சியம் பண்ணப்பட்டார். எந்த மக்களுக்கெல்லாம் அன்புசெலுத்தி, சகல கட்டுகளிலிருந்தும் விடுதலையை வாங்கிக் கொடுத்தாரோ, அதே மக்களால் பரிகசிக்கப்பட்டார். அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போல வாயை திறவாமல் எல்லா நெருக்கங்களிலும் பொறுமையாய் இருந்தார். தேவாதி தேவனுடைய திருக்குமாரனாக இருந்த பொழுதிலும் அவருடைய பிரேதக்குழி துன்மார்க்கரோடே நியமிக்கப்பட்டிருந்தது (ஏசாயா 53:7,9). எல்லாவற்றின் மத்தியிலேயும் அவர் பொறுமையாயிருந்தார்.

அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்;

அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்.

ஏசாயா 53:11

தேவாதி தேவனுடைய திருக்குமாரன் இத்தனை பாடுகளினூடே தம் வாழ்வையெல்லாம் கடத்த வேண்டுமானால், அதற்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டுமல்லவா! சிலுவையிலே அவர் நம் ஒவ்வொருவருடைய பாடுகளையும், பாவங்களையும் சுமந்தார். நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் அடிக்கப்பட்டார். நமக்குச் சமாதானம் உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது (ஏசாயா *53:5*).

இன்று இதை விசுவாசித்து, அவரை சொந்த இரட்சகராக நாம் ஏற்றுகொள்ளும்பொழுது, நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். நமக்கு புது வாழ்வு அளிக்க அவர் வழியைத் திறந்து வைத்திருக்கிறார். அவ்வாறு தம்மை நெருக்கத்தின் பாதையில் நடத்துவதற்கு அவர் ஒப்புக் கொடுக்காமல் இருந்திருப்பாரானால் இன்று இந்த இலவச மீட்பு நமக்குக் கிடைத்திருக்காது; நம்முடைய பாவ வாழ்க்கைக்குப் பரிகாரமே இருந்திருக்காது. நித்திய, நித்தியமாய் பாவமில்லாத பரிசுத்த வாழ்வு வாழவும், அவர் நடந்த பாதையில் நாமும் நடக்கவும், முன் மாதிரியாக எல்லா நெருக்கங்களிலும், பாடுகளிலும் கடந்து செல்ல தம்மை தாமே அவர் அர்ப்பணித்தார். எனவே, இந்த நெருக்கத்தின் முட்கள் அவருடைய வாழ்க்கையில் மிக, மிக அவசியமாய் இருந்தது.

தேவனுடைய அன்பு எத்தனை விலையேறப்பெற்றது! அவருடைய சித்தத்தை நிறைவேற்ற தம்மை அர்ப்பணித்த இயேசு கிறிஸ்துவின் அன்புதான் எத்தனை உன்னதமானது! "இவ்வாறு தியாகம் செய்த ஆண்டவர் இயேசுவின் தூய இரத்தத்தினால் என் பாவங்கள் நீங்க நான் கழுவப்பட்டிருக்கிறேன்" என்று நீங்கள் சொல்ல முடியுமா? அப்படி

திட்டமாக சொல்ல முடியாமல் இருப்போமானால், இவ்வுலக வாழ்வில், பெயரளவில் "நானும் கிறிஸ்தவள்" என்று வாழ்ந்தாலும், நியாயத்தீர்ப்பின் நாளில் நியாயந் தீர்க்கப்படவும், நித்திய நரக வாழ்வை அனுபவிக்கவும் வேண்டுமே! இந்த பயங்கர வாழ்க்கை ஒருவருக்கும் வேண்டாம்.

இன்றே நீங்கள் இருக்குமிடத்தில், இதயம் நொறுங்கிய வர்களாய், கண்ணீருடன் முழந்தாளிட்டு, "இயேசுவே! உம்முடைய வாழ்வை நெருக்கங்களுக்கு உட்படுத்தி, என் பாவங்களையும், அக்கிரமங்களையும் சுமக்க, சிலுவை யிலே நீர்பட்ட பாடுகளுக்காய் ஸ்தோத்திரம்! என்னை மீட்கும்பொருட்டு, நீர் சிந்திய உம் தூய இரத்தத்திற்காய் ஸ்தோத்திரம்! என் பாவம் நீங்க என்னைக் கழுவும்! என் பழைய பாவ வாழ்வை மாற்றி, என்னை புதிய சிருஷ்டி யாக்கும்! நீர் நடந்த பரிசுத்த பாதையில் நடக்க எனக்கும் கிருபை தாரும்! உம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து, உம்முடைய மாதிரியைப் பின்பற்ற (1 பேதுரு 2:21) என்னையும் பலப்படுத்தும்!" என்று அவரை நோக்கி இருதயத்தின் ஆழத்திலிருந்து வேண்டுதல் செய்யுங்கள். இயேசுவின் உள்ளம் உங்களைக் குறித்து இதைத்தான் வாஞ்சிக்கிறது. தேவாதி தேவன், "சாரோனின் ரோஜா வாகிய என் குமாரனை நொறுக்குதலுக்குட்படுத்தியது எத்தனை நலமான காரியம்" என்று பெருமிதம் கொள்வார். சாரோனின் ரோஜா சதாகாலமும் உங்களோடிருப்பார்!

2

நெருக்கமான முட்கள்!

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.

மத்தேயு 7:14

இரண்டு பாதைகள் உண்டு! ஒன்று நித்திய ஜீவ வாழ்வுக்கு நேராகப் போகிறது. மற்றொன்று நித்திய நித்தியமான அழிவுக்கு நேராக போகிறது. இதற்கிடையில் வேறுவிதமான எந்தப் பாதையும் கிடையாது. ஜீவனுக்குப் போகிற வழி மிகுந்த இடுக்கங்களினூடாகச் செல்கிறது. இந்த இடுக்கங்களைத் தவிர்க்க வேறு வழியேதுமில்லை. முந்தைய அத்தியாயத்தில் இவ்வுலகில் மனிதனாக அவதரித்த தேவகுமாரனாகிய இயேசுவும் இந்த இடுக்கமான பாதையையே தெரிந்து கொண்டார் என்று வாசித்தோம். அவரை உண்மையான மனதுடன் பின்பற்ற விரும்புகிற எவருமே இந்த நெருக்கமான முட்கள் நிறைந்த வழியினையே தாங்களும் பின்பற்ற வேண்டியிருக்கிறது (மத்தேயு 16:24; மாற்கு 8:34). அநேகர் இந்த பாடுகளையும், நெருக்கங்களையும் தங்கள் வாழ்வில் அனுபவிக்க மனமற்றவர்களாய், மிகவும் சுலபமானதும், விசாலமானதுமான வழியையே தங்கள் வாழ்க்கையில் பின்பற்றுகிறார்கள்! அந்த வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் என்று வேதம் சொல்லுகிறது. நூற்றுக்கு நூறு உண்மையான காரியம்! நெருக்கமான பாதையைப் பின்பற்றுகிறவர்களோ வெகு சிலர் மாத்திரமே! தேவனைப் பின்பற்றிய உண்மையான

பக்தியுள்ள அத்தகைய மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் அதிகமான பாடுகளை அனுபவித்தார்கள்.

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

2 தீமோத்தேயு 3:12

நோவா என்ற மனிதன் நீதிமானாய் தேவனை பயத்தோடும் பக்தியோடும் பின்பற்றிவந்தான். ஆனால், அவன் தங்கியிருந்த இடத்தின் மக்களோ அதற்கு நேர் மாறாய், சற்றும் தேவ பயமின்றி, துணிகரமாய் பாவம் செய்து வந்தார்கள். விசாலமான வழியைப் பின்பற்றி தங்களையே பக்திமான்கள் என்று ஏமாற்றி வாழ்ந்தார்கள். தேவ கோபம் அவர்கள்மேல் எழும்பியது. தேவன் அவர்களை அழிக்க சித்தம் கொண்டார். நீதிமானாகிய நோவாவையும், அவன் குடும்பத்தையும் மட்டும் அந்த அழிவிலிருந்து காப்பாற்றி ஆசீர்வதிக்கத் தீர்மானித்தார். அதினிமித்தமாக அந்தக் கொடூரமான மக்களால் அவன் எவ்வளவாய் பரிகசிக்கப்பட்டான்! அதுமாத்திரமின்றி தேவ கட்டளையின்படி பேழையொன்றை அமைக்கவும், மற்ற எல்லா ஆயத்தங்களையும் செய்யவும், தனிமையில் எத்தனையாய் நெருக்கப்பட்டிருப்பான்! பெருவெள்ளத்தின் மத்தியில் தானும் தன் குடும்பமும் மாத்திரம் பேழையில் மிதந்து செல்லும்பொழுது, இனிவரும் நாட்களைக் குறித்து எத்தனைவிதமான எண்ணங்கள் அவனுக்குள் எழும்பி யிருக்கும்! ஆம், வழி நெருக்கமே!

நோவாவைப் போன்றே யோபுவும் தேவனால், "சன்மார்க்கன்" என்றும் "உத்தமன்" என்றும் நற்சாட்சி பெற்றான். பொல்லாங்கனாகிய பிசாசு அவன் அவ்விதம் நன்றாய் இருப்பதை சற்றும் விரும்பவில்லை.

> திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். யோவான் 10:10

என்ற வசனத்தின்படி, பிசாசு அவனை முற்றிலும் அழிக்கத் திட்டமிட்டான். கர்த்தரோ, "எந்த நிலையிலும் என் தாசன் என்னைப் பின்பற்றுவான்" என்று அவனிடம் சவால் விடுத்தார். பிசாசு அதை மாற்றுவதற்காக பல வேதனைகளை யோபுவின் வாழ்க்கையில் கொண்டுவந்து போட்டான். ஒரே நேரத்தில் அவனுடைய ஏழு குமாரர்களும், மூன்று குமாரத்திகளும் மாண்டனர். ஆடுமாடுகள், கழுதைகள், ஒட்டகங்கள் யாவற்றையும் ஒரே சமயத்தில் இழந்தான். அது மட்டுமா? சரீரத்தில் பயங்கரமான வியாதியின் கொடுமை! மனைவி முதற்கொண்டு யாவரின் அன்பையும் இழந்த தவிப்பு! என்ன நடக்கப்போகிறதோ என்ற அங்கலாய்ப்பு! ஆம், வழி நெருக்கமே!

தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலியா தேவனுக்காக வைராக்கியம் கொண்டான். "கர்த்தரே தெய்வம்" என்று நிரூபிக்க, கர்த்தருடைய வல்லமையினால் நிரம்பியவனாக, வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினான். அடுத்து நடந்தது என்ன? தேவனுடைய காரியங்களுக்கு விரோதியாய் இருந்த யேசபேல் என்ற பெண்மணி அவனை கொலை செய்வதாக பயமுறுத்தியபொழுது, அவளுக்கு பயந்து மிகுந்த சலிப்படைந்தவனாய் தன் வாழ்க்கையையே வெறுத்தான். "போதும், என் ஜீவனை எடுத்துக் கொள்ளும்" என்றே தேவனை நோக்கிப் பிரார்த்தித்தான். ஆம், வழி நெருக்கமே!

யாக்கோபின் குமாரர்கள் பன்னிரண்டு பேரில் ஒரே ஒரு மகன் மட்டும் தேவனுக்கு பயந்து நடந்தான். தேவனுக்குப்

பிரியமில்லாத உல்லாச வழியில் நடந்து, பொல்லாத காரியங்களைச் செய்த தன் சகோதரரின் காரியங்களை, பக்தி வைராக்கியத்தினிமித்தமாக தன் தகப்பனிடம் முறை யிட்டுவந்தான். அந்த இளைஞன்தான் யோசேப்பு! ஆனால், இந்த சிறிய பாலகனுக்கு இளம் வயதிலேயே எத்தனை பாடுகள், எவ்வளவு நெருக்கங்கள்! தான் அன்போடு நேசித்த தன் சகோதரரின் கொடுமையான உள்ளத்தின் மூலம் அந்நிய மனிதரிடம் விற்கப்பட்டான். அவர்களோடு எகிப்து தேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு பணி செய்து, அந்த இடத்தில் தொல்லைகள் ஏதுமின்றி ஆசீர் வாதமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில், அங்கும் அவன் எஜமானுடைய மனைவியினிமித்தம் எழும்பியது, வேண்டாத சஞ்சலங்கள்! பின் அதினிமித்தம் காரணமற்ற சிறையிருப்பு! ஆம், வழி நெருக்கமே!

தேவனுக்கென்று வைராக்கியமாய் வாழ்ந்தான் தானியேல்! ஆனால் அவன் கடந்துசென்ற பாதையும் நெருக்கமானதே! பொறாமை கொண்ட மக்கள் சிலர், ராஜாவின் கண்களில் அவனுக்கு தயை கிடைத்ததை விரும்பாமல் அவனை ஒழிப்பதற்குத் திட்டமிட்டனர்! அவன் சிங்கங்களின் வாயில் அகப்பட்டு பரிதாப மரண மடைய வேண்டும் என்பதுதான் அவர்களுடைய திட்டம்! இளம் வாலிபனான தானியேல் தன்னுடைய மனதில் எத்தனையாய் நெருக்கப்பட்டிருப்பான்! அவன் நண்பர் களுக்கெல்லாம் அவனே ஆறுதலாய் இருந்தான். ஆனால், அவனுக்கே பாடு வந்தது! ஆம், வழி நெருக்கமே!

இத்தகைய பாடுகளும், நெருக்கங்களும் நிறைந்த அனுபவங்கள் பழைய ஏற்பாட்டில் மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டிலும் காண்கிறோம்! ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றிய ஒவ்வொருவரும் இந்த நெருக்கமான பாதை யில்தான் கடந்து சென்றார்கள்.

இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் தன்னுடைய வாழ்க்கையின் முடிவில், ஏரோதியாளின் வஞ்சகச் செயலால், தலை வேறாகவும், உடல் வேறாகவும் பிரிக்கப்பட்ட பயங்கர மரணத்தை அவன் ருசிபார்க்க வேண்டியதாயிற்று! அதுபோன்றே தேவனுடைய அடியார்களாகிய பேதுரு, பவுல், ஸ்தேவான் போன்ற ஒவ்வொருவரும் இந்தப் பாடுகள் நிறைந்த பாதை வழியாகத்தான் கடந்து சென்றிருக்கிறார்கள். பவுல் தன்னுடைய அனுபவங்களை பல இடங்களில் விவரித்து எழுதியிருக்கிறார். "மிகுந்த கண்ணீரோடு நான் கர்த்தரை சேவித்தேன்". "நான் அனுதினமும் சாகிறேன்" என்றெல்லாம் அந்த ஊழியனின் வாயிலிருந்தே வார்த்தைகள் வெளிவந்தன! அவர் தம்முடைய உடன் ஊழியனாகிய தீமோத்தேயுவை நோக்கி:

> **நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. 2 தீமோத்தேயு 2:3**

என்றுதான் கூறினார். "சுகபோகத்தை அனுபவி" என்று அவர் சொல்லவில்லை. ஒரு சமயம் பொறாமைக்காரர்கள் அவரை சிறையிலிட்டனர். தொழுமரத்தில் கால்கள் மாட்டப்பட்டு, உடலெல்லாம் காயமுற்ற நிலையில் அந்த சிறையில் அவர் பாடுகளை அனுபவிக்க வேண்டியதாயிற்று. ஆம், வழி நெருக்கமே!

பேதுருவின் வாழ்க்கையிலும் பாடுகள் தான்! அவரும், பொல்லாத மக்களினிமித்தம் சிறையிலடைக்கப்பட்டார். கர்த்தருடைய நாமத்தினிமித்தம் பலவித துன்பங்கள், பாடுகள், அவர் வாழ்க்கையிலும் வந்தன! தேவனுடைய தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தவராய் புறஜாதிகளாகிய ஒரு கூட்டத்தாருக்கு சுவிசேஷத்தை அறிவித்து, அவர்களோடு தங்கியிருந்து பல ஆவிக்குரிய காரியங்களை அவர்களோடு பகிர்ந்துகொண்டு, மறுபடியுமாக எருசலேமுக்கு தன்னு

டைய சகஊழியர்களிடம் வந்தபொழுது அவர்கள் அவரிடம் பல கேள்விகளைக் கேட்டனர். ஆம், சகஊழியர்களாலும் காரியங்களை சரிவர விளங்கிக் கொள்ளாததினிமித்தம் மனவேதனை தரும் கடினமான, ஏளனமான பேச்சுகள் கேட்க வேண்டிய பரிதாப நிலை பேதுருவுக்கும் வந்தது! ஆம், வழி நெருக்கமே!

விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்து, ஆண்டவருடைய நாமத்தில் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்த, தேவ ஊழியனாகிய ஸ்தேவானும் அவ்விதமாகவே பொறாமைக்காரர்களால் கல்லெறியுண்டான். அவனுடைய நொறுங்குண்ட உள்ளத்தைக் கண்ணுற்ற ஆண்டவர், மகிமையின் தரிசனத்தை அவனுக்குக் காண்பித்து, அவனைத் தேற்றினார். அந்த நிலையிலேயே மரணமடைந்தான். ஆம், வழி நெருக்கமே!

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்....

சங்கீதம் 34:19

தேவாதி தேவனின் திருக்குமாரனாகிய இயேசுவின் வாழ்க்கை வரலாற்றினை கூர்ந்து நோக்குங்கால் அவரும் ஆரம்ப முதல் முடிவுவரை கடந்து சென்ற இடர்கள் தான் எத்தனையெத்தனை! அண்டசராசரத்திற்கும் அதிபதியாகிய அவர், ஐசுவரியம் யாவற்றிற்கும் அதிகாரி. ஆயினும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும் படிக்கு, நமது நிமித்தம் தரித்திரராக ஏழைக் குடும்பத்தில் புதல்வனாக அவதரித்தார் (2 கொரிந்தியர் 8:9). மாட்டுக் கொட்டிலில் மூடக்கூட சரியான துணியின்றி தச்சனின் மகனாகப் பிறந்தார். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற அவர் வழிகளைப் பின்பற்றிய இயேசு கிறிஸ்துவை சொந்த சகோதரர்களே விசுவாசிக்காமல் கடின வார்த்தைகளை அள்ளி வீசினர். யாவற்றையும் பொறுமையுடன் சகித்தார். பிசாசின் சோதனை, தேவனுடைய ஊழியர்கள் என்று

சொல்லியும் நயவஞ்சகர்களாக வாழ்ந்த பொறாமைக் காரர்களால் பாடுகள், கடினமான சூழ்நிலையில் கைவிடப் பட்ட தனிமை நிலை, தன்னுடன் கூட இருந்த சொந்த சீஷனால் காட்டிக்கொடுக்கப்பட்ட கொடுமை, தன்மூலம் நன்மை பெற்ற மக்களே தனக்கு விரோதமாக எதிர்த்து நிற்கும் போராட்டம்! அவர் "தேவ குமாரன்" என்பதை அறியாமல் அவரை துச்சமாய் மதித்து நடத்தின போர்ச் சேவகரின் பொல்லாங்குகள்! இவை போன்ற பல பொல்லாங்குகள் மத்தியிலேயே தன் வாழ்நாள் முழுவதும் கடந்து சென்றார்.

...ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும் படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.

1 பேதுரு 2:21

...மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களி லுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. **எபேசியர் 6:12**

பாடு இல்லாமல் பரலோகம் இல்லை; வரங்கள் இல்லை; வல்லமை இல்லை. பாடுகள் எத்தனைக்கதிகமாக நம் வாழ்வில் அனுபவிக்கிறோமோ, அத்தனைக்கதிகமாய் தேவனுடைய சந்நிதானத்தில் பிரகாசிக்கும் காலம், இவ்வுலகிலும் மறுஉலகிலும் நிச்சயமாய் நமக்கு வரும்.

"...நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள், என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியி னாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக

விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" *(1 பேதுரு 1:6,7)*. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்ச காலம் பாடநுபவிக்கிற உங்களை சீர்ப்படுத்தி, ஸ்திரப் படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக *(1 பேதுரு 5:10)*.

...அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

மத்தேயு 6:34

என்று இயேசு கூறியுள்ளார். ஒவ்வொரு நாளிலும் வரும் பல்வேறுபட்ட நெருக்கமான முட்களை பெரிதுபடுத்தி, வாழ்வில் சஞ்சலத்தையும், சமாதானமின்மையையும் வரவழைத்துக்கொள்வது, ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் மிகுந்த பலவீனத்தையே அளிக்கும். அதற்கு மாறாக நம் முன்மாதிரியாகிய இயேசு சென்ற இடுக்கமான பாதையில் அவரைப் பின்பற்றி ஜெயம் பெற்றவர்களாக ஜீவனுக்கு நேராகக் கடந்து செல்வோம்.

சிறுமைப்பட்ட, பெருங்காற்றில் அடிப்பட்ட, தேற்றர வற்ற என் சகோதரியே! மலைகள் விலகினாலும் பயப் படாதே! பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் அஞ்சாதே! உன்னைப் போன்றே பாடுகளின் வழியே கடந்துசென்ற கர்த்தர் உன்மேல் மனதுருகுவார். அவர் கிருபை உன்னை விட்டு விலகாது. அவர்தம் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராது! முட்களைக் கண்டு முறுமுறுக்காமல், சாரோனின் ரோஜாவின் மீதே உன் கண்களைப் பதித்து, பாக்கியங்களை அனுபவி!

3 முள்ளில் ரோஜா!

ரோஜாச் செடியை நாம் கூர்ந்து நோக்குவோமானால் மலர் வரும் பாகத்தைத் தவிர ஏனைய பாகங்கள் காண்பதற்கு ஏதும் அழகு நிறைந்ததாக இல்லை. வெறும் முட்களையும், இலைகளையும் மாத்திரமே காண்கிறோம். ஆனால், அவைகளுக்கு மேலே பூத்துக் குலுங்கும் அழகு வாய்ந்த ரோஜா மலரோ, அந்த அழகற்ற செடிக்கு ஒப்புநிகரற்ற அழகினை அள்ளி வீசுகிறது. அண்ட சராசரத்தையும் படைத்த ஆண்டவரின் திருக்கரங்களே இந்த அற்புதப் படைப்பிற்குக் காரணம். அவருடைய மகிமைதான் எத்தனை அற்புதமானது! இருளிலிருந்து வெளிச்சத்தை அவர் பிரகாசிக்கச் செய்தார் (2 கொரிந்தியர் *4:6*). ஆதியிலே பூமியெங்கும் இருள் இருந்தது. தேவாதி தேவன் "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று அதிகாரத் துடன் கட்டளையிட்டார். இருள் சூழ்ந்திருந்த பூமியிலிருந்து உடன்தானே வெளிச்சம் உண்டாயிற்று (ஆதியாகமம் *1:2,3*). அதுமட்டுமா! "இல்லாதவைகளை இருக்கிறவை களைப்போல அழைக்கிறவர்" (ரோமர் 4:17) என்ற பெயரையும் உடையவர் அவர்.

எலிசபெத்து என்ற பெண்மணி தன் கணவனுடன் சேர்ந்து தேவனுடைய ஊழியத்தை பயத்துடனும் பக்தி யுடனும் செய்து வந்தாள். அவள் கணவனும் நீதிமானாய், தேவனுக்குப் பயந்தவனாய் இருந்தான். ஆனால், அவர் களுக்கு ஒரு தேவை இருந்தது. எலிசபெத்து குழந்தையற்ற மலடியாய், குழந்தை இனி பிறக்காது என்ற நிலையில்

மிகவும் வயது சென்றவளாய் இருந்தாள். அப்படிப்பட்ட அவளுடைய வாழ்க்கையில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது! ஒருநாள் தேவன் சகரியாவை நோக்கி, "மலடியாயிருக்கிற உன் மனைவிக்கு ஒரு குமாரன் பிறக்கப் போகிறான்" என்ற அற்புத செய்தியை அறிவித்தார். இதை எப்படி நம்புவது? ஆம், அதுதான் தேவனின் கரம்! அவரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (எரேமியா 32:17,27). தம்மை நம்புகிற தம் அடியார்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கபண்ணுவதில் அலாதி பிரியம் கொண்டவர்!

> **தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது... 2 நாளாகமம் 16:9**

அவர் வாக்கருளியபடியே, ஏற்ற சமயத்தில், வயது சென்ற எலிசபெத்து "யோவான்" என்ற அருமைப் புதல்வனைப் பெற்றெடுத்து, பேரானந்தம் கொண்டாள்.

முட்களிடையே காணப்படும் ரோஜா மலர் போன்று இந்த உலகத்தில் இருளைப் போன்ற பிரச்சினைகள் நம்மை நெருக்குகையில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே ரோஜா மலர் போன்று நமக்கு வாழ்வாகவும், ஒளியாகவும் இடைபடுகிறார். இதேவிதமாக தங்கள் வாழ்வில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், தெய்வீக அன்பையும் அனுபவித்த பெண்கள் அநேகருடைய வாழ்க்கை வரலாற்றினை வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

"ஆகார்" என்ற பெண் தன் வாழ்க்கையில் அதிகமான சஞ்சலங்களை அனுபவித்தாள். ஒரு சமயம் அவளுடைய குழந்தை மரித்துப் போகும் நிலைமையில் தவித்தது. அவளிடம் அன்பு பாராட்டவோ, ஆறுதல் சொல்லவோ எவரும் அருகிலில்லை. தாகத்தினால் நாவறண்டு, குழந்தை

எந்த நிமிடமும் மரித்துவிடும் என்ற நிலையில் தாயின் உள்ளம் தவித்தது. அந்த மரணத்தின் கோலத்தை காண சகிக்காமல், அந்த தாய் தன் முகத்தை வேறு புறமாகத் திருப்பி கண்ணீர் விட்டுக் கதறினாள். வனாந்தரமான இடத்தில் யார் அவளுக்கு உதவ முன் வருவார்கள்? சுற்றிலும் இருள் சூழ்ந்த நிலை! நம்பிக்கைக்கு இடமில்லாத நேரம்! அவளுடைய வாழ்க்கையே இடிந்து விழுந்தது போன்று கதறினாள். அந்த சமயத்தில் தான் எங்கிருந்தோ ஓர் குரல் ஒலித்தது. அந்தக் குரலிலிருந்த தெய்வீக அன்பு தான் எத்தனை அருமையானது! அந்தக் குரல், "ஆகாரே, பயப்படாதே! நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக்கொண்டு போ, அவனை நான் பெரிய ஜாதியாக்குவேன்" (ஆதியாகமம் 21:17,18) என்று ஒலித்தது. எத்தனை ஆச்சரியம்! அவ்விதமாய் அவளை ஆறுதல் படுத்திய அந்தக் குரல் அதோடு நின்றுவிட்டதா? "தண்ணீர் இல்லையே" என்று கலங்கின அவளுடைய கண்கள் முன்பதாக தண்ணீர் நிறைந்த ஒரு துரவு காணப்பட்டது. ஓடோடிச் சென்றாள் தாய்! துருத்தியில் எடுத்து பிள்ளைக்கு தாகம் தீரக் கொடுத்தாள். பிள்ளையின் உயிர் திரும்ப வந்தது! தாயின் முகத்தில் தான் எத்தனை சந்தோஷம்! மறுவாழ்வு பெற்ற மகனை முத்தமிட்டு, அள்ளி அணைத்து ஆனந்தக் கூத்தாடியிருப்பாள்.

"இது நடக்குமா?" என்று யோசிக்கிறீர்களா? ஆகாருக்கு அவ்விதமாய் ஏற்ற சமயத்தில் உதவிய தேவன் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்! அவருடைய அன்பின் கரம் ஆகாருக்கு மாத்திரமல்ல, அவருடைய பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும்கூட உரியது! கண்ணீரில், தனிமையில் வாடும் சகோதரியே! "என் குழந்தை பிழைக்குமா? என் குழந்தைக்கு வாழ்வு உண்டா?" என்று கலங்கும் சகோதரியே! உன்னையும் இந்த தேவனுடைய கண்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றன. உனக்கும் அவர் நிச்சயம் உதவி

செய்வார். "மரிக்கும்" நிலையிலிருந்த அந்தக் குழந்தையை தேவன் ஆசீர்வதித்தார். அவன் வளர்ந்து பெரியவனாகி, வில்வித்தையில் வல்லவனானான். ஏற்ற சமயத்தில் திருமணமாகி, ஓர் பெரிய ஜாதியாக தேவனுடைய ஆசீர்வாதத்தினால் மாற்றப்பட்டான். ஆகாருடைய வாழ்க்கையிலிருந்த முட்கள் மாறி ரோஜா மலர் மலர்ந்தது.

"எஸ்தர்" என்று ஒரு அனாதைப் பெண் இருந்தாள். அனாதைப் பெண் என்றால், அந்த வாழ்வு இருள் சூழ்ந்தது தானே! தேவனுடைய கிருபையால் அவளுடைய உறவினன் மொர்தேகாய் அவளை அன்போடு, தன் மகள்போல் வளர்த்து வந்தான். அது மட்டுமல்ல, தேவ தயவு அவள் வாழ்க்கையில் இருந்தபடியால், எதிர்பாராத விதமாக அகாஸ்வேரு ராஜாவை மணம் முடித்து, அரசியாகும் பாக்கியமும் அவளுக்குக் கிடைத்தது! "அனாதைப்" பெண் அரசியாகிவிட்டாள். இனி அவள் வாழ்வில் சந்தோஷம் தானே! அவளுக்கு என்ன குறை இருக்கப் போகிறது? என்று நினைக்கிறீர்களோ! அதுதான் இல்லை.

அவளும், அவளுடைய வளர்ப்புத் தந்தையான மொர்தெகாயும் யூதகுலத்தைச் சார்ந்தவர்கள்! இந்த யூதகுலத்தை அழிப்பதற்காக "ஆமான்" என்ற ஒரு பொல்லாத மனிதன் தந்திரமாக ராஜாவின் உத்தரவைப் பெற்று, ஒரு நாளையும் குறித்தான். அவள் அரசியாக இருந்தபடியால், தன் குலத்திற்காக ராஜாவை நோக்கி அவளே போராட வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலை அவளுக்கு ஏற்பட்டது. எத்தனை பொறுப்பான ஒரு நிலைமை! மொர்தெகாயோ, "உன்னையன்றி வேறு யாராலும் இந்த நிலைமையை மாற்றியமைக்க முடியாது. ஒருவேளை நீ இதற்காகத்தான் அரசியாகும் நிலைமையை ஆண்டவர் உனக்குக் கொடுத்திருக்கலாம்" என்று திட்டமாகக் கூறிவிட்டார்.

சற்று நேரம் திகைத்த அவள் தீவிரமாக ஒரு முடிவெடுத்தாள். “இந்தக் காரியத்தை என்னால் செய்ய முடியாது. இது என் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு காரியம். விசேஷமாக ராஜாவுடைய அழைப்பு இல்லாமல் அவரிடம் நான் போவேனானால், ஒருவேளை அவர் என் மீது கோபம் அடைந்து என்னை மரணத்திற்கும் ஒப்புக்கொடுக்கலாம். எனவே, எனக்கு ஒரே ஒரு வழி உண்டு. அதுதான் தேவனுடைய திருப்பாதம்! அவர் பாதம் நிச்சயமாக என்னை வழிநடத்தும் என்று மனதில் நிர்ணயித்தவளாய், தன் தோழியரோடு மூன்று நாள் அல்லும் பகலும் யாதொரு ஆகாரமும் அருந்தாமல், தண்ணீரும் குடிக்காமல் தேவனுடைய பாதத்தில், அவருடைய வழிநடத்துதலுக்காய் காத்திருந்தாள். அவளுடைய விசுவாசத்தின்படி தேவ ஞானம், தேவ கிருபை அவளை நிறைத்தது! அஞ்சா நெஞ்சத்துடன் வீராங்கனை போன்று வீறிட்டு எழுந்தாள். அரசனை நோக்கிச் சென்றாள்.

...அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். **சங்கீதம் 1:3**

என்ற வசனத்தின்படி, அவள் எடுத்த பிரயாசங்கள் ஒவ்வொன்றையும் கர்த்தர் அசீர்வாதமாக மாற்றித்தந்தார்! யூத குலத்தை அழிக்க திட்டமிட்ட ஆமானும், அவன் குடும்பமும் அழிந்துபோகும்படியாய் கர்த்தர் அவளோடிருந்து, காரியத்தை வாய்க்கச் செய்தார்.

அது மாத்திரமின்றி, தேவாதி தேவனின் வழிநடத்துதலினிமித்தமாக யூதருக்கு நியமிக்கப்பட்டிருந்த அழிவின் நாள், கொண்டாட்டமான நாளாக மாறியது! அவர்களுக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று (எஸ்தர் 8:16). எந்த யூதரை அழிக்க திட்டமிடப்பட்டதோ, அந்த யூதரைக் கண்டு பயப்படும்படியாக கர்த்தர் யாவற்றையும் மாற்றினார். எஸ்தர் வாழ்க்கையில்

இருந்த முட்கள், தேவ தயவால் ரோஜா மலராக, இருளில் ஒளியாக மாறியது!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் ஊழியத்தை நிறைவேற்றி வரும் நாட்களில் ஒரு நாள் சமாரியா என்ற பட்டணத்திற்கு சென்று அங்கிருந்த ஒரு கிணற்றண்டையில் உட்கார்ந்தார். தண்ணீர் இறைக்க வந்தாள் ஒரு பெண். அவளுடைய வாழ்க்கை, பாவம் நிறைந்ததாயிருந்தது. பாவத்தைத் தண்ணீரைப் போல் பருகின அவளிடத்தில் பட்சமாகப் பேசினார் ஆண்டவர்! அவளுடைய அசுத்த மான வாழ்க்கையை முற்றிலுமாய் அறிந்த தேவ குமார னாகிய அவர், யாதொன்றும் அறியாதவர் போன்று, அவளோடு அளவளாவினார். "நீர் யார்?" என்று அவள் ஆச்சரியம் மிகுந்தவளாய் கேட்டபோது, "உன்னுடனே பேசுகிற நானே மேசியா" என்று அவளுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அவள் மிகுந்த ஆச்சரியமடைந்தாள். தன் குடத்தை அங்கேயே வைத்துவிட்டு, இந்த அற்புதத்தை தன்னோடு மறைத்துக்கொள்ளாமல் ஊருக்குள்ளே ஓடோடிச் சென்றாள். எல்லா மனிதரையும் நோக்கி சத்தமிட்டு, "இங்கே யாவரும் வாருங்கள், வாருங்கள்! நான் தண்ணீர் இறைக்கப் போன இடத்தில் ஒரு மனிதர் இருக்கிறார்; நான் சொல்லாமலேயே அவர் என்னுடைய வாழ்க்கை வரலாற்றையெல்லாம் எனக்கு வெளிப்படுத்தி னார். அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்து தானோ என்று பாருங்கள்" என்று கூச்சலிட்டாள்.

ஜனங்கள் யாவரும் ஆச்சரியமடைந்தவர்களாக அவள் பின்பாக ஓடோடி வந்தார்கள். அவருடைய வார்த்தைகளை கேட்டு, அவர்களில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர் களானார்கள். தங்களோடு தங்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள். இரண்டு நாள் அவர்களோடு தங்கினார். தெய்வீக உபதேசங்களை அவர்களோடு

பகிர்ந்து கொண்டார். "இவரே மெய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர்" என்று யாவரும் அறிக்கையிட்டார்கள். இருள் நிறைந்த வாழ்க்கையில், காலத்தைக் கடத்திக் கொண்டிருந்த அந்தப் பெண், இயேசுவாகிய ஒளியினை சந்தித்த மாத்திரத்தில், தன்னுடைய வாழ்வில் மாத்திர மல்ல, தன் ஊரார் அனைவரின் வாழ்விலும் ஒளியினை பெற்றுத் தந்தாள். இயேசுவின் சந்திப்பினால் பாவமாகிய முட்கள் நிறைந்த அவளுடைய வாழ்வு பரிசுத்தமாகிய ரோஜா மலராக மலர்ந்தது!

மற்றொரு சமயம், ஆண்டவர் இயேசு தம் ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கையில் ஒரு பெரிய கூட்டம் அவரைத் தேடி வந்து சூழந்துகொண்டது (மாற்கு *5:24*). திடீரென்று இயேசு, "என் வஸ்திரங்களைத் தொட்டது யார்?" என்று கேட்டார். சீஷர்களோ, "இத்தனை திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்களே, இவர்களில் உம்மைத் தொட்டது யார் என்று கண்டுபிடிக்க முடியுமா?" என்று கேட்டார்கள். ஆனால், அவரோ, தேவாதி தேவனின் திருச்சுதன் அல்லவா! சுற்றுமுற்றும் பார்த்தார். அந்தப் பார்வையில் காணப்பட்ட அன்பு அவருடைய வஸ்திரத்தை தொட்ட அந்தப் பெண்மணியை இழுத்தது. "தன் காரியங் களை அவர் நிச்சயம் அறிந்திருக்கிறார்" என்று உணர்ந்து, பயத்துடன் அவர் முன்பாக வந்து தாழவிழுந்து, உண்மை யையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.

அவள் அப்படி என்ன கூறினாள்? "ஐயா, பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடு என்ற நோயினால் வேதனைப் பட்டு தவித்த ஒரு பெண் நான்! வைத்தியர்கள் பலரிடம் சென்று பல்வேறு மருந்துகளை அருந்தினேன். எனக்கு உண்டான எல்லாப் பணத்தையும் செலவழித்தேன். ஆனால் கொஞ்சமும் குணம் பெறவில்லை. வியாதியோ என்னை வேதனைப்படுத்தினது. கண்ணீர் நிறைந்த

வாழ்வில் தான் என் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தேன். அப்படிப்பட்ட சமயத்தில்தான் உம்முடைய வருகையைக் குறித்து கேள்விப்பட்டேன். ஓடோடி வந்து, எப்படியாவது உம்முடைய வஸ்திரத்தின் ஓரத்தையாவது தொட்டுவிட வேண்டும் என்று கூட்டத்தினூடே நெருக்கிக் கொண்டு முன்வந்து சேர்ந்தேன். நான் விரும்பியபடியே, உம்முடைய வஸ்திரத்தின் ஓரத்தை மட்டும் தொட்டேன். அவ்வளவு தான்! பன்னிரண்டு வருஷமாய் என்னைத் தாக்கிவந்த இந்த உதிரத்தின் ஊறல் வியாதி அந்த நிமிஷத்திலேயே என்னைவிட்டு முற்றிலுமாய் மறைந்தது! அந்த வேதனை நீங்கி நான் ஆரோக்கியம் அடைந்ததை என் சரீரத்தில் உணர்ந்தேன்" என்றாள். இயேசுவின் உள்ளம் அவளைப் பார்த்து பரிதபித்தது! "மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு" என்றார். முட்கள் நிறைந்த அவள் வாழ்க்கை இயேசுவின் வல்லமை நிறைந்த தொடுதலினால் ரோஜா மலராக மலர்ந்தது (மாற்கு 5:25-34).

மற்றொரு சமயம் சீமோன் என்ற மனிதருடைய வீட்டிற்கு விருந்து சாப்பிட இயேசுவும், அவருடைய சீஷர்களும் வந்திருந்தபோது, எங்கிருந்தோ ஓடோடி வந்தாள் ஒரு பெண். அவளுடைய கண்கள் கண்ணீரினால் நிறைந்திருந்தது. வேதனையின் உச்ச நிலையிலே தன் தலை மயிரெல்லாம் அவிழ்ந்த நிலையில் ஓடிவந்து, அவர் பாதத்தில் தன் தலையை வைத்து, தன் கண்ணீரினால் அவர் அன்பின் பாதங்களை நனைத்தாள். தன் மனவேதனைகளை, கவலைகளை, பாரங்களையெல்லாம் அவருடைய பாதத்தில் கண்ணீரின் வாயிலாக கொட்டினாள். நனைந்த அவருடைய பாதங்களை, "ஸ்திரீகளுக்கு மகிமை"யான தன்னுடைய தலைமயிரினால் சுத்தமாக துடைத்தாள். அவளுடைய உள்ளத்தின் கலக்கங்களும், வேதனைகளும், அன்பின் தகப்பனாகிய ஆண்டவர் இயேசுவின் மனதிற்கு வெளிப்பட்டது.

அவளுடைய உள்ளத்தின் பாரத்தை அறியாத கடின உள்ளம் கொண்ட அவருடைய சீஷர்களும், அவரை அழைத்த சீமோனும், "எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றினாற்போன்று" என்ற பழமொழிக்கேற்ப, தாங்கள் நீதிமான்கள் என்ற எண்ணத்தினால் அவளை அலட்சியமாய் கண்டித்தனர். அவள் அன்போடு ஆண்டவரை அபிஷேகிப்பதற்கென வாங்கி வந்த விலையேறபெற்ற நளததைலத்தை விற்று ஏழைகளுக்குக் கொடுக்கலாமே என்று பரிகசித்தனர். யாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த ஆண்டவரோ, "இவளை விட்டுவிடுங்கள். தொந்தரவுபடுத்தாதிருங்கள். என்னிடத்தில் இவள் தன்னால் இயன்ற நற்கிரியையைச் செய்திருக்கிறாள். இந்த சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மாற்கு *14:3-9*). ஆண்டவரின் அருள் அவள் மீது நிச்சயம் இருந்திருக்கும் என்பதை சொல்லவும் வேண்டுமா! மனக்கிலேசமாகிய முட்கள் நிறைந்த அவள் வாழ்வு, தெய்வீக ஆறுதலும், சந்தோஷமும் நிறைந்த ரோஜா மலராக மாறியது!

ஏழு பிசாசு பிடித்த மகதலேனா மாரியாள் ஆண்டவரின் அன்புக் கரங்களினால், அந்தப் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றாள். தனக்கு தெய்வீக வாழ்வளித்த தேவ குமாரனின் திருவடியை உறுதியாக பற்றிக் கொண்டாள். அவள் இனி எஞ்சிய வாழ்வெல்லாம் இயேசுவுக்காகவே வாழ்வேன் என்று தீர்மானித்தவளாய், அவருக்கு ஊழியம் செய்து வந்தாள் (லூக்கா *8:2,3*). இயேசுவை பொறாமைக்காரர்கள் சிலுவையில் அடித்து, அவர் மரணமடைந்த போது, அவளுடைய உள்ளம் சுக்குநூறாக நொறுங்கியது. அவள் வாழ்வே இருண்டது போன்று கண்ணீர் நிறைந்ததாய் மாறியது. மூன்றாம் நாளில் அதிகாலையில் இருட்டோடே எழுந்தாள். ஓடோடிச் சென்றாள் கல்லறையை

நோக்கி! ஆண்டவருடைய அன்பான சீஷர்கள் பேதுருவும், யோவானும்கூட அவளுக்கு பின்னர், தாமதித்தே கல்லறைக்கு வந்தனர். அங்கே ஒரு அதிசயம் காத்திருந்தது. அடைக்கபட்டிருந்த கல் ஏற்கனவே தள்ளப்பட்டிருந்தது. கல்லறைக்குள்ளே வைக்கப்பட்ட இயேசுவின் சரீரம் காணவில்லை! சீஷர்கள் திரும்பிப் போய்விட்டார்கள். ஆனால், மரியாளோ கல்லறையை விட்டு அகலவேயில்லை. அங்கேயே நின்று அழுது கொண்டிருந்தாள்.

1974-ஆம் ஆண்டு நானும் சகோதரர் தினகரனும் அந்த இடத்தை நேரில் கண்டோம். அந்த இடத்திற்கு பொறுப்பாளராக இருந்த ஒரு தேவ மனிதர் இந்தக் காட்சியை, அங்கு வரும் மக்களிடம் விளக்கிக் கொண்டிருந்தார். என் கண்கள் முன்பதாக இன்று தான் நடந்தது போன்று அப்படியாக காட்சியளித்தது! தேவனுடைய பிரசன்னம் என்னை நிறைக்க, கண்ணீரை அடக்கிக் கொள்ள முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதேன். சற்று நேரம் கழித்து கண்களைத் துடைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்த போது, வேறு சிலரும் என்னைப்போன்று கண்ணீர்விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

அப்படியானால் அந்த இடத்தில் மரியாள் எவ்வளவாய் அழுதிருப்பாள். ஆண்டவர் அந்த அன்பைக் கண்டார். நொறுங்கிய அவளுடைய உள்ளத்தை மகிழ்ச்சியடையும்படியாய் செய்து, தம்மை அவளுக்கு வெளிப்படுத்தினார்! "மரியாளே" என்று அன்போடு அழைத்தார். அவருடைய சத்தத்தைக் கேட்டு அதிர்ச்சியடைந்தாள் மரியாள்! மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்த ஆண்டவரை முதன் முதல் தரிசிக்கும் பாக்கியம் இந்தப் பெண்மணிக்குத்தான் கிடைத்தது! பாருங்கள், கண்ணீர் நிறைந்த அந்த உள்ளம் கர்த்தரின் பிரசன்னத்தால் களிகூர்ந்து மகிழ்ந்தது.

இதுபோன்று ஏராளமான பெண்களுடைய வாழ்க்கையின் கண்ணிரை கர்த்தருடைய கரம் மாற்றி அமைத்தது என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

என் வாழ்க்கையும் வனாந்திரம் போன்று இருந்தது. அதை ஆண்டவர் நீரூற்றாக மாற்றினார். என் பெற்றோருக்கு நான் கடைசி பெண்! எனக்கு முன்பாக இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு. அவர்கள் மூன்றுபேரும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, வேதம் வாசித்து, ஜெபம் செய்து, தாழ்மையோடு நடந்துகொள்வார்கள். ஆகவே என் தாய்க்கு அவர்கள்மேல் அலாதி பிரியம்! நானோ கடைசி பிள்ளையாக, செல்ல மகளாக இருந்தபடியால், என் தாய்க்கு கீழ்ப்படியாமல் அநேக சமயங்களில் நடந்து கொள்வேன். "குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பாக இருக்கிறாயே" என்று என்னை குறித்து என் தாய் கோபப்படுவார்கள். உலகத்தில் மனிதர் அப்படித்தான் பட்டங்கள் கொடுக்கிறார்கள். ஆனால், கர்த்தரோ, இந்தக் கோடாரிக் காம்பை எப்படி ஒளிவீசும் பட்டயமாக மாற்றலாம் என்பதை அறிந்திருந் தார். "என்னால் செய்ய முடியாத காரியம் ஒன்று உண்டோ?" என்று கேள்வி விடுக்கும் அவரால் ஆகாதது தான் என்ன?

கோடரிக் காம்பாக இருந்த என் வாழ்வில் கிறிஸ்துவுக்கும் எனக்கும் யாதொரு தொடர்பும் இல்லாதிருந்தது. ஞாயிறு அன்று ஆராதனைக்கு செல்வேன். ஞாயிறு பாடசாலைக்கு செல்வேன். என் தாயின் கண்டிப்பினிமித்தமாக அவைகளில் பங்கெடுப்பேனே தவிர, கிறிஸ்துவின் மேல் உண்மை அன்பு கொண்டவளாய் அப்படி செய்யவில்லை. உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் தான் என் வாழ்வின் நோக்கங்கள்! கிறிஸ்துவை உடைய கிறிஸ்தவளாக வாழாமல் பெயரளவில் மாத்திரம் கிறிஸ்தவளாக வாழ்ந்து வந்தேன்.

கல்வியினிமித்தம் பெற்றோரைவிட்டு பிரிந்து தூரமாய் செல்ல வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது தான் உலகத்தின் பாடுகள், கவலைகள், என் உள்ளத்தை முதல் முறையாக நிறைக்க ஆரம்பித்தது. தனிமை உணர்வு என் நெஞ்சைப் பிளந்தது! மற்றவர்களைப்போல் புதிய நண்பர் களுடன் உல்லாசமாய் ஓடித் திரிவதில் என் மனம் ஈடுபட வில்லை. தனிமையில் அறையில் அமர்ந்து கண்ணீர் வடித்து

கலங்கிக் கொண்டிருந்தேன். அந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தாற் போன்று, ஆண்டவர் அந்த அறையினுள் பிரவேசித்தார். யாரோ என் அறையில் பிரவேசித்தது போன்ற ஒரு பிரம்மை எனக்கு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, "மகளே! ஏன் அழுகிறாய்! மேஜையில் இருக்கிற உன் வேத புத்தகத்தை எடுத்து வாசி" என்று ஒரு குரல் ஒலிப்பது போல தெரிந்தது. வேதபுத்தகத்தை அம்மாவின் ஆணையின்படி அதிகாலையில் கடனே என்று வாசிப்பது தான் அதுவரையில் எனது வழக்கம். ஆனால் அன்று நடுங்கிய கரங்களுடன் வேதபுத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். எதை வாசிப்பது? எல்லாமே எனக்குப் புதிராகத் தெரிந்தது. "சாமுவேல்" என்ற தேவ தாசனின் சரித்திரத்தை வாசிக்க முற்பட்டேன்.

...தேவனுடைய வசனம் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. **எபிரெயர் 4:12; யோவான் 6:63**

என்ற வேத வாக்கின்படி, முதல் முறையாக தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் என்னோடு பேசினார். என்னையுமறியாமல் ஆண்டவரோடு நான் இணைந்து கொண்டேன். அவர்மீது ஓர் அலாதிப் பிரியம் என்னுள் எழ ஆரம்பித்தது.

இன்றைய நாட்களில் உலகப் பிரகாரமான நண்பர்களின் நட்புக்காக வாலிப உள்ளங்கள் ஏங்குகின்றன. ஆனால், எத்தனை விரைவில் வேறு ஒருவரின் நட்பு கிட்டியதும், பழைய நட்பை மறந்து விடுகின்றனர். தெய்வத்தின் அன்போ, தேனினும் இனிமையானது. என்றென்றும் மாறாது.

என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்...
உன்னதப்பாட்டு **2:16**

என்ற வசனம் என்னில் அன்று முதல் உண்மையாயிற்று!

எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது
1 யோவான் 1:3

என்ற ஓர் தெய்வீக ஐக்கியம் எனக்குள்ளேயே ஏற்பட்டத்தை நான் உணர்ந்தேன். அன்றிலிருந்து, ஆண்டவரோடு எந்த நேரமும் பேசிக்கொண்டே இருப்பதில் அலாதி ஆனந்தம் கொண்டேன். என் தனிமை எங்கே போயிற்று என்று தெரிய வில்லை. அதுவரை அனுபவித்திராத தெய்வீக சந்தோஷம் என் உள்ளத்தை நிறைத்தது. உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றங்க ளோடு, என் தனிப்பட்ட வாழ்விலும் அநேக அதிசயங்களை நான் கண்டேன். நான் செய்வதெல்லாம் வாய்க்கும்படி தேவன் எனக்கு அருள்புரிந்தார். என் உடன் மாணவிகள், "நட்சத்திரம் போல நீ பிரகாசிக்கிறாய்" என்று சாட்சி சொல்லும் அளவிற்கு கர்த்தர் என் கல்வி ஞானத்தை ஆசிர்வதித்தார். அறியாமை, பேதமை, தனிமை போன்ற முட்கள் யாவும் என் வாழ்வைவிட்டு அகன்றது. இயேசுவாகிய ரோஜா மலர் மலர்ந்து என் வாழ்வை மாற்றியது.

அன்பு சகோதரிகளே! இந்த உலகத்தின் பாடுகளில் மனம் சோர்ந்து போகாதிருங்கள். எத்தனை அதிகமான பாடுகளினூடே கடந்து செல்கிறீர்களோ அத்தனை அதிக மான ஆனந்தத்தை அனுபவிக்க ஆண்டவர் அருள்புரிவார். என் வாழ்வு முழுவதும் முட்கள் தானோ, என்ற கவலை உங்களுக்கு வேண்டவே வேண்டாம். இந்த அத்தியாயத் தில் நாம் கண்ட சகோதரிகள் பலரும் மற்றும் நானும், இப்படிப்பட்ட பலவிதமான பாடுகளினூடே கண்ணீ ரோடே கடந்து சென்ற பொழுதிலும், கர்த்தராகிய தேவன் அந்த முட்களை அகற்றி, ரோஜா மலரைப் போன்று மணம்வீசும் வாழ்க்கை வாழ அருள்புரிந்தார். உங்கள் வாழ்விலும் முட்களை போன்று வரும் சகல பிரச்சினை களையும் அகற்றி, அழகிய ரோஜாவை போன்று பற்பல நன்மைகளினால் நிரப்புவார்!

4

நிலைகுலைந்த ரோஜா!

ரோஜா மலரிலிருந்து 'அத்தர்' போன்ற வாசனை தைலங்களை எடுக்கிறார்கள். அவ்வாறு அவைகளை தயாரிப்பதற்கு, அந்த மென்மையான மலரை கசக்கிப் பிழிந்துதான் சேகரிக்கிறார்கள். ஐயோ, அந்த ரோஜா மலரின் ஒப்பற்ற அழகு ஒரே நிமிடத்தில் குலைந்து போகிறது. அதுபோன்றே பல்வேறு வகைப்பட்ட பாடுகள், துன்பங்கள், வேதனைகள் இவைகளினூடாக கடந்து செல்கையில், நாமும் நிலை தடுமாறுகிறோம். கசக்கப் பட்ட ரோஜாவிலிருந்து அத்தர் புறப்படுவது போன்று, வாழ்க்கையின் துன்பங்களால் புடைக்கப்பட்டால்தான் நாமும் நறுமணம் வீசக்கூடும்! அது மட்டுமின்றி,

> **உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்;... நீதிமொழிகள் 28:20**

என்ற வசனத்தின்படி, நாம் செய்கின்ற எல்லாக் காரியங் களிலும், உண்மையோடு, உத்தமத்தோடு, தேவனுக்குப் பயந்து இடைபடும்பொழுது, அவ்வித வாழ்க்கை கடின மானதாக இருந்தாலும், முடிவு மணம் வீசும் அத்தரைப் போன்று மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கும். என் அனுபவத்தில் நான் கண்ட உண்மை இது! எந்த வேலை எனக்குக் கொடுக்கப்பட்டாலும், அல்லது நானாக செய்ய முயற்சி எடுத்தாலும், என்னால் இயன்றவரை உண்மையோ டும், கடினமாகவும் உழைத்து, அதில் பலன் காணவேண்டும் என்று முயல்வேன். அவைகளின் முடிவில் நான் அனுபவித் திருக்கிற ஆசீர்வாதங்கள் எத்தனை தெரியுமா?

தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான். **நீதிமொழிகள் 22:29**

என்ற வசனமும் அதையே தெளிவுப்படுத்துகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், கொஞ்சத்தில் உண்மையுள்ளவனை அநேகத்திற்கு அதிகாரியாக மாற்றுகிறார் (மத்தேயு 25:21,23). அவர்மேல் வைக்கும் அன்பிலும் நாம் எத்தனை உண்மையாய் இருக்கிறோம் என்பதை அவர் காண்கிறவராய் இருக்கிறார்.

கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்.

எரேமியா 17:10

என்னைத் தேடிவந்த ஆண்டவரை நான் உண்மையாய் நேசித்து பின்பற்றினதை அவர் அறிந்திருந்தபடியால், அன்றுமுதல் என்னை இடைவிடாமல் பற்றிக் கொண்டார்.

அன்பு சகோதரியே! நீயும்கூட உன் வாழ்க்கை முழுவதையும் மாற்றவல்ல இந்த இயேசுவை உண்மையுள்ள மனதோடு சேவிக்க, இன்றே உன்னை ஒப்புக்கொடு. எந்த மனிதனுடைய அன்பும் நிலையற்றது. அதை நம்பி ஏமாந்து போகாதே! இன்று அன்பாய் நடந்துகொள்ளும் மனிதன் நாளை வேறு விதமாய் மாறுபட்டு நடப்பதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால், மனிதனுடைய சுபாவம் அப்படிப் பட்டது.

மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து...கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்...

எரேமியா 17:5

என்று வேதம் சொல்லுகிறதை எப்பொழுதும் நினைவில் வைத்தவர்களாய், எந்த மனிதரிலும் முழு நம்பிக்கையும் வைத்துக்கொண்டு, கர்த்தரை அதற்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து விடாதே! கர்த்தர் மீது நம்பிக்கை வைக்கும் அனுபவத்தை நான் பெற்றிருந்தபடியால், எந்த நிலைமை யிலும் நான் சோர்ந்து போகாமல், கர்த்தரையே பின்பற்ற எனக்கு ஏது உண்டாயிற்று!

சில சகோதரிகள் தங்கள் சந்தேகங்களுக்கும், பிரச்சினை களுக்கும் நான் ஆலோசனை கூறி பதில் கடிதம் அனுப்பு மாறு எழுதுவார்கள். ஒரு சகோதரி இப்படியாக: "என் கணவர் பல பெண்கள் முன்னிலையில் என்னைத் தரக் குறைவாக பேசி விட்டார். அடிக்கடி இப்படிப்பட்ட சந்தர்ப் பங்கள் என் வாழ்வில் ஏற்படுகிறது. நான் என்ன செய்வது? அவரோடு எதிர்த்து பேசி, அவரை சரி செய்யலாமா?" என்று எழுதியிருந்தார்கள். அந்த நேரத்தில் போய் வாக்கு வாதங்களைப் பண்ணுவதினால் பலர் முன்னிலையில் அது பல பிரச்சினைகளை உண்டு பண்ணுமேயல்லாமல் நன்மை ஒன்றையும் அது பிறப்பிக்க போவதில்லை. பிற்பாடு சந்தர்ப்பம் வரும்போது, கணவன் அன்போடு நடந்து கொள்ளும் வேளையில் அதை விளக்கிச் சொல்லி தவற்றை உணர்த்துவது நல்லது.

நாம் நேசிக்கிற மக்களாலும்கூட மனம் நொந்துபோகத் தக்கதான சந்தர்ப்பங்கள் ஏற்படுகையில் உடனடியாக அன்பே உருவான நம் ஆண்டவரும், அருமைப் பிதாவு மாகிய தேவாதி தேவனின் திருமுகத்தை நோக்கி ஆறுதல் பெறுவதுதான் நன்மையான காரியம்! தம்மை நோக்கி தங்கள் வேதனையை ஊற்றுகிற மக்களை அவர் தம்முடைய சந்தோஷத்தினாலும், உலகம் தரக்கூடாத சமாதானத்தி னாலும் நிரப்புவார். மனக்கிலேசம் நிறைந்த அன்னாள் என்ற பெண் இத்தகைய சமாதானத்தைத்தான் பெற்றாள்.

இதுபோன்ற பல சந்தர்ப்பங்கள் ஒவ்வொரு நாளிலும் நம் தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் வந்து நம்மைக் கலக்கக்கூடும். ஆனால், இயேசுவோ அன்பின் கரங்களை நீட்டியவராக, "மகளே! இதோ நான் நல்ல மேய்ப்பனாக உனக்கு உதவி செய்ய காத்திருக்கிறேன். உன் தேவைகளை என்னிடத்தில் சொல். நான் உனக்கு ஆறுதல் தருவேன், உன் தேவைகளைப் பூர்த்தி செய்வேன்" என்று கூறுகிறார்! ஆகவே, மனிதருடைய வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் பயந்து, உண்மையைவிட்டு விலகாமல், கர்த்தருக்கென்று மாத்திரம் பயந்து உண்மையோடு காரியங்களைச் செய்து, அவரோடு ஐக்கியம் கொள்வோம்.

> ...எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.
>
> **1 யோவான் 1:3**

அப்படியாக ஆண்டவரை முழுவதுமாய் சார்ந்துகொள்ளும்போது, அவருடைய பிரசன்னம், அன்று இஸ்ரவேல் ஜனங்களுக்கு பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவில் அக்கினிஸ்தம்பமாகவும் முன்னும் பின்னுமாக இருந்து காத்தது போன்று, நம்மோடும் இருந்து காப்பாற்றும், வழிநடத்தும்!

நானும், என் கணவரும் ஒரே மனதுடன் மேற்கூறிய வண்ணமாக உண்மையுள்ள இருதயத்தோடு கர்த்தரைப் பின்பற்றி வாழ்க்கையை ஆரம்பித்தோம். இனிமையாய் சென்று கொண்டிருந்த எங்கள் வாழ்க்கைப் படகில், முதல் முறையாக புயல் வீச ஆரம்பித்தது. முதல் முறை கர்ப்பம் தரித்திருந்த நிலைமையில், எனக்கு கர்ப்பச்சிதைவு ஏற்பட்டு, மன வேதனை எங்களை வாட்டியது. "கர்த்தரை உண்மையாய் தேடின நமக்கு ஏன் இப்படி வந்தது?" என்ற கேள்வி, திரும்பத் திரும்ப எழும்பி எங்கள் மனதை கலக்கியது. ஆண்டவருடைய பாதத்தில் மண்டியிட்டேன்.

நான் அவரோடு இன்னும் என்னென்ன விதங்களில் என்னை உண்மையுள்ளவளாய் மாற்றிக்கொள்ளக் கூடும் என்பதை ஆராய்ந்து என் வாழ்க்கையில் எல்லாவற்றையும் சரிசெய்தேன். விசேஷமாக ஒரு காரியம் என் நினைவிற்கு வந்தது. என் கணவருக்கு அப்பொழுது கிடைத்த சம்பளம் மிகவும் குறைவு. பிடிப்புகள் யாவும் போக கையில் ரூ.156/- தான் வந்து சேரும். இதில் வீட்டு வாடகை ரூ.50/- மற்றும் வீட்டுச் செலவுகளுக்கே அந்த வருவாய் போதாது.

என் கணவர் தசமபாகத்தைப் பற்றி கூறி, 16 ரூபாய் ஆண்டவருக்கு சேரவேண்டும் என்று சொன்னபோது, அவைகளிலெல்லாம் அதுவரை யாதொரு பழக்கமில்லாத எனக்கு, “ஐயோ, அவ்வளவு ரூபாய் அதில் கொடுத்து விட்டால், மீதம் இருப்பதில் எப்படி மாதத்தைக் கழிப்பது?” என்ற ஒரு அங்கலாய்ப்பு என் மனதிற்குள் ஏற்பட்டது. கர்த்தருக்கு சேரவேண்டிய தசமபாகத்தை ஒரு பாரமாக எண்ணிய என்னுடைய குறைவான எண்ணம் எத்தனை தவறானது என்ற உணர்வு எனக்குள் ஏற்பட்ட படியால், நான் கர்த்தரிடம் முழங்காற்படியிட்டு, இப்படிப் பட்ட என் குறைவை மன்னிக்கும்படியும், அன்றுமுதல் தசமபாகத்தில் யாதும் குறைவில்லாமல் இன்னும் கூடுத லாக செய்வதையே நானும் என் கணவரும் ஒருமித்து மேற்கொள்வோம் என்று ஒரு தீர்மானம் செய்தேன். அன்றிலிருந்து இன்றுவரை கர்த்தருக்குக் கொடுப்பதில் என்னால் இயன்றவரை அப்படியே கவனம் செலுத்தி வருகிறேன்.

கர்த்தருக்குள் அருமையான சகோதரிகளே! இதில் பெண்களாகிய நமக்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு. அநேக சமயங்களில் நான் பார்த்திருக்கிற ஒரு காரியம் என் மனதை அதிகமாக வேதனைக்குள்ளாக்கியிருக்கிறது. ஆலயத்தில் சிறு பிள்ளைகள் எனக்கு முன்பதாக வந்து

உட்காருவார்கள். அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் 10 பைசா, 5 பைசா போன்ற மிகக் குறைந்த மதிப்புள்ள நாணயங்களே காணிக்கை போடுவதற்கென்று பெற்றோர் கொடுத்திருப்பார்கள். பிரியமான சகோதரிகளே! நீங்கள் ஆலயத்திற்கு கொடுப்பதாக நினைத்து கொடுக்காதிருங்கள். "கர்த்தருக்கு நான் கொடுக்கிறேன்" என்று உங்களால் இயன்றதை, எவ்வளவு அதிகமாய் செய்ய முடியுமோ அவ்வளவு அதிகமாய் ஆண்டவருக்குக் கொடுங்கள். நீங்கள் ஆண்டவருக்குக் கொடுக்க கொடுக்க, உங்கள் தேவைகளையெல்லாம் அவர் கரங்களிலிருந்து விரும்புவதற்கும் மேலாகப் பெறுவீர்களே தவிர, ஒன்றிலும் குறைந்து போகமாட்டீர்கள்.

> கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்: நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். லூக்கா **6:38**

முதல் குழந்தைக்கு அந்த நிலைமை என்றால், அடுத்த குழந்தையும் பத்து மாதம் வயிற்றில் சுமந்த குழந்தை, பிறக்கவேண்டிய நேரத்தில் யாதொரு காரணமுமில்லாமல் இறந்தே பிறந்தது. எங்கள் நெஞ்சே வெடித்துவிடும்போல் இருந்தது. அந்த நேரத்திலும் எங்கள் இருவரையும் அழைத்தவரும் எங்களைஅன்போடு வழிநடத்தி வந்த எங்கள் அன்பு பிதாவை நாங்கள் மறுதலிக்கவில்லை. திரும்பவுமாக என்னையே நான் சோதித்து பார்த்தேன். எனக்குத் தெரிந்த வரை என் வாழ்வை செப்பனிட்டுக் கொண்டேன். தேவனுடைய வசனத்தின்படி கீழ்ப்படிந்து, அவருக்கு என்னைப் பரிபூரணமாய் ஒப்புவித்தேன். ஒருபுறம் ஏச்சுக்கள், நிந்தையான பேச்சுக்கள், என் காதுகளில் வந்து விழத்தான் செய்தன!

குழந்தையற்ற என் சகோதரிகளே! உங்களுக்கும் இப்படிப்பட்ட பாடுகள் வரத்தான் செய்யும்! அதைப் பார்த்து சோர்ந்து விடாதிருங்கள். இந்தக் குறைகள் யாவை யும் நிவிர்த்தி செய்ய வல்லவர், உங்கள் ஆண்டவர்!

"இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவர்" என்று அவருக்கு ஒரு பெயர் உண்டு (ரோமர் 4:17). அவர் நிச்சயம் இந்த நிந்தைகளை உங்களை விட்டு அகற்றுவார்!

என் வாழ்வில், இன்னும் அதிகமாய் ஆண்டவரைச் சேவிக்க வேண்டுமென்று மென்மேலும் என் உள்ளம் வாஞ்சித்தது. இதைத்தான், "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" (2 கொரிந்தியர் 5:14) என்று பவுலடிகளார் கூறினார் போலும்! ஒருநாள் ஆண்டவரை உண்மையாய் நேசிக்கிற நேசத்துடன் தனிமையில் முழங்கால்படியிட்டு, ஜெபம் செய்ய ஆரம்பித்தேன். ஆம்! தனிமைதான் ஜெபிப்பதற்கு ஏற்ற சமயம்! "தனியாக இருக்கிறேனே! பக்கத்து வீட்டு சிநேகிதியிடம் போய் சற்று அரட்டையடித்து வரலாம் அல்லது அருமையான என் இனத்தாரிடம் போய் அளவளாவி வரலாம்" என்று புறப்பட்டுச் செல்வதைவிட, தேவனின் திருப்பாதத்தில் அமர்ந்து உங்கள் கவலைகளை, தேவைகளை தெரியப் படுத்துவது சாலச்சிறந்தது. அப்படிப்பட்ட சமயங்களில் தான் விசேஷ ஆசீர்வாதங்களை தேவன் உங்களுக்குத் தந்து உங்களை ஆசீர்வதிப்பார்.

என் தாயார் சிறுவயதில் எனக்கு அநேக ஆவிக்குரிய பாடல்களை பாராமல் பாடுவதற்கு கற்றுக் கொடுத்திருந் தார்கள். ஆம் அன்பான தாய்மார்களே! பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் போதாது; அதோடு உங்கள் கடமைகள் முடிந்துவிடுவதில்லை. பள்ளிக்கூட நாட்களில் அவர்களுக்கு எப்படியாக பாடங்களை படிப்பதில் உற்சாகமூட்டுகிறீர்

களோ, அதுபோன்றே ஞாயிறுதோறும் ஆண்டவரைக் குறித்த காரியங்களை, பாடல்களை கற்றுக்கொடுப் பதிலும், வேத வசனங்களை தெளிவுபடுத்துவதிலும் அவர்கள் வாழ்விற்கு உபயோகமான வசனங்களைப் பாராமல் படிக்கச் செய்வதிலும் தாய்மாராகிய நாம்தான் அவர்களை உருவாக்க வேண்டும். பாருங்கள், என் தாய் சிறுவயதில் இவ்விதமாய் கற்றுக்கொடுத்த பாடல்கள், 21 வயது நிரம்பிய எனக்கு அந்நாட்களில் உதவியது. கண்களை மூடி, கர்த்தரை நோக்கி, இந்தப் பாடல்களின் கருத்தை உணர்ந்து பாடி ஸ்தோத்திரித்தேன். அவ்வளவுதான்! தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை தம்முடைய வல்லமையினை எனக்குள் ஊற்றினார்.

> தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர் வாதத்தையும் ஊற்றுவேன். ஏசாயா 44:3

என்று வாக்களித்த ஆண்டவர், அவர்மேல் உண்மையான வாஞ்சையோடிருந்த எனக்கு இந்த அனுபவத்தைக் கொடுத்தார் போலும். ஆனால், அந்த சமயத்தில் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த தெளிவான அறிவு எனக்கு இல்லாதிருந்தபடியால், அந்த தெய்வீக அனுபவத்தை அப்படியே அசட்டையாக விட்டுவிட்டேன். ஆனால், என் கணவரோ அந்த அனுபவத்தை அவர் பெறவேண்டும் என்று விடாப்பிடியாக காத்திருந்து ஜெபித்து வந்தார். இரண்டு வருடங்கள் கடந்தன! 1962-ஆம் ஆண்டு அக்டோபர் 10-ஆம் தேதி அன்று, தேவன் என் கணவரை முதல் முறையாக தம் பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் தானே "நானும் அந்த தெய்வீக அனுபவத்தைப் பெற

வேண்டும்" என்ற வாஞ்சை அதிகமாய் எழும்பியது. கர்த்தர் மனமிரங்கி என் விண்ணப்பத்தைக் கேட்டார்!

> அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.
>
> **சங்கீதம் 34:5**

என்றபடி, கர்த்தர் எனக்கும் உன்னதமான அந்த அனுபவத்தை 1963-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ஆம் தேதியன்று அருளிச் செய்தார். "என்னை சூழ்ந்திருந்த மக்கள் இதைக் குறித்து மகிழ்ச்சியடைவார்கள்; என்னைப் பற்றி பெருமைப்படுவார்கள்" என்று நான் நினைத்தேன். ஆனால், அதற்கு நேர்மாறாக காரியங்கள் நடந்தன. அண்டை அயலகத்தாரும், உற்றார் உறவினரும், குடும்பத்தின் மக்களும் என்னை பார்த்து, எள்ளி நகையாடினர். "இரண்டு பேருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது" என்று சொல்லாமல் சொன்னார்கள். சிலுவையைக் குறித்த காரியங்கள், அதன் மேன்மையை அறியாத மக்களுக்கு பைத்தியமாக தோன்றுகிறது என்று வேதத்தில் நாம் வாசிப்பது (1 கொரிந்தியர் 1:18) எத்தனை உண்மையான காரியம்!

அருமையான சகோதரியே! சீஷர்கள் அன்று இந்த அனுபவத்தைப் பெற்றது (அப்போஸ்தலர் 2:1-18) உண்மையான ஒரு காரியம்! இன்றும், அதே அனுபவம் எனக்கும் வேண்டும் என்று மெய்யான தாகத்தோடு கேட்கிற ஒவ்வொருவருக்கும், கர்த்தர் தம்முடைய வார்த்தையின் படியே, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அருளிச் செய்வதும் மிக, மிக உண்மையான காரியம்.

> என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.
>
> **யோவான் 14:26**

இந்த அனுபவத்தைப் பற்றிய அறிவு உங்களுக்கு இல்லாமல் இருக்குமானால், துணிகரமாக அதை நிராகரித்தோ அல்லது அதைப் பெற்று அனுபவிக்கும் மக்களை ஏளனப்படுத்தியோ பேசத்துணியாதிருங்கள்! பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசப்படும் காரியங்கள், மிகவும் பாவமாக எண்ணப்படும். அது அத்தகையோருக்கு மன்னிக்கப்படுவதில்லை என்று வேதம் சொல்லுகிறது. நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் இன்னும் அறிய வேண்டியது ஏராளம் இருக்கிறது. ஆகவே, "எவரையும் குறை சொல்லும் பழக்கத்தை என் வாழ்வில் மேற்கொள் ளாதிருப்பேன்" என்று தீர்மானியுங்கள். "எனக்கு எல்லாம் தெரியும்" என்று மேட்டிமையாக உங்களையே மேன்மைப் படுத்தாமல் தாழ்மையைக் கடைபிடித்து உங்கள் வாழ் விலும் தேவன் தரும் இந்த தெய்வீக ஈவுகளை பெறுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், இந்த அனுபவத்தைப் பெற்றதாக நாம் காண்கிறோம்".

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியி னாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப் பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

அப்போஸ்தலர் 10:38

தெய்வ குமாரனாகிய அவர் பெற்ற இந்த அனுபவம் உங்களுக்கும் எனக்கும் அவசியம் இல்லையா? பரிசுத்த ஆவியினால் நிறைந்த பிறகு உடனடியாக இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் சோதனை ஏற்பட்டது போல, கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிற (*1 பேதுரு 5:8*) பிசாசு இன்றும் பல்வேறு இடர்களைப் போடுகிறான். விசேஷ

மாக கர்த்தரை வைராக்கியமாய் பின்பற்ற வேண்டும் என்று எந்த உள்ளம் தீர்மானிக்கிறதோ, அந்த உள்ளத்தினை அவன் கூர்மையாய் கவனித்து, அவர்கள் குறைவுபடும் சமயத்தை கவனித்து பல்வேறு இடர்களை அல்லது சோர்வுகளை அல்லது குழப்பங்களை கொண்டு வந்து போடுவான்.

நானும், என் உற்றார் உறவினர்களிடம் மிகுந்த பாசம் வைத்திருந்தேன். ஒருபுறம் இயேசு வேண்டும் என்ற வாஞ்சை! மறுபுறம் என் அன்புக்குரியவர்களின் மீது நான் கொண்டிருந்த பற்றுதல்!

இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லம் நிறையற்றவனாயிக்கிறான். யாக்கோபு 1:8

என்ற வாக்கின்படி எத்தனை நாட்கள் நான் இருமனதுடன் இயேசுவின் உண்மை அடியாளாய் வாழ முடியும்? யார், யாரை எத்தனை அதிகமாய் நேசித்தேனோ, அவர்களிடமிருந்து நான் திரும்பப் பெற்றது எல்லாம் கேலியும், ஏளனமுமான பேச்சுக்களே! அப்பொழுதுதான் என் மனதில் ஒரு தீர்மானம் செய்தேன். "இனி ஆண்டவரின் வழியினை மாத்திரம் நான் முழுமனதுடன் பின்செல்வேன், ஆண்டவரைப் பின்பற்ற எனக்கு எந்த திசையிலிருந்து ஊக்கம் வருகிறேதா, அந்த திசையை மட்டும் நான் நேசித்து ஏற்றுக்கொள்வேன். அப்படி இல்லாத திசையிலிருந்து நான் தூரமாய் விலகிக்கொள்வேன்" என்பதே!

இந்த அனுபவங்கள் என்னை மிகுந்த ஆழமான தெய்வீக அனுபவத்திற்குள்ளாக அஸ்திபாரப்படுத்தின! "எல்லாம் என் இயேசுவே, எல்லாம் அவரே" என்றே என் உள்ளத்தில் எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தேன். எல்லோராலும் கைவிடப்பட்டு, தனிமையாய் நின்ற பொழுதெல்லாம் ஒன்றுக்கும் அஞ்சாமல்,

அஞ்சாதிரு என் நெஞ்சமே,
உன் கர்த்தர் துன்ப நாளிலே,
கண் பார்ப்போம் என்கிறார்;
இக்கட்டில் திகையாதிரு
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் செய்குவார்

தாவீதும் யோபும் யோசேப்பும்
அநேக நீதிமான்களும்
உன்னிலும் வெகுவாய்;
கஸ்தி அடைந்தும் பக்தியில்
வேருன்றி ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்

என்ற பாடலைப் பாடி கர்த்தருக்குள் தைரியம் கொண்டேன்.

பினெகாஸ் என்ற மனிதன் வைராக்கியத்தோடு கர்த்தருடைய காரியங்களில் ஈடுபட்டான். அதனிமித்தம் கர்த்தரிடத்திலிருந்து அவன் விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்றான் (எண்ணாகமம் 25:10-13).

என் அன்பு சகோதரிகளே! நீங்கள் ஒருவேளை, "நான் கர்த்தரைத் தேட ஆரம்பித்ததிலிருந்து, என் அருமையான பெற்றோர்/உடன் பிறந்தோர்/உயிர் தோழிகள் என்னை விட்டு விலகிவிட்டார்களே! நான் தனிமையாக வாழ்கிறேனே! முன்பெல்லாம் என்னைச் சுற்றி இம்மக்கள் கூடியிருந்து உல்லாசமாய் நேரத்தைப் பொழுது போக்குவதில் ஈடுபட்டிருப்பார்களே!" என்றெல்லாம் கலங்கிக் கவலைப்படாதிருங்கள். "கர்த்தரே தெய்வம், அவருக்காகவே நான் வாழ்வேன்" என்று நீங்களும் பினெகாசைப் போன்று வைராக்கியமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழத் தீர்மானம்

செய்யுங்கள். உங்கள் வைராக்கியம் உங்களுக்கு நிறைவான தெய்வீக பலனைத் தரும்.

குழந்தை அற்றிருந்த என்னைக் கர்த்தர் அப்படியே விட்டுவிடவில்லை.

> மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்;... ஆதியாகமம் **25:21**

என்ற வேத வாக்குப்படி, என் கணவர், "எங்களுக்குக் குழந்தையில்லையே! மற்றவர்கள் மத்தியில் வெட்கத் தோடு வாழ வேண்டியுள்ளதே!" என்ற ஏக்கத்துடன் ஆண்ட வரிடம் மன்றாடி வந்தார். ஒருநாள் ஜெப நேரத்தில், கர்த்தர் அவருக்கு, "இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை, இனி அவன் முகம் செத்துப்போவதுமில்லை. அவன் என் கரங்களின் செயலாகிய தன் பிள்ளைகளைத் தன் நடுவிலே காணும்போது என் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்கள்; யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்கள்" என்ற வேத வசனங்களை வாக்குத்தத்தமாகக் கொடுத்தார்.

அவ்வாறே பால், ஏஞ்சல் என்ற இரண்டு குழந்தை களைத் தந்து, என் இல்லாமையை, தம் ஆசீர்வாதத்தினால் நிறைத்தார். என் கணவர், ஆரம்ப நாட்களிலிருந்தே தன் அலுவலக வேலை நேரம் போக, ஆண்டவரின் வேலையில் இடைவிடாமல் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தார். குடும் பத்தின் காரியங்களில் எவ்வித உதவியும் செய்ய கொஞ்ச மும் அவருக்கு நேரம் இராது. எனவே, குழந்தைகளை வளர்ப்பதிலும், மற்றும் அனைத்துக் குடும்ப காரியங் களையும் நானே கவனிக்க வேண்டியதாய் இருந்தது. ஒரு நிமிடமும் ஓய்வின்றி, ஓடோடி என் காரியங்களைக் கவனித்து வந்தேன். குடும்ப செலவுக்கு தாராளமாக கையில் பணமும் இராது. ஆகவே, வருகிற வருவாயை

வைத்து மிகவும் சிக்கனமாய் செலவு செய்ய வேண்டிய நிலைமை வேறு!

என் அன்பு மகன் பால், குழந்தையாய் இருந்த சமயத்தில், பெரிய கடைகளில் போய் அவனுக்கு தேவையான துணி மணி வாங்கவோ, செருப்பை வாங்கவோ துணியமாட்டேன். தெருவில் (Platform) இருக்கிற சிறிய கடையில் சென்று, எத்தனை சிக்கனமாய் துணிவாங்கலாம்; பழைய செருப்புக்காரனிடம் பழைய செருப்புக்களை வாங்கி எவ்விதம் செலவைக் குறைக்கலாம்; அதன் மூலம் என் கணவனுக்கு, கடன் வாங்கும் நிலைமை வராமல், மன சமாதானத்தோடு குடும்ப வாழ்க்கை வாழலாம் என்று மிகவும் கஷ்டத்துடன் குடும்ப காரியங்கள் அனைத்தையும் நானே கவனித்து வந்தேன். திருமணமாகும் முன்பு, கஷ்டம் என்பது என்ன என்றே அறியாமல் வளர்க்கப்பட்ட நான், இந்தவிதமான நெருக்கமான நேரங்களில், கடந்த கால நிறைவின் நாட்களை எண்ணி சோர்ந்து போகாமல், தேவைகள் அதிகம் இருந்த இந்த நாட்களிலும்கூட, என்னை அருமையாய் வழிநடத்தி வந்த கர்த்தருக்குள் சந்தோஷமாகவும், அவரைப் பின்பற்றுவதில் வைராக்கிய மாகவுமே இருந்தேன்.

தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரண மடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

பிலிப்பியர் 4:12

கர்த்தரே எல்லா நிலைமைகளிலும் எனக்கு சமாதானத் தையும், சந்தோஷத்தையும், மனதிருப்தியையும் அந்த நாட்களில் அருளிச்செய்தார்.

என் அன்பு சகோதரிகளே! "எனக்கு அது இல்லையே, இது இல்லையே, என் பக்கத்துவிட்டு பெண் கொஞ்ச

சம்பளத்தில் எதையெல்லாமோ வாங்குகிறாளே, எனக்கு அந்த நிலைமை எப்பொழுது வரப்போகிறதோ" என்று ஆண்டவரைப் பின்பற்றாத சகோதரிகள் எண்ணி வேதனை படலாம். ஆனால், "கர்த்தரை தேட வேண்டும்; அவருக்குப் பிரியமான உண்மையுள்ள மகளாக வாழ வேண்டும்" என்று நீங்கள் உங்கள் வாழ்க்கையில் பிரதிஷ்டை செய் திருப்பீர்களானால், இவ்வித உலகத் தேவைகள் உங்களை நெருக்குகையில் அதனால் ஏற்படும் சோர்வுகளுக்கு நீங்கள் இடங்கொடாமல், கர்த்தரையே நம்பி அவருடைய சமா தானத்தினால், சந்தோஷத்தினால் உங்கள் வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள்".

போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். 1 தீமோத்தேயு 6:6,8

1969 -ஆம் ஆண்டு திடீரென்று என் கணவர் பயங்கரமான இருமல் வியாதியினால் கஷ்டப்பட்டார். அதே சமயத்தில், ஐந்து மாதக் குழந்தையாக இருந்த மகள் ஏஞ்சல், இடைவிடாத வயிற்றுப்போக்கு ஏற்பட்டதினிமித்தம், மரணத்திற்கு சமீப மானாள். ஒருபுறம் கணவரின் பெலவீனம்! மறுபுறம் குழந்தை யின் மரணப்படுக்கை! என் கணவருக்கு வெளியில் சென்று வைத்தியரை அழைத்து வரவோ பெலனில்லை. நான் குழந் தையின் அருகே முழங்காற்படியிட்டு, கண்ணீர் வடித்து, கர்த்தரிடம் மன்றாடி ஜெபித்துக்கொண்டிருந்தேன்.

அந்த சமயத்தில், பழகின குரல் ஒன்று வாசலில் ஒலித்தது. அது யாரென்று பார்த்தபொழுது, எங்கள் மீது மிகுந்த அன்பு கொண்ட ஒரு குடும்பத்தினரின் உறவினர் ஒருவர் எங்களைப் பார்க்க மிகுந்த ஆவலுடன் வந்திருந்தார். அவர் ஒரு வைத் தியரும்கூட! "சகோதரரே! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று என் கணவரைப் பார்த்து அவர் வினவினார். என் கணவர்

குழந்தையின் நிலைமையினை விவரிக்கவே, உடனே ஓடோடி உள்ளே வந்தார். சிகிச்சையை உடனடியாக மேற்கொண்டார். கர்த்தர் குழந்தையின் உயிரை ஆச்சரியமான விதத்தில் மீட்டுக் கொடுத்தார்.

அடுத்து மிக, மிகக் கொடுமையான சோதனைகள் ஒன்றன் பின் ஒன்றாக என் வாழ்வில் வந்து என்னை சீர்குலையச் செய்தன! மகள் குணமானாள். ஆனால் என் கணவருக்கோ நுரையீரலில் பயங்கரமான ஷயரோக நோய் ஏற்பட்டது.

மருத்துவர் கூறினார், "அம்மா, உங்கள் கணவர் இன்னும் ஒருமாதம் தான் உயிர்வாழ முடியும். ஆனால், நீங்கள் சோர்ந்து போகாதிருங்கள். ஏனென்றால் நீங்கள் சேவிக்கிற தேவன் நிச்சயம் உங்களைக் காப்பாற்றுவார்" என்று கூறிய அவருடைய வார்த்தை ஒன்றுதான் எனக்கு ஆறுதலாய் இருந்ததே தவிர, மற்ற எல்லாத் திசையிலிருந்தும் எனக்கு ஆறுதல் சொல்ல எவருமில்லை. தனி மனுஷியாய் தவித்துக் கொண்டிருந்தேன். என் கணவரோ, "இந்த வியாதி மிகவும் கடுமையாய் என்னை வாட்டுகிறது. நான் சீக்கிரமாய் மரித்துப் போவேன். நான் சேவித்த ஆண்டவர் உன்னையும், நம் இரண்டு குழந்தைகளையும் நிச்சயம் காப்பாற்றுவார்!" என்று கூறினார். என் நிலைமையை சற்று யோசித்துப் பாருங்கள்! என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையாகிய ஆண்டவர் இயேசுவின் பாதத்தை நோக்கி ஓடினேன். என் கண்ணீரை ஊற்றினேன்.

...ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல் ஊற்றிவிடு;... புலம்பல் **2:19**; சங்கீதம் **62:8**

...என் காரியத்தை உம்மிடத்தில் சாட்டிவிட்டேன்.
எரேமியா **20:12**

அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்; அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன். சங்கீதம் **142:2**

என்ற வேத வாக்குகளின்படி, என் கவலைகளையெல்லாம் மனதார அவரிடம் ஒப்புவித்தேன். உடனடியாக பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டேன். பரிசுத்த ஆவியானவர் என்னை நோக்கி, "மகளே! 1963-ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 12-ஆம் தேதி நான் உன்னோடு பேசினதை நீ மறந்துபோனாயா? உன் கணவனை நான் வல்லமையாக உபயோகிப்பேன், அந்த நாட்களில் நீ அவனோடு கூட சேர்ந்து ஒத்துழைப்பாயா? என்று நான் உன்னிடம் கேட்டதை நீ நினைவில் வைக்கவில்லையா? நான் வாக்கருளியபடி இன்னும் அவ்விதம் அவனை வல்லமையாய் உபயோகிக்கவில்லையே?" என்றார். அதைக் கேட்டவுடன் எனக்குள் ஒரு பலத்த விசுவாசம் எழுந்தது. சிங்கம்போல் அவ்விடத்தை விட்டு எழுந்தேன். என் கணவரிடம் ஓடோடிச் சென்றேன். "நீங்கள் மரிப்பதில்லை. கர்த்தர் உங்களை குணமாக்கி, தம் ஊழியத்தில் வல்லமையாக உங்களை உபயோகிக்கும் நாள் நிச்சயம் இனி வரப்போகிறது" என்று ஆணித்தரமாக கூறினேன். வாக்கு மாறாத கர்த்தர் சொன்ன வாக்கின்படியே, தம் ஊழியரைப் பரிபூரணமாய் குணமாக்கி முன்னைக் காட்டிலும் வல்லமையாக உபயோகித்தார்.

> *மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.*
> ஏசாயா **54:10**

மேற்கூறிய பற்பல கடுமையான சோதனைகளின் நாட்களில் என்னைத் தமக்கு முன்பாக உண்மையுள்ளவள் என்று கண்டார், அன்பு ஆண்டவர் இயேசு!

தம் ஊழியராகிய என் கணவரோடு இணைந்து அவருடைய சேவையைச் செய்ய என்னை ஏவினார். இதற்கு ஆரம்பமாக தானோ என்னவோ மேலும் பலதரப்பட்ட அனுபவங்களினூடாக நான் கடந்துசெல்ல வேண்டியதாய்

இருந்தது. என் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானார்கள். என் கணவரிடத்தில் ஜெபித்து செல்வதற்காக அநேக மக்களும், அநேக ஊழியர்களும் எங்கள் வீட்டிற்கு மாறி, மாறி வந்து, தங்கிச் செல்வதுண்டு. அத்தகையோரை என்னால் இயன்ற வரை அன்புடன் பராமரிப்பது வழக்கம்! நாட்கள் கடந்தன! ஒருநாள் என் சரீரத்தில் அதிகக் களைப்பு ஏற்பட்டது. மூன்று நாட்கள் தங்கிவிட்டு அப்பொழுது தான் தன் ஊர் திரும்பினார் ஒருவர். "இன்று சரீரம் மிகவும் களைப்படைந்திருக்கிறது, நான் சற்று ஓய்வெடுக்கப் போகிறேன்" என்று என் கணவரிடம், காலையில் அவர் அலுவலகம் செல்லும் முன்பு கூறினேன். சுமார் 11 மணியளவில் என் கணவர் ஒரு செய்தி அனுப்பியிருந்தார். "உனக்கு ஒரு சோதனை வந்திருக்கிறது. இதில் நீ தான் ஜெயமெடுக்க வேண்டும். மறுபடியுமாக நம் வீட்டில் தங்கிப் போவதற்கு ஒருவர் வந்திருக்கிறார். அவரை அனுப்பி வைக்கிறேன். சந்தோஷமாய் உன் ஊழியத்தை நிறைவேற்று" என்பதுதான் அந்தக் செய்தியின் சாராம்சம்!

எனக்கு உடனே எழும்பி வந்தது கோபம்! வந்தவருக்கு வேண்டிய பணிவிடைகளை செய்தேன். ஆனால், மனதிற்குள்ளேயோ மிகுந்த ஆத்திரம். என் கணவரின் வருகைக்காக காத்திருந்தேன். மதிய உணவிற்குப்பின் என் கோபங்களை அவரிடம் முறையிட்டேன். ஆனால், அவரோ ஒன்றும் கேளாதது போல பேசாமல் அலுவலகம் சென்றுவிட்டார். மாலையில் வீடு திரும்பிய என் கணவரிடம் நான் பேசாமல் இருந்துகொண்டு மிகுந்த கோபத்துடன் காணப்பட்டேன்.

ஆனால், மாலை நேரத்தில் வேலைகளையெல்லாம் முடித்தபிறகு, தனித்து சற்று நேரம் ஜெபிப்பது என் அன்றாட வழக்கம்! அந்தவிதமாக அன்றும் ஜெபிக்கச் சென்ற நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசினார்.

"என் மகளே நானே உனக்கு இந்த உபசரிப்பின் ஊழியத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை முழுமனதோடு உன்னால் இயன்றதைச் செய்வாயாக" என்றார். நான், என் குறையை உடனடியாக ஆண்டவரிடம் அறிக்கையிட்டேன். "சுவாமி, என்னை மன்னியும், பெலவீனமான என் சரீரத்தைப் பலப்படுத்தும். உம்முடைய ஊழியத்தினிமித்தம் வருகிற மக்களை அன்போடு உபசரிக்க அருள் புரியும்" என்று ஜெபித்தேன். கர்த்தர் தம் புதிய பெலனையும், கிருபையையும் எனக்கு அருளிச் செய்தார்.

"ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத்தேயு 26:41) என்றபடி, நம் ஒவ்வொருவர் வாழ்விலும் இப்படிப்பட்ட குறைவுகள் வரத்தான் செய்கின்றன. நம்முடைய சக்திக்கு மீறி உழைப்பதினாலும் பல்வேறு பிரச்சினைகள் நம்மைச் சூழ்ந்து நெருக்குவதினாலும் இவை எழும்புகின்றன!

அன்பு சகோதரிகளே! அவைகளைக் கண்டு, "ஐயோ, நான் குறைவுள்ளவள்" என்று உங்களையே குறைவாக எண்ணிகொண்டு, சோர்ந்து போகாதிருங்கள்! அடைக்கலம் தரும் ஆண்டவர் இயேசுவின் பாதங்களை உடனடியாக பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களுக்குப் போதுமான கிருபையையும், ஞானத்தையும், பெலனையும், தெளிந்த புத்தியையும் அருளிச் செய்வார்.

ஒருநாள் ஜெப நேரத்தில் என்னோடு கர்த்தர் சில காரியங்களைக் கூறினார். "என் மகளே! நான் பேதையாய் இருக்கிறேன். என்னால் அதிகமான அளவில் ஊழியம் செய்ய முடியாது. இவ்வளவுதான் என்னால் செய்ய முடியும் என்று நீயே உன்னை ஏன் குறைத்துக்கொள்கிறாய் பார்! பேதை என்று சொல்லிக்கொள்கிற உன்னை நான் என் கரத்தில் எடுத்து என் சித்தம்போல் உபயோகிக்கப் போகிறேன். 'எனக்கு நேரமில்லையே' என்று நீ சொல்லு

மளவிற்கு என் வேலையை அத்தனை அதிகமாய் நீ செய்யப்போகிறாய்" என்று கூறினார். கர்த்தரின் வார்த்தை மாறாதது (மல்கியா 3:6; எபிரெயர் 13:8).

1972-ஆம் ஆண்டு சென்னை வந்து சேர்ந்தோம். "இயேசு அழைக்கிறார்" அலுவலகம் ஒன்றை சிறிய அளவில் ஆரம்பித் தோம். என்னால் இயன்ற அளவில் அலுவலக வேலையில் பங்கு கொள்ள கர்த்தர் எனக்கு ஊழியத்தின் பாரத்தைக் கொடுத்தார். அதோடு கூட, என் கணவரோடு சேர்ந்து அவர் சேவையைச் செய்யவும் ஊக்கமளித்தார். குடும்பத்தையும் பார்த்து, ஊழியத் திலும் பங்குகொள்வது என்றால் எவ்வளவு கடினம் என்பதை ஓரளவு என்னால் அந்நாட்களில் அனுபவிக்க முடிந்தது.

என் கணவரோடு ஊழியத்திற்கு வெளியூர் செல்ல ஆரம்பித் தேன். அந்நாட்களில் என் மகள் ஏஞ்சலுக்கு ஏறக்குறைய 5 வயது இருக்கும். ஒவ்வொரு முறையும் நான் வெளியூர் செல்வதற் கான ஆயத்தங்களை செய்யும்போது, என் அருகில் உட்கார்ந்து, அழுவாள். உடனடியாக அவளுக்கு தலைவலியும், ஜுரமும் வந்துவிடும். இது ஒவ்வொரு முறையும் நடக்கும் ஒரு சாதாரண மான காரியம். குழந்தையைப் பற்றிய கவலை என் மனதிற்குள் மிகுந்த சஞ்சலத்தை உண்டாக்கும். ஆனால் அதை வெளியில் காட்டாமல் கண்ணீரை என் மனதிற்குள் அடக்கி வைத்துக் கொள்வேன். "கர்த்தருக்காகத்தானே இந்த தியாகத்தைச் செய்கி றோம். கர்த்தர் குழந்தையைக் கவனித்துக்கொள்வார்" என்ற வைராக்கியத்துடன் அவளையும் உற்சாகப்படுத்துவேன்.

என் மகனோ, வாலிப வயதினை எட்டிப் பிடிக்கும் நிலைமை யில் இருந்தான். "பெற்றோர் வீட்டில் இல்லை. என் மனம்போல் வாழலாம்" என்ற எண்ணம் அவனுக்குள் புதிதாக எழ ஆரம்பித்தது. மிகுந்த ஒழுங்கிலும், கண்டிப்பிலும் வளர்ந்த அவன், இந்த சமயங்களை உபயோகப்படுத்திக்கொண்டு, ஒழுங்கைவிட்டு மீற ஆரம்பித்தான். தீய நண்பர்களின் சேர்க்கை அவன் வாழ்வில் கர்த்தரை விட்டு பின்வாங்கச் செய்தது. அவனுடைய இந்த

நிலைமையை எங்களால் நம்பவே முடியவில்லை. இவ்வளவு அருமையான மகனா இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவான் என்று திகைத்தோம். படிப்பில் சிறந்து விளங்கின அவன், யாவற்றிலும் தோல்வியடைந்தான். பள்ளி படிப்பின் போதும், கல்லூரி படிப்பின் போதும் அவனை குறித்து புகார்கள் வந்தன! "தேவனுடைய ஊழியத்தை உண்மையும், உத்தமுமாய் இரவென்றும் பகலென்றும் பாராமல் செய்துவரும் எங்களுக்கா இந்த சோதனை!" என்று கலங்கினோம். கண்ணீர் வடித்தோம்.

"தீமையான வழிகளில் செல்லும் மாணவ, மாணவிகளின் நல்வாழ்விற்காக கண்ணீரோடு கர்த்தரின் பாதத்தில் நாம் காத்திருந்து ஜெபித்து வருகிறோம். ஆனால், நம் வீட்டிலேயே இப்படி தீயவழியில் செல்லும் மகனா".

எங்கள் இருதயம் எத்தனையாய் நொந்துபோய் இருந்தது என்பதை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது. ஆனால், இத்தகைய வாலிபர்களுக்கு நாங்களும் விசேஷமாக எங்கள் அருமை மகனும், வருங்காலத்தில் உபயோகமான கருவிகளாக அமைய வேண்டும் என்பதற்காக, இப்படிப்பட்ட பாடுகளினூடே கடந்து செல்ல கர்த்தர் சித்தங் கொண்டார் போலும்!

இந்த நிலைமையில்தான் நானும் என் கணவரும் ஊழியத் திற்காக பல்வேறு இடங்களுக்கும் சென்று வந்தோம். வீட்டின் பொறுப்புகள் எல்லாவற்றையும் நானே முன்னின்று செய்வேன். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமான காரியங்களிலும் ஈடுபட்டு அதிலும் மிகுந்த நேரத்தை செலவிடுவேன். இவ்விதமாக ஒரு நிமிடம் ஓய்வின்றி ஓடோடி வேலைகளைச் செய்தால் தான் எல்லாவற்றையும் கிரமமாகச் செய்ய முடியும்.

வங்கி விடுமுறை நாட்களில், என் கணவர், ஒரு இடத்திற்கு தனியாக சென்று, உபவாசத்திலும் ஜெபத்திலும் இருந்து புத்தகங்களை எழுதுவார். அந்த நாட்களில் என் வீட்டுக் காரியங்கள் அனைத்தையும் முடித்துவிட்டு, சற்று ஓய்வு

கிடைக்கும் வேளையில், சென்னையில், வழி தெரியாத நிலைமையிலும், பேருந்திலும், வெகு தூரம் நடந்துமாக சென்று அவர் இருக்கும் இடத்தில் சேர்வேன். அவர் சொல்லச் சொல்ல பலமணி நேரங்கள் பக்கம், பக்கமாக ஆவிக்குரிய புத்தகத்திற்கான செய்திகளை எழுதுவேன்.அப்படி வெளிவந்த புத்தகங்கள்தான், "உருகாயோ நெஞ்சமே! குணமாக்கும் தழும்புகள்!" என்ற இரு புத்தகங்கள்!

ஆம், சகோதரிகளே! பாடுகள் இல்லாமல் ஆசீர்வாதம் இல்லை. பாடுகளைக் கண்டு பயந்துவிடாதிருங்கள். "சகோதரர் தினகரன் பெற்றதான ஆவிக்குரிய வரங்கள் அத்தனையும் என் வாழ்விலும் வேண்டும். ஆனால், அவர் அனுபவித்த பாடுகள் வேண்டவே வேண்டாம் என்று சிலர் கூறுவார்கள்! அவர் அடைந்த பாடுகள் தான், அவர் பெற்றதான அத்தனை மேன்மை யான ஆவிக்குரிய அனுபவங்களுக்கும் காரணம் என்பதை அவர்கள் மறந்து போனார்கள்.

அது போன்றே தேவனுடைய ஊழியத்தை வைராக்கியமாய் செய்ய வேண்டும் என்று தங்களை ஒப்புக்கொடுக்கிற அநேக சகோதரிகள், குடும்பத்தில் காணப்படும் மிக சாதாரணமான சிறிய பாடுகளையும் தாங்கமுடியாதவர்களாக கண்ணீர் வடிக்கி றார்கள். தான் மரித்துவிட்டால் நல்லது என்று கூட தீர்மானிக் கிறார்கள். எத்தனை விளையாட்டுத்தனமான ஒரு காரியம் இது. இல்லை, நாம் போகவேண்டிய தூரம் வெகுதூரம். விசுவாச வீரனான எலியாவுக்குகூட சோர்வு உண்டானது உண்மைதான்! ஆனால் கர்த்தரோ அவரைப் பலப்படுத்தி, தாம் எலியாவைக் கொண்டு நிறைவேற்ற வேண்டியதைச் செய்து முடித்தார்.

அதுபோன்றே 1985-ஆம் ஆண்டில் என் கணவருடைய சரீரத்தில் மரணத்திற்கு ஏதுவான வியாதி கண்டது. ஆனால் அப்பொழுதோ எங்களைச் சூழ ஏராளமான ஜெப வீரர்களையும், அன்புள்ளம் கொண்ட நண்பர்களையும் எங்களுக்கு கொடுத்து, ஜெபிப்பதற்கும் அன்பு செலுத்துவதற்கும், ஆறுதல் சொல்வதற்

கும், கர்த்தர் எழுப்பினார். எனினும், என் கணவருடைய வாழ்விற்கு என்ன நேரிடுமோ என்ற கலக்கம் என் மனதை வாட்டி வதைத்தது. கர்த்தர் வாக்கில் மாறாதவர்! திரும்பவுமாக அவருடைய உயிரை ஆச்சரியவிதமாகக் கூட்டிக் கொடுத்தார்.

ஆண்டவரின் அன்பை அறியாது, அவருடைய அற்புத வழிநடத்துதலைப் புரிந்துகொள்ளாத தேவனுடைய ஊழியர்கள் என்று சொல்லிக்கொள்கிற சில மக்கள் மட்டுமே, நாங்கள் ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்து பெற்ற அற்புதத்தைக் குறித்து கேவலமாக மிகவும் கீழ்த்தரமான விதங்களில் தங்கள் பத்திரிகைகளில் எழுதி மக்களுடைய மனதைக் குழப்பினார்கள். வேறு சிலர், "இதோடு 'இயேசு அழைக்கிறார்' ஊழியம் முடிந்தது" என மகிழ்ச்சியோடு எழுதினர். சகோதரர் தினகரன் மனம் புண் படும்படி அவருக்கே கடிதங்களை வரைந்து தள்ளினார்கள். எல்லாவற்றையும் கர்த்தருக்கென்று பொறுமையோடு சகித்தோம்.

"இயேசு அழைக்கிறார்" அலுவலகத்தின் காரியங்களை தேவன் பொறுப்பெடுத்து ஆச்சரியமான முறையிலே பெருகச் செய்த நாட்களிலே, திடீரென்று சிலர், சாத்தானால் ஏவப்பட்டு, பல்வேறு வகையான பொய் புரளிகளைக் கிளப்பி, எப்படியாவது இந்த அலுவலகத்தை ஒழித்து மூடிவிட வேண்டும் என்று தீர்மானம் செய்தனர். "இயேசு அழைக்கிறார்" ஊழியத்தினுடைய அஸ்திபாரம் "ஆண்டவராகிய இயேசு" என்பதை அவர்கள் அறியாதிருந்தபடியால், அந்தவிதமாக சாதனை புரிந்து விடலாம் என்று எண்ணி, பல்வேறு முயற்சியில் ஈடுபட்டார்கள். கணக்கு களை சரிபார்க்கும் மக்கள் திடீர், திடீரென்று வந்து எல்லா வற்றையும் சோதனையிட்டனர்.

அலுவலகம் ஒன்றில் வயிற்றுப் பிழைப்புக்கென்று உண்மை யுடன் இராப்பகலாக உழைத்துக் கொண்டும், பல்வேறு பாடுகளின் மத்தியில் எஞ்சிய நேரங்களிலெல்லாம் தேவனுக் கென்று உயிரைக் கொடுத்து உழைக்கும் நிலைமையிலும், இப்படிப்பட்ட மக்களின் செய்கை என் கணவரின் இருதயத்

தையும், அவரோடு சேர்ந்த எங்கள் அனைவரின் இருதயத் தையும் பிளக்கத்தான் செய்தது.

இவைகள் அனைத்தின் மத்தியிலேயும் கூட அமைதலோடு, பொறுமையோடு ஆண்டவரின் நாம மகிமைக்கென்று, அவருடைய சித்தத்தை நிறைவேற்ற, சகோதரர் தினகரன் தீர்மானித்தார். எந்த மனிதனாலும் பல்வேறு திசைகளிலிருந்து ஒரே சமயத்தில் வரும் இவ்விதமான ஈட்டியின் தாக்குதலை தாங்கிக்கொள்ளவே முடியாது. கர்த்தரோ அந்த நிலைமையிலும் நாங்கள் ஒருமனதுடன் ஆண்டவரின் முகத்தை நோக்கிப் பார்த்து ஆறுதல்பெற, பெலன்பெற, அற்புதமாக கிருபை அருளிச்செய்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தவன் வேறு யாருமல்ல, அவரோடு தோளோடு தோள் நின்ற அவருடைய சீஷனே! அதுபோன்ற அனுபவங்களையே நாங்களும் அனுபவித்தோம்.

> ...பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென் கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்து கேள்விப் பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்;... **யாக்கோபு 5:11**

என்ற வேத வாக்கிற்கிணங்க, கர்த்தர் இந்த நாட்களி லெல்லாம் தம்முடைய தெய்வீகக் கிருபையையும், பொறுமையையும் அருளிச் செய்தார்! கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் இவ்விதமாய் பெருகினது போல, அவருடைய ஆறுதலும் எங்களுக்குப் பெருகியது *(2 கொரிந்தியர் 1:5)*.

> ...உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். **1 யோவான் 4:4**

பேசுகிறவர்கள் பேசட்டும், நிந்திக்கிறவர்கள் நிந்திக் கட்டும். தேவனுடைய வல்லமையின் மேன்மையை அறியாததினால்தான் அவ்விதமாக அவர்கள் பேசத்

துணிகிறார்கள். அதற்கேற்ற பலனை கர்த்தரிடம் அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். நாமோ நம்முடைய பாடுகளி லிருந்து நம்மை மீட்க வல்ல நமது இரட்சகரையே பின்பற்றுவோம்.

என் மகள் ஏஞ்சல் சிறு வயதில் ஒவ்வொரு முறையும் கண்ணீரோடு எங்களை ஊழியத்திற்கு அனுப்பி வைப்பாள் என்று முன்பகுதியில் எழுதினேன். நாட்கள் செல்லச் செல்ல சற்று வயதில் பெரியவளானவுடன் தன் மனக்கவலைகளை, இவ்விதமாக செய்ய வேண்டிய தியாகங்களினால் உண்டான வேதனைகளை தன் மனதிற்குள் அடக்கிக்கொள்ளும் சுபாவ த்தைப் பெற்றிருந்தபடியால், அமைதலாக தன் வாழ்க்கையைக் கடத்தி வந்தாள். ஏறக்குறைய 12 வருடங்கள் அப்படியாக அடிக்கடி தனிமையில் அவள் வாழ வேண்டிய சந்தர்ப்பங்கள் வந்தன. 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் தேதியன்று 12-வது வகுப்புத் தேர்வினை முடித்திருந்தாள். அந்நாட்களில் நானும், என் கணவரும், மகனுமாக மலேசியா நாட்டில் ஊழியம் செய்ய சென்றிருந்தோம். "மகள் தேர்வை முடித்துவிட்டாள். இனி நம்மோடு ஊழியத்தில் பங்குபெறட்டும்" என்று தேவ ஏவுதல் பெற்றவளாக என் கணவரிடம் சொல்லி அன்று இரவே மலேசியா வந்து சேரும்படி ஏற்பாடுகளைச் செய்தோம். ஏப்ரல் 30-ஆம் தேதி புறப்பட்டு, வந்து சேர்ந்தாள். ஒருசில நாட்கள் எங்களோடு தங்கியிருந்தாள். அவளுக்கு ஒரே சந்தோஷம்!

நான்குபேருமாக மிகுந்த சந்தோஷத்தோடு ஊழியத்தை முடித்து மே 6-ஆம் தேதி திரும்பி வந்தோம். மே 11, ஞாயிற்றுக் கிழமை அன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில், என் மகன் தன் தங்கையிடம், "நீ பங்கெடுத்துக் கொண்ட மலேசியா ஊழியத் திலே கர்த்தர் செய்த பல்வேறான நன்மைகளை எல்லோரிடமும் பகிர்ந்துகொள்" என்று அவளிடம் கேட்டபோது மிகுந்த சந்தோஷத்துடன் முதல் முறையாக யாவர் மத்தியிலேயும் சாட்சி கூறி, கர்த்தரை மகிமைப்படுத்தினாள். அடுத்த ஞாயிறு 18-ஆம்

தேதி அன்று சென்னை மெரினா கடற்கரையில் நடந்த பேரின்பப் பெருவிழாவில் கடைசி கூட்டத்தில், ஆண்டவரை மகிமைப் படுத்தும்படியாக அழகிய பாடல் ஒன்றையும் தைரியமாய் மேடை ஏறிச்சென்று பாடினாள்.

அவளுடைய மேற்படிப்பிற்கான காரியங்களைக் கவனிப்பதில் அடுத்த இரண்டு நாட்களும் நானும், அவளும் முற்பட்டோம். மே 21-ஆம் தேதி அதிகாலையில் நானும் என் கணவரும் மங்களூர் பட்டணம் செல்வதாக இருந்தது. "இத்தனை நாட்களும் நான் தனியாக இருந்தேன். இந்த முறை நானும் உங்களோடு வருவேன்" என்று சிறு குழந்தையைப் போல முந்தைய நாள் இரவு 11 மணி வரை எங்களோடு போராடினாள். எல்லா ஒழுங்குகளையும் உடனடியாக செய்து, அடுத்த நாள் காலை விமான நிலையம் செல்வதற்காக மகள் ஏஞ்சலுடன் நானும், என் கணவரும், என் சகோதரியின் மகனும் காரில் ஏறி புறப்பட்டுச் சென்றோம். விமான நிலையத்தை அடைவதற்கு சற்று முன்பதாக, எதிரே வந்த பேருந்து ஒன்று எங்கள் காருடன் வந்து மோத, நாங்கள் பெரிய விபத்துக்குள்ளானோம். மகிழ்ச்சி யோடு வந்த அன்பு மகளின் தலையின் பின்புறம் பலத்த அடிபட்டதினால், அந்த இடத்தில் தானே மிகுந்த அமைத லோடு யாதொரு சத்தமுமின்றி மயக்க நிலையிலானாள். அருகிலிருந்த வைத்தியசாலைக்கு அவளைக் கொண்டுபோ னோம். அப்பொழுது என் மனதில், "என் கர்த்தர் என்னைக் கைவிடமாட்டார், என் குழந்தைக்கு யாதாதொரு சேதமும் வராது, என் குடும்பத்தை உடைக்கமாட்டார்" என்ற விசுவாசம் மேலும் மேலும் எழும்பி வந்தது. ஆனால் சில வினாடிகளில் அவளுடைய உயிர் பிரிவதையும் என் கண்ணால் பார்த்தேன்.

எனினும் அந்த சமயத்திலும் என் மனக்கண்கள், என் மகளை அந்த மரணக்கட்டிலிருந்து மீட்க வல்ல ஆண்டவராகிய இயேசு வையே நோக்கிக் கொண்டிருந்தன! என் மகளை கர்த்தர் நிச்சயம் உயிரோடு எழுப்புவார் என்ற நம்பிக்கையே மேலோங்கி நின்றது.

...விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயி ருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

எபிரெயர் 12:1

விபத்தில் அடிப்பட்ட என்னையும், என் கணவரையும், என் சகோதரியின் மகனையும் ஒரு மருத்துவமனையில் வைத்து பராமரித்து வந்தார்கள். அனுதினமும் மகளுக்காக இருவரும் சேர்ந்து ஜெபிப்போம். வருவோரிடமெல்லாம் மகளின் சுகத்தை பற்றி கேட்போம். ஆறு நாட்கள் கடந்தன! அவள் மரித்துவிட்ட தையும், ஆஸ்பத்திரியில் குளிர்சாதான அறையில் மரித்த அவள் உடலை வைத்திருப்பதையும் அதுவரை எங்களுக்கு அறிவிக் காமல் மறைத்து வைத்திருந்தனர். மகன் பால் மாத்திரம் தன் நெஞ்சத்திலே எங்களைப் பற்றிய கவலையோடுகூட, தன் அன்பு சகோதரியின் மரித்த சடலத்தை அனுதினமும் வெளியில் எடுக்கச் செய்து கண்ணீர்விட்டு ஜெபித்து, எப்படியாவது உயிரோடு தங்கை எழும்ப மாட்டாளா என்று போராடியிருக் கிறான். ஆனால், எந்த ஜெபமும் இந்த விஷயத்தில் கர்த்தரால் கேட்கப்படவில்லை.

என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லு கிறார்.

பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக் கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. ஏசாயா 55:8,9

ஆம்! சிற்சில சமயங்களில் ஆண்டவருடைய காரியங்கள், அவர் வழிநடத்தும் விதம் நமக்குப் புரிவதேயில்லை.

மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்;...

உபாகமம் 29:29

ஏஞ்சலை இழந்த நாங்கள் நால்வரும், ஒருவரிடம் ஒருவர் சரியாகப் பேசாமல், துக்கத்தின் மேலீட்டால் மௌனம் சாதித்தவர்களாய், கண்ணீரே உணவாக நாட்களைக் கடத்தி வந்தோம். வழக்கம்போல் காலையிலும் மாலையிலும், கடனே என்று ஜெபித்து வந்தோம். இனி "இயேசு நல்லவர்" என்று எப்படி பிரசங்கிக்க முடியும், எப்படி புத்தகத்தில் எழுத முடியும்? என்ற கேள்விக் குறி எங்கள் ஒவ்வொருவர் கண் முன்பதாகவும், தோன்றி மறைந்தது. பதில் புரியாதவர்களாக, "ஏன் கர்த்தர் இப்படி செய்தார்?" என்ற கேள்வியையே திரும்பவும், திரும்பவும் மனதிற்குள் கேட்டோம். "என்னில் ஏதோ குறை இருக்கிறது. ஆகவே தான் இந்த தீமை என் மகளுக்கு ஏற்பட்டிருக்கிறது" என்று கலங்கினேன்.

இப்படியாக கண்ணீரிலேயே எங்கள் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தபோது, ஒருநாள் வழக்கம்போல் குடும்ப ஜெபம் செய்ய முழங்காற்படியிட்டோம். அவளை அடக்கம் செய்து ஏறக்குறைய ஒருமாதம் முடிந்திருந்தது. கர்த்தர் எங்கள் மத்தியில் பரிசுத்த ஆவியானவர் மூலமாக இறங்கி, ஏஞ்சலை இழந்தபிறகு முதல் முறையாக எங்களோடு பேசினார். "என் அன்பு மகனே! உன் அன்பு மகள் ஏஞ்சல் பரலோகத்தில் என் னோடுகூட இருக்கிறாள். பிசாசுக்கு முன்பதாகவும், பரலோகத் திலுள்ள தேவ தூதர்கள் முன்பதாகவும் இந்த பெரிய இழப்பிற்கு பிறகும் நீ தொடர்ந்து என் சேவையைச் செய்வாய் என சவால் விடுத்து வந்திருக்கிறேன். நீ அவ்வாறே தொடர்ந்து என் ஊழியத்தைச் செய்வாயோ அல்லது என்னை வெட்கத்திற்குட் படுத்துவாயோ?" என வினவினார்.

தேவாதி தேவன் இவ்வாறு கேட்கும் கேள்விக்கு என்ன பதில் தர இயலும்? நாங்கள் நால்வருமாக கண்ணீரோடு, "ஆண்டவரே, நீரே எங்கள் நம்பிக்கை! தொடர்ந்து உம் ஊழியத்தைச் செய்வோம். எங்கள் பிள்ளை எங்களைவிட்டு நிரந்தரமாகப்

போய்விட்டதினால் எங்கள் உள்ளம் சொல்லமுடியாத துக்கத்தினால் நிறைந்திருக்கிறது. எனினும் உம்மையன்றி வேறே ஆறுதல் எங்களுக்கு ஏது? எங்களைத் தாங்கி பெலப்படுத்தும். நீர் எங்களைக் கொண்டு என்ன செய்ய சித்தமாயிருக்கிறீரோ அதை செய்ய கிருபை தாரும்" என்று அவரிடத்தில் சரணடைந்தோம். ஆம், அன்பானவர்களே! மரணம் கொடியது! எனினும் கர்த்தர் அந்த வழியாய் நம்மை நடத்திச் செல்லும்போது நாம் என்ன சொல்ல முடியும்? "உம் சித்தம் எங்கள் பாக்கியம். நீரே கொடுத்தீர். 18 வருடங்கள் அன்பு மகளுடன் நாங்கள் சந்தோஷமாய் இருந்தோம். இன்று உம்மிடத்தில் அவளை சேர்த்துக் கொண்டீர். உமக்கு ஸ்தோத்திரம்" என்று மாத்திரமே எங்களால் சொல்ல முடிந்தது. "நீர் ஏன் இப்படிச் செய்தீர்?' என்று கேட்க நாங்கள் எம்மாத்திரம்.

> மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.
>
> யோபு 7:17,18; சங்கீதம் 8:4; எபிரெயர் 2:6

நமக்குப் பிரியமில்லாத சம்பவங்கள் நம் வாழ்வில் நடந்துவிட்டதினால் தெய்வத்திடம் கோபித்துக் கொள்வதினால் யதொரு பயனுமில்லை. நமக்குத்தான் அதினால் நஷ்டம்.

"கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்", "எங்களை இம்மட்டுமாய் நடத்தி வந்த ஆண்டவரே! நீரே எம் கதி" என்று அவரையே இறுகப்பற்றி, அவர் தந்த தெய்வீக ஆறுதலால் நிறைந்தோம். நாட்களும், மாதங்களும், வருடங்களும் உருண்டோடினாலும் மகளை பற்றிய நினைவு வரும்பொழுதெல்லாம் இன்றும் நெஞ்சம் உடையத்தான் செய்கிறது.

> ...என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

...இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்...

1 பேதுரு 1:6,7

என் அன்பு சகோதரிகளே! இந்த உலகத்தின் பாடுகளைக் குறித்து கவலைப்பட்டு சோர்ந்து போகாதிருங்கள். தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் பாடுபட்டார். அதினிமித்தம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (எபிரெயர் 5:8). அப்படியாயின் நாமும் பாடுகளினூடே கடந்துசெல்வது தேவ சித்தமே! அவைகள் முட்களைப் போல் நம்மைக் குத்தி, நம்மை தேவனைப்படுத்துவதால் கவலையே உருவாய் மாறிவிடாமல், ரோஜா மலர் மலருவதைப் போன்று உங்கள் வாழ்வும் நிச்சயம் அழகுபட மலரும் என்பதை எதிர்பார்த்து மகிழ்ச்சியாயிருங்கள்.

5 வாழ்வில் நறுமணம்!

கடந்த அத்தியாயத்தில் கண்ணீர் நிறைந்த பாடுகளைப் பற்றி நாம் வாசித்தோம். ஆனால், கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை கண்ணீரிலேயே காலத்தைக் கடத்தும்படி விட்டு விடமாட்டார். நிச்சயமாக அதற்கு ஒரு முடிவை உண்டாக்கி, தம்முடைய கிருபையினால் அத்தகையோரை முடிசூட்டி, கெம்பீரமான ஒரு வாழ்வை நிச்சயம் அருளிச் செய்வார் என்ற உண்மையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன். சகரியா 9:12

உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும். ஏசாயா 61:7

ஆம்! மேற்கண்ட வாக்குகள், உண்மையும் உத்தமமுமான தேவனுடைய அடியார்கள் வாழ்க்கையிலே நிச்சயமாகவே நடக்கும். "யோபு" என்ற பக்தனுடைய வாழ்க்கை சரிதையை வேத புத்தகத்திலே நாம் ஆழ்ந்து வாசிக்கும் போது, இந்த உண்மையை அறிந்துகொள்ளலாம். சீரும் சிறப்புடனும் ஓர் காலத்தில் அவன் வாழ்ந்தான். ஒரு குறைவுமின்றி எல்லாவிதத்திலும் சீமானாய் ஆசீர்வதிக்கப்

பட்டிருந்தான். "எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித்திரியும் பிசாசு" *(1 பேதுரு 5:8)*, அந்த பக்தனை மட்டும் விட்டுவிடுவானா என்ன? அவனையும் பற்பல விதங்களில் சித்திரவதை செய்து, "இயேசுவின் பக்தனாக வாழ்வதிலிருந்து வழி விலகச் செய்யவேண்டும்" என்று தீர்மானித்தான் அந்தப் பொல்லாத சோதனைக்கார னாகிய பிசாசு *(மத்தேயு 4:3; 1 தெசலோனிக்கேயர் 3:5)*. ஆனால் ஆண்டவரை நூற்றுக்கு நூறு சதவீதம் நம்பியிருந்த அவரது உண்மை அடியானாகிய யோபுவை அவர் கைவிட வேயில்லை. நம்முடைய வாழ்விற்கு யோபு பக்தனின் வாழ்க்கை முன்மாதிரியாய் இருக்கும்படி, அந்தக் கடின பாதையின் வழியாக அவன் செல்வதற்கு ஆண்டவரும் அனுமதித்திருந்தார் *(யோபு 2:6)*.

> அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். **ரோமர் 8:28**

என்ற தேவனுடைய வார்த்தையின்படி முடிவில் அதே தேவதாசன் எத்தனை அழகாய் இரண்டு மடங்கான ஆசீர் வாதங்களை தேவனுடைய கரத்திலிருந்து பெற்றான் என்பதை வேதம் தெளிவாகக் கூறுகிறது *(யோபு 42:10-17)*.

இந்தவிதமான ஆசீர்வாதத்தை தேவனுடைய அடியார்கள் ஒவ்வொருவருக்கும் அவர் அருளிச் செய்கிறார். மோசே ஜெபித்ததுபோல, துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்குச் சரியாய் தம் அருமைப் பிள்ளைகளை மகிழ்ச்சிக்குள்ளாக்கு கிறார் *(சங்கீதம் 90:15)*. ஆம்! இப்படிப்பட்ட அன்பின் நற்கிரியைகளை ஆண்டவர் இயேசு ஒருவரால் தான் நம் வாழ்க்கையில் நிறைவேற்ற முடியும். பற்பல துன்பங்களின் நடுவாக கடந்து சென்ற நானும் இதே வண்ணமாக

முடிவில் ஆசீர்வாதங்களைப் பெற்று, ஆண்டவர் அருளிய மகிழ்ச்சியினால் நிரப்பப்பட்டேன்.

குழந்தையற்று ஒருசில வருடங்கள் தவித்த எங்களை ஆண்டவர் மனமிரங்கிக் கொடுத்த இரண்டு பிள்ளைகளாலும் எவ்வளவோ ஆசீர்வாதங்களால் நிறைத்தார். இதைச் செய்த எம்பிரான் இயேசு பெருமானுக்கே என் இதயம் கனிந்த நன்றியை ஏறெடுக்கிறேன்.

மகனுடைய வாழ்க்கையிலே, ஆண்டவரைவிட்டு, அவன் பின்வாங்கி ஜீவித்த நாட்களில் நாங்கள் அதிகம் கலங்கிக் கண்ணீர் வடித்தோம். ஆனால், தேவன் தம்முடைய மிகுந்த கிருபையினால் அந்த நாட்களில் நாங்கள் அனுபவித்த துன்பத்தையெல்லாம் மாற்றி, பல மடங்கு இன்பம் அனுபவிக்க அருள்புரிந்தார். அவர் அவனை தம்முடைய அடியானாக மாற்றினார்! தம்முடைய ஆவியின் அருள்மாரியினால் அவனை நிறைத்து அபிஷேகித்தார்! தம்முடைய ஊழியக்காரனாகவும் மாற்றினார்! அது மட்டுமா, ஊழியத்தில் வைராக்கியமாய் இருந்த அவனுக்கு உலகப் பிரகாரமான கல்வி ஞானத்தையும் ஏராளம் அருளிச் செய்தார்! "அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" *(சங்கீதம் 1:3)* என்ற வார்த்தையின்படி, தேவன் அவனுடைய கல்வியிலும், யாவற்றையும் வாய்க்கும்படி செய்து பி.எஸ்ஸி., எம்.பி.ஏ., ஆகிய பட்டப் படிப்புகளை முடித்து பி.எச்.டி., பட்டத்தையும் அவருடைய நாம மகிமைக்கென்று பெறும்படியாக செய்தார். இவைகளெல்லாம் அவனுக்கு தேவன் தந்த வெகுமதி அல்லது அவருடைய கிருபையின் ஈவுகள் என்று சொன்னால் அது மிகையாகாது!

"என் மகன் அல்லது மகள் கேவலமான நிலைமையில் இருக்கிறார்களே, இவர்களுடைய நல்வாழ்வை நான் காண்பேனா" என்று கலங்குகிற சகோதரிகளே! கவலைப்

படாதிருங்கள்! இவர்களுடைய வாழ்க்கையை மாற்றி யமைக்க வல்லமையுள்ளவர், நம்முடைய அன்பு ஆண்டவர் மாத்திரமே! உங்களாலும் என்னாலும் இதை ஒருநாளும் செய்ய முடியாது. நம்முடைய முயற்சிகள் அனைத்தும் விருதாவாகும். அவரே கிருபையும், இரக்கமும் நிறைந்த ஆண்டவர். நான் செய்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான்! "அன்னாள்" என்ற பக்தியுள்ள பெண், ஆண்டவரின் பாதத்தை இறுகப் பற்றிக்கொண்டு தன்னுடைய மனக் கிலேசங்களையெல்லாம் அவர் சந்நிதியில் ஊற்றிவிட்டது போன்று, நானும் ஆண்டவரின் பாதத்தை இறுகப் பற்றிக் கொண்டேன். அவரே மகனுடைய வாழ்க்கையை மாற்றி, காரியங்களை வாய்க்கச் செய்தார். உங்களுக்கும் இந்த மேலான ஆசீர்வாதங்களை அவர் நிச்சயம் தருவார்!

அதுபோன்றே என்னுடைய அன்பு மகள் இவாஞ்சலினை குறித்து பலவிதமாக எண்ணி மகிழ்ந்தேன். ஏனென்றால், சிறு வயதிலிருந்தே அவளுடைய அன்பும், பாசமும் எங்கள் குடும்பத்தினர் மீது மட்டுமன்றி ஏனையோரிடமும் விசேஷமாக ஏழை எளியவர்களிடம் ஒப்பற்றதாய் காணப் பட்டது. எங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு காரியத்தை எழுதுகிறேன்.

1977-ஆம் ஆண்டு டிசம்பர் 17-ஆம் தேதியன்று என்னுடைய கணவரின் தாயார் ஆண்டவரின் பாதத்தை அடைந்தார்கள். அவர்களுடைய நல்லடக்கம் முடிந்த பிறகு, அருமைத் தகப்ப னாரை எப்படி ஆறுதல்படுத்துவது, பல வருடங்களாக அவர் களோடு ஒரே அறையில் தங்கியிருந்த அத்தை அவர்களின் பிரிவிற்குப் பிறகு, அன்று இரவு எப்படி அவர்களை தனியே உறங்க வைப்பது என்று மனதிற்குள் நாங்கள் இருவரும் சிந்தித்துக்கொண்டு கவலையோடு இருந்தோம்.

உறங்கவேண்டிய வேளை வந்தது! அப்பொழுது என் மகளுக்கு 9 வயது. சிறுமியாகிய அவள் தன் படுக்கையைச்

சுருட்டிக்கொண்டு, பெற்றோராகிய எங்களிடம் வந்தாள். "அம்மா! அப்பா! தாத்தாவும், பாட்டியும் இதுவரை ஒன்றாகப் படுத்திருந்தார்கள். இப்பொழுது பாட்டி இல்லை. நான் தாத்தா வோடு படுத்துக்கொள்ளட்டுமா? தாத்தா தனியாக இருப்பார் களே! பாவம்!" என்றாள். நானும், என் கணவரும் இதைக் கேட்டபோது மிகுந்த ஆச்சரியம் அடைந்தோம். "9 வயது சிறுமியின் உள்ளத்தில், பெரியவர்கள் உள்ளத்தில் ஏற்படும் அன்பல்லவா காணப்படுகிறது" என்று அவளைக் குறித்து பெருமிதமடைந்தோம். ஆகவே, "வரப்போகிற வருடங்களில் ஏழை எளிய மக்களுக்கு, இருதயம் நொறுங்குண்டோருக்கு இனிமையான ஔஷதமாக கர்த்தருடைய கிருபையினால் விளங்குவாள்" என்று மனதிற்குள் எண்ணி, அத்தகைய அன்புள் ளம் கொண்ட குழந்தையைக் கொடுத்த எம்பிரான் இயேசுவுக்கு துதி, ஸ்தோத்திரங்களை ஏறெடுத்தோம். ஆனால், அந்தோ!

ஆண்டவரின் வழியும், அவருடைய சித்தமும் வேறு விதமாய் இருந்தது.

1986-ஆம் ஆண்டு மே 21-ஆம் தேதி அன்று அவள் தன்னுடைய 17-வது வயதில் எங்களைவிட்டு ஆண்டவரண்டை போய் சேர்ந்தாள். எங்களுக்கு மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாற்போன்று எங்கும் இருளாயிருந்தது. "நாங்கள் நினைத் தது ஒன்றும் நடக்கவில்லையே" என்று எங்கள் உள்ளம் ஆறுதல லின்றி தவித்தது. அப்படிப்பட்ட சமயத்தில் அநேக சகோதர, சகோதரிகளிடமிருந்து வந்த கடிதங்கள் எங்களை உற்சாகப் படுத்தி மறுபடியும் தூக்கி நிறுத்தியது. அவர்கள் எங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களல்ல! ஆனால் அவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், அவர்கள் மனமுடைந்து, செய்வதறியாதுதிகைத்துநின்ற நேரங்களில், சொப்பனங்களிலும், தரிசனங்களிலும் அன்பு மகள் ஏஞ்சல் அவர்களுக்குக் காணப் பட்டு எவ்வாறு அவர்களுடைய கஷ்டங்களிலிருந்து ஆறுதலை அருளிச் செய்தாள் என்று தெரிவித்தபோது, எங்கள் மனதிற்கு

அது அதிக ஆறுதலைத் தந்தது. இந்தப் பொல்லாத உலகில் துயரங்களினாலும், துன்பங்களினாலும், தனிமையினாலும் படும் பாடுகளிலிருந்து, கர்த்தர் நிரந்தரமாக அவளை விடுவித்து, நித்திய மகிழ்ச்சி நிலவும் பரம ராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டார்.

நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; புத்திமான்கள் எடுத்துக்கொள்ளப்படு கிறார்கள், ஆனாலும் தீங்குவராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை.

நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசி த்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்.

ஏசாயா 57:1,2

எங்களுக்கு இன்றும், என்றும் அது பெரிய இழப்பும் வேதனை யுமான காரியமாயிருந்தபோதிலும் இன்றும் அவள் பாடல்கள், கண்ணீரில் வாழ்பவர்களுக்கு ஆறுதல்தரும் கருவியாக அமைந்திருப்பது அளவிலா மகிழ்ச்சியை எங்கள் உள்ளத்தில் பிறப்பிக்கிறது.

எங்களுடைய அருமையான உற்றார், உறவினர் யாவரும் எங்களை தேவன் நடத்தி வந்த வழிநடத்துதலைப் பற்றிய மேன்மையை விளங்கிக் கொள்ளாமல், எங்களை பல சமயங்களிலும் அலட்சியப்படுத்தியபொழுது எங்கள் மனம் அதை நினைத்து அதிகமாய் கவலைக்குள்ளாகியது! ஆனால், அந்த சமயத்திலும் கர்த்தருக்குள் வைராக்கிய மாய் அவரைப் பின்பற்றி வந்தோம். நாட்கள் கடந்தன! கர்த்தர் எங்களுடைய வாழ்க்கையில் "இல்லாமை" என்ற இருளை அற்புதமாக அகலும்படிச் செய்தார்.

கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.

நீதிமொழிகள் 10:22

என்றபடி, படிப்படியாக ஆசீர்வாதங்களைக் கட்டளை யிட்டார்.

அன்பு சகோதரிகளே! கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க நினைத்தால் "இது எப்படி ஆகும்" என்று நாம் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அவர் அதிசய மானவர்! "என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ" (எரேமியா *32:17,27*) என்று அவர் நம்மைப் பார்த்து கேட்கிறார். அப்படித்தான் எங்கள் வாழ்க்கையி லும் தேவனுடைய ஆசீர்வாதம் ஐசுவரியமாக விளங்கிற்று. ஆனால், ஒருநாளும் எங்கள் கண்கள் அந்த ஐசுவரியத்தின் மேல் விழுந்ததேயில்லை என்பதை தேவனுடைய சந்நிதா னத்தில் நான் உண்மையாய் சொல்லக்கூடும். பதவி, பட்டம், அந்தஸ்து இவைகளெல்லாம் எங்கள் கண்களில் பெரியதாகத் தோன்றவில்லை. கர்த்தரையே ஒவ்வொரு படியிலேயும் மேன்மைப்படுத்தி வந்தோம். "நீங்கள் என்னை உண்மையாய் பின்பற்றினபடியால், என்னுடைய அசீர்வாதம் நிறைந்த ஐசுவரியத்தால் உங்கள் இல்லத்தை நிரப்புவேன். போதும் ஆண்டவரே, இடமில்லையே என்று நீங்கள் சொல்லும் வரை ஆசீர்வதிப்பேன்" என்று அவர் அடிக்கடி எங்களோடு பேசி, எங்களை உற்சாகப்படுத்தி னார். அப்படியே அதை நிறைவேற்றவும் செய்தார். உங்கள் வாழ்க்கையிலும் அவர் செய்வார். ஏனென்றால், அவர் பட்சபாதமற்றவர் (அப்போஸ்தலர் *10:34*; ரோமர் *2:11*) அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் (மல்கியா *3:6*; எபிரெயர் *13:8*).

கர்த்தர் எங்கள் வாழ்க்கையில் அருளிச் செய்த மேலான ஆசீர்வாதங்களைக் கண்ணுற்ற எங்களுக்கு அருமையானோர், உண்மையாகவே தேவன் எங்களை வழிநடத்துகிறார்; நாங்கள் வாழும் வாழ்க்கை ஆண்டவருக்குப் பிரியமானது என்பதை அறிந்து கொண்டவர்களாய், தாங்களும் இந்த நல்ல வழியைப்

பின்பற்ற விருப்பம் கொண்டனர்! ஒவ்வொருவராக, விசேஷமாக ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள குழந்தைகளும் கர்த்தரைப் பற்றிப் பிடித்துக் கொண்டனர். பல வருடங்களாக இந்த அன்பு மக்களின் நல்வாழ்விற்காகவும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும் ஆண்டவரண்டை விடாப்பிடியாகப் போராடி ஜெபித்து வந்த என் உள்ளத்திற்கு இந்த மாற்றங்கள் எல்லையில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது! இன்று அநேகர் இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பெற்று ஆண்டவருக்கென்று ஊழியம் செய்து வருகிறார்கள்! எங்களுக்குப் பெருமையும், பேராசீர்வாதமுமாய் இருக்கிறார்கள்.

ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் தனிமையில் நாங்கள் எல்லாவற்றையும் மிகவும் கஷ்டப்பட்டு செய்துவந்தோம். ஆனால் இன்று ஆயிரக்கணக்கான தேவனுடைய பிள்ளை கள் எங்களை பலப்படுத்தி, உற்சாகப்படுத்தி வருகிறார்கள். 1986-ஆம் ஆண்டு கார் விபத்து நேர்ந்த சமயத்தில், எங்கள் இருவரையும் மருத்துவமனையில் அனுமதித்திருந்த நாட்களில், இந்த செய்தியைக் கேட்ட மக்கள் பற்பல ஊர்களிலிருந்து புறப்பட்டு வந்து, இரவென்றும் பகலென் றும் பாராமல், மருத்துவமனை வாயிலில் நின்றுகொண்டு கண்ணீர்விட்டு கதறினர். "எங்கள் ஐயாவும், அம்மாவும் எப்படி இருக்கிறார்கள்? எங்களுக்கு அவர்களைக் காண அனுமதி கொடுங்கள்" என்று சொந்த குடும்பத்தின் மக்களைப் போல், கதறி, கண்ணீர் வடித்தனர். "கர்த்தர் எப்படியாவது மகள் ஏஞ்சலுடைய உயிரைத் திரும்ப கொடுக்க மாட்டாரா?" என்று சக ஊழியர்களும், அன்புள் ளம் கொண்ட மக்கள் பலரும் இரவென்றும் பகலென்றும் பாராமல் உபவாசமிருந்து, வீடுகளிலும், "இயேசு அழைக்கிறார்" அலுவலகத்திலும் கண்ணீர்விட்டு கதறி ஜெபித்தனர். இப்படிப்பட்ட அன்பும், ஆறுதலும் யாருக்கு கிடைக்கும்? கர்த்தர் எங்களுக்கு அருளிய பாக்கியம் இவைகள் என்று சொன்னால் மிகையாகாது!

இன்றும் ஏதாவது தேவை என்றால் உடனடியாக கர்த்தருடைய பிள்ளைகள் ஓடோடி வந்து எங்களை உற்சாகப்படுத்துவது, எங்கள் நொந்துபோன உள்ளத்திற்கு எத்தனை ஆறுதலை அளிக்கிறது! இவைகளெல்லாம் கர்த்தருடைய கிருபை இல்லாமலிருந்தால் நடக்குமா? எந்த மனிதனாவது, வேறு ஒருவருக்காக உபவாசமிருந்து கண்ணீர் வடிப்பானா?

மகனுடைய திருமணத்திற்கு முயற்சி எடுத்தோம். அதிலும் நெருங்கிய நண்பர்கள் பலர் தங்களுடைய பிள்ளைக்கு முயற்சிப்பதை போன்று அத்தனை அன்புடன் எங்களோடு ஒருமனப்பட்டு முயற்சியில் ஈடுபட்டார்கள். அத்தகைய அன்பர்களின் முயற்சியாலும், தேவ கிருபை யினாலும், தகுந்த துணையை அவனுக்கென தெரிந்தெடுக் கவும் அதன்பின்னர், திருமண ஏற்பாடுகளைக் கவனிப் பதிலும் இரவென்றும், பகலென்றும் பாராமல், தீவிரமாக ஈடுபட்டனர் இந்த தேவனுடைய பிள்ளைகள்! எங்கள் பின்னதாக ஒரு பெரிய சேனையே இருப்பதைப் போன்று பெருமிதம் கொண்டோம் நாங்கள்!

நாங்கள் இருவர் மாத்திரமல்ல, எங்கள் குடும்பம் பெரிய குடும்பம்! இது இயேசுபிரான் இவ்வையகத்தில் அளித்த மாபெரும் கிருபையினால் உண்டான குடும்பம் என்று எண்ணி இன்பமடைந்தோம்.

1986-ஆம் ஆண்டு எங்கள் குடும்பத்தில் அன்பு மகளை இழந்த பேரிழப்பு ஏற்பட்ட அதே சமயத்தில், திருநெல்வேலி யில் மகாராஜா நகரில் ஒரு குடும்பத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. அந்த குடும்பத்தினர் அனைவரும் "இயேசுவே தெய்வம்" என்பதை அறியும்படியாகவும், அவருக்கு பூரணமாய் தங்களை ஒப்புவிக்கும்படியும் கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். அப்படியாக அவர்கள் இயேசுவுக்கென்று வாழத் தீர்மானித்த அந்நாட்களில், அவர்களுடைய சிறிய மகள், இறந்த எங்கள்

மகள் ஏஞ்சலின் நினைவாக "இவாஞ்சலின்" என்ற பெயரை தானும் சூட்டிக் கொண்டாள். அந்த நாட்களில் அவர்கள் குடும்பத்தில் ஓர் பெரிய அற்புதம் நிகழ்ந்ததினிமித்தம் இப் பெருத்த மாறுதல் ஏற்பட்டது. வருடங்கள் மூன்று கடந்தன! அந்தக் குடும்பத்தினரோடு தங்குவதற்கென போதகர் ஒருவர் சென்றிருந்த நாட்களில், அந்த குடும்பத்தினருடைய பக்தி வைராக்கியத்தைக் கண்டு, என் கணவரிடம் இதை கூறினார். கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக அதிகம் ஜெபித்தோம். கர்த்தர் அந்தக் குடும்பத்தின் சிறிய மகளாகிய இவாஞ்சலினை என் அன்பு மகன் பாலுக்கு மனைவியாக ஏற்படுத்தி கொடுத்தார். மகளை இழந்து தவித்த எங்கள் உள்ளத்திற்கு அவள் வருகை பெரிய ஆறுதலைத் தந்து வருகிறது. அதோடுகூட அதே பெயரினை அவள் கொண்டிருந்தது மேலும் மகிழ்ச்சியைத் தந்தது. இந்த ஆசீர்வாதங்களுக்கெல்லாம் காரணம், அநேக தேவஊழியர்கள், தேவமக்களின் கண்ணீர் நிறைந்த ஜெபம்தான்.

இப்படித்தான், நம் தனிமை வாழ்வை கர்த்தரிடம் ஒப்புவிக்கும்போது, முடிவில் நம் தியாகத்திற்கு பதிலாக, ஆயிரமாயிரமான தம் மக்களைக் கொண்டு நம்மைத் தாங்குவார். எனவே, "ஐயோ, நான் இந்த இடத்தில் தனிமையாய் இருக்கிறேனே! ஆண்டவருக்கென்று தனிமை வாழ்வு வாழ வேண்டியதாய் இருக்கிறதே! என்றெல்லாம் கவலைப்படாதிருங்கள்!

ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.
1 பேதுரு 5:6

தேவனுடைய தாசனாகிய தாவீது, தனக்கு வந்த பல பாடுகளில் சோர்ந்து போகாதபடி, கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான் *(1 சாமுவேல் 30:6)*. ஆகவே, அவனுடைய வாழ்க்கை கண்ணீரிலேயே கழியும்படி அவர் விடவில்லை. அவனுடைய விருப்பத்தையெல்லாம்

பூர்த்திசெய்து, பூரண வயதுள்ளவனாய் தேவ ஆசீர்வாதத்தோடு அவனுடைய வாழ்வை முடிக்கும்படி செய்தார். அதுபோன்றே, தேவனுடைய அடியார்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் தம்முடைய கிருபை நிறைந்த நறுமணம் வீசும் நல்வாழ்வைக் கட்டளையிடுவார். நீங்கள் அவரைப் பின்பற்றுவதில் எவ்வளவு உண்மையும் உத்தமுமாய் இருக்கிறீர்கள் என்பதை மாத்திரம் அவர் கூர்ந்து கவனிப்பார்.

...நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல், உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

மத்தேயு 25:21,23

நம்முடைய உத்தமம் விளங்கின பின்பு அவர் வாக்கின்படியே அநேக ஆசீர்வாதங்களை தம் கிருபையினால் அருளிச் செய்வார்.

பவுல் அப்போஸ்தலன் "கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். ஏனென்றால் கிறிஸ்துவின் வல்லமை என் பலவீனத்திலே என்மேல் விளங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்" (2 கொரிந்தியர் 12:9,10) என்று எழுதியிருக்கிறார்! தேவ கிருபையினால் பிறக்கும் திவ்யமான மணம் அவருடை வாழ்வில் வீசினது போன்று, நம் ஒவ்வொருவர் வாழ்விலும் வீசுவதாக!

6 இறைத் தொண்டில் நற்கந்தம்!

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 2 கொரிந்தியர் 2:14

ஒவ்வொரு தேவனுடைய ஊழியரின் வாழ்க்கையிலும் மேற்கண்ட வாக்கியத்தைக் கர்த்தர் நிறைவேற்றி வருகிறார். பவுலடியார் எழுதினது போன்று "நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்" (2 கொரிந்தியர் 2:15) என்று அத்தகைய ஊழியர்கள் ஒவ்வொருவரும் சொல்லக்கூடும். அப்படியே எங்கள் வாழ்க்கையிலேயும் கிறிஸ்துவின் நற்கந்தமாய் விளங்க தேவன் இம்மட்டாக உதவி செய்தார்.' இனியும் செய்வார் என்று அவருக்குள் விசுவாசிக்கிறோம்.

திருமணமான முதல் நாளிலேயே முழந்தாளிட்டு, ஒருமனதுடன், "ஆண்டவரே, நீரே எங்கள் இல்லத்தின் தலைவர்! முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது (பிரசங்கி 4:12) என்ற வார்த்தையின்படி நீரும் எங்கள் இருவரோடும் இணையும்; எங்களை சதாகாலமும் சமாதானத்துடன் சந்தோஷத்துடன் வழி நடத்தும். உமக்குப் பிரியமாய் வாழ எல்லா விதங்களிலும் எங்களுக்கு கிருபை தாரும். நீர் இவ்வுலகிலே மனிதனாக வாழ்ந்த காலத்தில் தேவனுக்குப் பிரியமாய் எப்பொழுதும் நடந்தபடியால் தேவன் உம்மை தனியே இருக்க விடவில்லை (யோவான் 8:29). அப்படியே

எங்களோடும் நீர் தங்கி, உமக்குப் பிரியமாய் வாழும் கிருபையைத் தாரும்" என்று உண்மையான உள்ளத்துடன் ஜெபித்து, எங்களை ஒப்புவித்தோம். அந்த ஜெபத்தைக் கர்த்தர் கேட்டார் என்று நாங்கள் நிச்சயமாய் சொல்லக் கூடும்.

இன்றைய நாட்களிலே, குடும்பங்களில், இவ்விதமாய் கிறிஸ்துவுக்கு முதலிடமும், முக்கியத்துவமும் கொடுக்கும் குடும்பங்கள் மிக மிகக் குறைவு. ஆடம்பரம், லௌகீகம், பட்டங்கள், படிப்புகள் போன்ற காரியங்கள் மட்டுமே அநேகருடைய வாழ்விலே முதலிடம் பெறுகின்றன! கிறிஸ்துவுக்கு அங்கே இடமேயில்லை. எனவேதான் பிரிவினைகளும், பல்வேறு பேதங்களும், மனஸ்தாபங்களும் மலிந்து கிடக்கின்றன.

உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுத்திருக்கிறீர்களா? விசேஷமாக என் அருமை வாலிப பிள்ளைகளே! உங்கள் இருதயத்தில் இயேசுவுக்கு முதல் இடம் அளித்திருக்கிறீர்களா?

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். **மத்தேயு 6:33**

இது நம் யாவருக்கும் தெரிந்த வசனம் தான். எனினும் இதனை வாழ்க்கையிலே அனுபவிப்போர் அத்தனை பேரும் ஆண்டவரின் ஆசியை தங்கள் வருங்கால வாழ்வில் கட்டாயம் அனுபவிப்பார்கள். என்னை ஆசீர்வதித்து, வழிநடத்திவரும் ஆண்டவர், உங்கள் குடும்ப வாழ்க்கையிலும் சகலத்தையும் அவரே பொறுப்பெடுத்துக் கொள்வார். அவருடைய திவ்ய பிரசன்னம் உங்கள் குடும்ப வாழ்க்கையில் உலகம் தரக்கூடாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நிறைவாய் கொண்டு வரும்.

ஆண்டவருக்கு மற்றொரு பெயர், "சமாதானப் பிரபு" *(ஏசாயா 9:6)*! இன்றைய நாட்களில் குடும்பங்களில் சமாதானம் என்பதே இல்லை. ஒவ்வொரு படியிலும் பேராட்டம்! ஆனால் ஆண்டவரோ,

> சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. **யோவான் 14:27**

என்று வாக்கு கொடுத்திருக்கிறார்! அவர் வாக்கு மாறாதவர் *(மத்தேயு 24:35)*. இந்த தேவனுடைய சமாதானத்தை தேவனுடைய பிரசன்னம் தான் கொண்டுவரும். இன்றைக்கு எத்தனையோ குடும்பங்களிலே தேவனுடைய பிரசன்னம் கொஞ்சமும் இருப்பதில்லை. காரணம், அவர்கள் தேவனை வாஞ்சித்து, நாடித் தேடாதது தான்! கர்த்தரோ "தம்மை நோக்கி முழுமனதோடு கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாய் இருக்கிறவர்" *(சங்கீதம்145:18; உபாகமம் 4:7)*.

என் குடும்ப வாழ்க்கையை தேவ ஆசீர்வாதத்தோடு ஆரம்பித்தேன். இன்னல்களும், துன்பங்களும் அடுத்தடுத்து வந்தபோதிலும், தேவ கிருபையே எங்களைத் தாங்கி, முப்புரி நூலாக முப்பது வருடங்களுக்கு மேலாக தேவனோடு இணைந்து வாழவும், ஊழியம் செய்யவும் பெலன் தந்தது. அப்போஸ்தலனாகிய பவுல்,

> அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.
> **2 தீமோத்தேயு 3:12; அப்போஸ்தலர் 14:22.**

என்று எழுதியுள்ளார். அவருடைய வாழ்க்கையிலும் அவர் அடைந்த இன்னல்களின் பட்டியலையும் வேதத்தில் நாம் காண்கிறோம்.

...நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடி பட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.

யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்;

மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.

...கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்;

பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்பு களிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங் களிலும், குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தேன்...

2 கொரிந்தியர் 11:23-28

அதைப்போன்றே பற்பல மனவேதனைகளுக்குள்ளாக கடந்துசென்ற நாட்களில் ஒருசில சகோதர, சகோதரிகள் எங்களை உற்சாகப்படுத்தி, "சகோதரரே, கனி இருக்கும் மரத்தில் தான் மக்கள் கல்லுகளை எறிவார்கள். ஏனைய கனியற்ற மரத்தில் எவரும் கல்லுகளை எறியமாட்டார்கள். உங்கள் வாழ்க்கையில் கர்த்தருக்கென்று உண்மையாய் நீங்கள் கனிகொடுப்பதினால் தான் இப்படிப்பட்ட பாடுகள்! ஆகவே, இவைகளை கண்டு அஞ்சாதீர்கள். கர்த்தருடைய மனம் உங்கள் ஊழியத்தின் மூலம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது என்பதை மறவாதிருங்கள்!" என்று கடிதங்கள் எழுதுவார்கள்.

ஆம், கர்த்தருக்காக நாம் எவ்வளவாய் பல திட்டங் களைத் தீட்டி, ஊழியத்தைப் பெருகச் செய்ய உழைக்கி றோமோ, அத்தனைக்கதிகமாய் பாடுகளும் வரும்! கர்த்தருக்கென்று கனிகொடுக்கத்தான் அவர் தம்முடைய வரங்களைக் கொண்டு நம்மை அலங்கரிக்கிறார். எனவே

"கொஞ்ச நாட்கள் இவ்வுலகிலே வாழப்போகிறேன். எனவே அந்த கொஞ்ச நாட்களில், ஆண்டவருக்கென்று என்னால் இயன்றதை செய்வேன்" என்று ஒரு தீர்மானம் செய்வோம். கர்த்தரே அதற்கேற்ற கிருபையையும், ஞானத்தையும், விவேகத்தையும், ஆவிக்குரிய வரங்களையும் அருளிச் செய்வார்.

பாடுகள் பெருகப் பெருக, கர்த்தரைத் தேடுவதில் நாம் அதிக ஆழமாய் ஈடுபடுவதின் மூலம் நம்மை கர்த்தருக்குள் இந்த பாடுகள் உறுதிபடச் செய்கிறது.

> ...உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து,
> உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.
>
> **ரோமர் 5:3,4**

அதுமாத்திரமின்றி, "கிறிஸ்துவினுடைய பாடுகள், எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது" (2 கொரிந்தியர் 1:5) என்ற பவுலடிகளாரின் வாக்குப்படி ஒவ்வொரு பாடுகளுக்குப் பின்பும், கர்த்தருடைய ஆறுதல் எங்களை அத்தனையாய் நிறைத்தது. கர்த்தருக்கு "சகலவிதமான ஆறுதலின் தேவன்" என்று ஒரு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது (2 கொரிந்தியர் 1:3). எங்களைப் போன்று உபத்திரவப்படுகிற ஒவ்வொரு மக்களுக்கும் ஆறுதல்செய்யும் கருவிகளாயும் எங்களை அவர் மாற்றினார்.

ஆகவே அன்பு சகோதரிகளே! தேவனுடைய ஊழியத்தில் பாடுகள் வரத்தான் செய்யும். எத்தனை பாடுகளின் வழியாக கடந்து செல்கிறீர்களோ அத்தனை வல்லமையாய் தேவனால் உபயோகப்படுத்தப்படுவீர்கள். புடமிடப்பட்ட பொன்னைப் போன்று பிரகாசமான மக்களாய்

திகழ்வீர்கள். பொன்னை உருக்கி சுத்தியால் அடிக்கிறது போல "உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது" என்ற வாக்கு உங்களில் நிறைவேறும். மனிதர் உங்கள் நற்கிரியை களைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துவார்கள் (மத்தேயு *5:16*).

தேவனுக்கென்று உங்களால் இயன்றதை உண்மையாய் செய்தபோதிலும் உங்களைப்பற்றி வேண்டுமென்றே நிந்திக்கிற பிசாசின் மக்கள் சிலர் இருக்கத்தான் செய் வார்கள். அவர்களில் அநேகர் உங்களுடைய உடன் ஊழியர் களாகக்கூட இருக்கக்கூடும். மேலும் மிஞ்சின நீதிமான்கள் சிலர், தாங்கள் செய்வதே சரி, தாங்களே நிதிமான்கள் என்று உங்கள் இருதயத்தைத் தாக்கும் வண்ணமாக பற்பல நிந்தனைகளை உங்களுக்கு விரோதமாக பறைசாற்றித் திரியக்கூடும். நீங்களோ ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்.

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தை களையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். பிலிப்பியர் 4:6,7

கர்த்தர் உங்களுக்காக யாவும் செய்வார். ஏற்ற சமயத்தில் எல்லாவற்றையும் மாற்றிப்போடுவார். அதுவரை பொறு மையாயிருங்கள். அவர் நீதியுள்ள நியாயாதிபதி (சங்கீதம் *7:11*).

எங்கள் வாழ்க்கையில் இப்படிப்பட்ட நெருக்கங்கள், நிந்தனைகள் பல்வேறு திசைகளிலிருந்தும் வந்து எங்களை கலங்கடிக்கச் செய்தன! மாம்சம் பலவீனமானது தானே!

எனினும், ஒவ்வொரு சமயத்திலும், "கிறிஸ்துவே, உமக்காகவே இரவுபகலாய் குடும்பத்தின் காரியங்களை தியாகம் செய்து, உழைக்கிறதை நீர் அறிவீர். நாங்கள் உம்முடைய கரத்தில் எடுத்து உபயோகிக்கப்படும் பாண்டங்கள் மாத்திரமே! இந்த பொல்லாத மனிதர்களின் கரங்களிலிருந்து எங்களை நீரே காப்பாற்றும். எல்லா மகிமையும், கனமும் உமக்கே உரியது!" என்று கண்ணீரோடும், கருத்தோடும் ஜெபித்து வந்தோம். கர்த்தர் அவ்வப்போது ஒவ்வொரு படியிலேயும் இந்த பொல்லாத மனிதர்களின் கரங்களிலிருந்து எங்களை அதிசயமாய் காப்பாற்றி வந்தார். அவருடைய கிருபை மிகப்பெரியது!

எசேக்கியா என்ற ராஜா இது போன்றே தேவன்மேல் மிகுந்த அன்பும், நம்பிக்கையும் கொண்டிருந்தான். அவனுக்கு விரோதமாக விரோதிகள் எழும்பி, "நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?" *(2 இராஜாக்கள் 18:19)* என்று அவனுடைய நம்பிக்கையை அலட்சியம் செய்தார்கள். "நீ அழிந்து போவாய், உன் ராஜ்யமும் அழியும்" என்று பலவிதங்களில், அவனை வேதனைப் படுத்தினார்கள். ஆனால், அவனோ கர்த்தரை விடாமல் பற்றிக்கொண்டான். "கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" *(நாகூம் 1:7)*.

தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான். **1 கொரிந்தியர் 8:3**

என்ற வாக்கியங்களின்படி, கர்த்தர் எல்லாவற்றையும் காண்கிறவராயிருக்கிறபடியால், அவரே தேவன் என்பதை நிரூபிக்கும் வண்ணமாக, எசேக்கியாவோடுகூட இருந்து, அவனை சத்துருக்களின் கையிலிருந்து அற்புதமாய் காப்பாற்றினார்.

...கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம்பேரைச் சங்கரித்தான்;

அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்.

2 இராஜாக்கள் 19:35

இவ்விதமாய் அவனுடைய சத்துருக்கள் இடந்தெரியாமல் அழிந்து மாண்டுபோயினர்.

1963-ஆம் வருடத்திலிருந்து நாங்கள் ஊழியத்தை ஒன்றுபட்டு செய்து வருகிறோம். எவ்வளவு பாடுகள்! எவ்வளவு பிசாசின் அம்புகள்!

ஊழியத்தின் ஆரம்ப காலத்தில், குழந்தைகள் மிகச் சிறியவர்களாயிருந்த நாட்களில் சகோதரர் தினகரன் மாத்திரம் ஊழியங்களுக்குச் செல்வார். இரவு 12 மணி அல்லது 1 மணி என்று வருவார். சில நேரங்களில் விடியற் காலை 2 மணி, 3 மணிக்கு, ஊழியத்திற்கென தூர இடங் களுக்குப் புறப்பட்டுச் செல்வார். நான் வீட்டிலே தனியாக இருந்து, அவருக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து கொடுத்து, அவரை அனுப்புவேன். இவ்விதமான தனிமை நேரங்களில் இயேசு எனக்கு இனிமையாய் இருந்தார். 12 மணி, 1 மணிக்கு அவர் வரும் வரை முழங்காலில் நின்று ஜெபிப்பேன். ஆண்டவரோடு பேசுவது என் மனதை அதிகம் கொள்ளை கொண்டது. என் கணவரோடு ஊழியத் தில் ஈடுபட முடியாதபொழுதிலும், முழங்காலில் நின்று ஜெபத்தில் அவரைத் தாங்குவது எனக்குப் பேரானந்தமாய் தோன்றியது. என் மகன் பால் அந்த நாட்களில் சிறு பாலகனாக இருந்தான். 9 மணி வரை அவனும் என்னோடு முழங்கால்படியிடுவான். பிறகு நித்திரை வந்ததும், படுத்துக்கொள்வான். அதுபோன்றே அதிகாலையில் அவர் புறப்பட்டுச் செல்லும் பொழுதும், விடியும் வரை ஜெபத்தில் ஆழ்ந்திருப்பேன். அண்டை அயலகத்தாரிடம் சென்று அரட்டையடிக்கும் பழக்கத்தை நான் ஒருநாளும் மேற்கொண்டதில்லை. ஆண்டவரே எனக்கு அன்பின்

வழியாய் இருந்தார். தனிமை என்னை ஒருநாளும் பயப் படுத்தவேயில்லை. என் உறவினர்கள் பலர் வந்து, "எப்படி இந்த வீட்டில் நீ தனியாய் இருக்கிறாய்? எங்களால் எல்லாம் ஒருநாள் கூட இருக்க முடியாது" என்று அடிக்கடி சொல்வார்கள். ஆனால், என் தனிமை வாழ்வின் இன்பம் "இயேசு" என்பதை அவர்கள் அந்நாட்களில் அறியாதிருந் தார்கள்.

குழந்தைகள் சற்று பெரியவர்களானதும், என் கணவரோடு ஊழியத்திற்கு செல்ல ஆரம்பித்தேன். பல இடங்களில், என் கணவருக்கு மாத்திரம், படுப்பதற்கென படுக்கை தருவார்கள். என்னைப் பற்றியோ ஒன்றும் கேட்கமாட் டார்கள். ஆனால், நானோ மடக்கி எடுத்துக்கொள்ளக் கூடிய பாய் மற்றும் தலையணைகளை எங்கள் வீட்டிலி ருந்தே என்னோடு கையிலே எடுத்துச் சென்று, யாருக்கும் தொல்லை கொடுக்காமல், பேசாமல் தரையில் படுத்துக் கொள்வேன். அதுபோன்றே உணவளிக்கும் வேளைகளிலும் என் கணவரை ஓடி, ஓடி கவனிப்பார்கள். என்னையோ, "சாப்பிடு" என்றுகூட சொல்ல மாட்டார்கள்! நானோ, அந்த வேளையிலும் கர்த்தருடைய முகத்தைப் பார்த்து, எனக்குக் கிடைத்த ஆகாரத்தை சந்தோஷமாய் புசித்து கர்த்தருக்குள் திடமனதாயிருப்பேன். தாழ்மையுள்ளவர் களை உயர்த்துகிற ஆண்டவர், இந்த நாட்களில் என்னை எத்தனையாய் உயர்த்தி இருக்கிறார் என்பதை வார்த்தை களால் விவரிக்கவே முடியாது. இன்று என் இல்லத்தில் மக்களுடைய அன்பு எப்பொழுதும் பெருக்கெடுத்தோடு கிறது. தேவனுடைய ஊழியர்கள் என்று எங்களைக் கருதி, மக்கள் எங்களை மகிழவைக்க எதையாவது அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். தேவைகள் நிறைந்த மக்களுக்கு நானும் உதவிசெய்ய கர்த்தர் நிறைவான விதங்களில் ஆசீர்வாதத்தை கட்டளையிட்டிருக்கிறார்.

அன்பு சகோதரிகளே! ஊழியத்தின் ஆரம்ப நிலைமை யிலே உங்களுக்கும் இப்படிப்பட்ட பலவிதமான பாடுகள் வரலாம். கவலைப்படாதிருங்கள்! பொறுமையாயிருங்கள்! கர்த்தர் உங்களை காண்கிறவர்! அவருக்காக நீங்கள் செய்யும் சிறு சிறு தியாகங்கள் ஒவ்வொன்றையும் அவர் காணாதவர்போல் இருக்க மாட்டார். ஒவ்வொன் றுக்கும் ஏற்ற பலனை நிறைவாய் தருவார். பவுல் அப்போஸ்தலன் சொன்னதுபோல, எந்த நிலைமையி லிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்வோம். வாழ்ந்திருக்கவும் நமக்குத் தெரியவேண்டும். தாழ்ந்திருக் கவும் நமக்குத் தெரியவேண்டும். .

> ...எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபட வும் போதிக்கப்பட்டேன். பிலிப்பியர் 4:12

என்று அவர் கூறியதைப் போன்று நாமும் வாழ்ந்து காட்டுவோம்.

பல வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு, விருந்தினர் பலர், ஊழிய விஷயமாக எங்கள் இல்லத்திற்கு வந்திருந்தார்கள். அந்நாட்களில் இப்படியாக, சகோதரர் தினகரனைப் பார்க்க பலர் வருவார்கள். அன்றும் அப்படித்தான்! நான்குபேர் மாத்திரம் வரு வார்கள் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அதற்கு அதிக மான பேர்கள் வந்தபோது, எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற கவலை ஏற்பட்டது. மணியோ இரவு 11 ஆகிவிட்டது. பல காரியங்களைப் பேசிவிட்டு யாவரும் பந்தியில் அமர்ந்தனர். நான் மனதிற்குள் ஜெபம் செய்துவிட்டு உணவு பரிமாறினேன். யாவருக்கும் ஒரு குறைவின்றி உணவு பரிமாறி முடிக்க தேவன் கிருபை செய்தார். ஆனால், கடினப்பட்டு உழைத்த எனக்கோ ஆகாரம் எதுவுமேயில்லை.

காலியான பாத்திரத்தை கையில் ஏந்தினேன். கர்த்தரை நோக்கிப் பார்த்தேன். “இயேசுவே! உமக்காக இப்படிப்பட்ட

தியாகத்தைச் செய்ய எனக்குக் கொடுத்த கிருபைக்காக ஸ்தோத்திரம்! ஆனால் இதையெல்லாம் என்னுடைய கணக்கில் எழுதிக் கொண்டு, உம்மண்டை நான் வரும்போது என்னை ஆசீர்வதிக்க வேண்டும்" என்று வைராக்கியமாய் ஜெபித்தேன். நடந்தது என்ன தெரியுமா? அன்று தான் கடைசியாக எங்கள் இல்லத்தில் அப்படிப்பட்ட குறைவு ஏற்பட்டது. அதன்பின் ஒருநாளும் "இல்லை", "போதவில்லை" என்ற பேச்சுக்கே இடமில்லாமல், கர்த்தர் நிறைவான ஆசீர்வாதங்களால் நிரப்பி வருகிறார். அதே ஆண்டவர் உங்களையும் காண்கிறார். உங்களுக்கு மிக அருகாமையில் இருக்கிறார்! அவருடைய கண்கள் அன்பும், கருணையும் நிறைந்த கண்கள்! ஆகவே, இல்லாமையை குறித்து சற்றேனும் கவலைப்படாமல், அவரு டைய நாமத்தை எப்படி மக்களுக்கு அறிவிப்பது? இயேசுவின் நற்கந்தமாக எவ்வாறு நான் திகழ்வது? என்பதிலேயே உங்கள் மனம் முழுவதுமாய் பதிந்திருக்கட்டும். கர்த்தர் பெரிய காரியங் களை உங்களைக் கொண்டு செய்வார். உங்கள் கணக்குக்கு பலன் பெருகச் செய்வார் (பிலிப்பியர் 4:17; சங்கீதம் 56:8).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகில் மனிதனாக வாழ்ந்தபொழுது நன்மையே செய்கிறவராக சுற்றித் திரிந்தார். அவருக்கும் துன்பங்கள் ஏற்படத்தான் செய்தது. நிந்தைகள், அவமானங்கள் அவர் வாழ்விலும் வந்தன! உடன் இருந்த மக்களே அவருடைய இருதயத்தை பிளக்கும்படியான காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டனர். அப்படியிருக்க நமக்கு இவைகள் வருவதில் ஆச்சரியம் என்ன? அவரைப் போன்றே நாமும் பொறுமையோடு இயேசுவின் மீது நம்பிக்கையை வைக்கும்போது, நம் முடைய சத்துருக்களும் நம்மோடு சமாதானமாகும்படி அவர் கிருபை செய்வார் (நீதிமொழிகள் 16:7). எந்த நிலைமையிலும் நம்முடைய இருதயத்தில் தெய்வீக சமாதானம் நம்மை ஆட்கொள்ளும். ஆகவே, உங்களால்

இயன்றதை தேவனுக்கு செய்வதில் உற்சாகமாய் எழும்புங்கள்!

பற்பலவிதமான பாடுகள், நிந்தனைகள் மத்தியில், கர்த்தர் மேலும், மேலுமாக பல திட்டங்களைக் கொடுத்து ஊழியத்தைப் பெருகச் செய்தார். ஒவ்வொரு திட்டத்திலும் ஆரம்ப நாட்களில் நாங்கள் பட்ட பாடுகள் வார்த்தையால் வர்ணிக்க இயலாது. "நமக்கு ஏன் இந்தப் பாடு? பேசாமல் வங்கி அலுவலக வேலையைப் பார்த்துக்கொண்டு, சந்தோஷமாய் இருப்போம். முன்பின் தெரியாத எவர் எவரோ, எத்தனை தரக்குறைவாய் தங்கள் மனம்போனபடி பேசுகிறார்கள்? அதுமட்டுமா? ஒவ்வொரு திட்டத்திற்கும் வேண்டிய பணத்தேவைகளை எங்கிருந்து பெறுவது?" என்றெல்லாம் எண்ணி, நாங்கள் மிகவும் சோர்ந்து போன நாட்கள் உண்டு. தேவ மனிதனாகிய எலியாவும்கூட இவ்விதமாய் சோர்ந்து போனதை வேதத்தில் வாசிக்கிறோம்.

> ...போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்;... **1 இராஜாக்கள் 19:4**

என்று சோர்வில் ஆண்டவரை நோக்கிப் புலம்பினான். கர்த்தர் அவனை விட்டுவிட்டாரா? அவர், தாம் நினைத்த காரியத்தை சாதிக்கவே செய்தார். "எலியாவே, நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம்" (1 இராஜாக்கள் 19:7) என்று அவனிடம் கூறி, அவனுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுத்து, அவன் செய்ய வேண்டிய ஊழியத்தை செய்து முடிக்கும்படி கிருபை செய்தார். பலவீனத்தில் அவனைப் பலப்படுத்தினார்.

1981-ஆம் வருடத்தில் "இயேசு அழைக்கிறார்" அலுவலகம் சொந்தமாக அமைக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டபடியால் அதற்கான இடங்களையோ, அல்லது கட்டிடங்களையோ பார்க்கவேண்டும் என்று அதிகமாக முயற்சித்தோம். அதிகமான முயற்சிக்குப் பின், டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையில் (கிரீன்வேஸ் சாலையில்), "இயேசு அழைக்கிறார்" அலுவலகம்

அமைந்திருக்கும் இடத்திற்கு கர்த்தர் எங்களை வழிநடத்தினார். எங்கள் கையிலோ, அதை வாங்குவதற்கான பணம் கிடையாது. அந்த இடமோ எங்களுக்கென்றே அமைந்தது போன்று காட்சியளித்தது. அந்த இடத்தின் உரிமையாளர்கள், ஒரு குறிப்பிட்ட நாளிலே, ஒரு குறிப்பிட்ட தொகையை தர வேண்டும் என்று கூறினார்கள். எப்படியாவது அதை கட்டி விடலாம் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால், அந்த முயற்சியிலும் கர்த்தர் எங்களைக் காணாதவர்போல் கைவிட்டதாகவே எங்களுக்குத் தோன்றியது.

அந்த நாள் நெருங்கி வந்தது. பணம் வருவதற்கான எவ்வித அறிகுறியுமில்லை. முந்தின நாள் மாலை வேளையிலே உரிமையாளர் தொலைபேசியின் மூலமாக எங்களை அழைத்தார். “பணம் ஆயத்தமாக இருக்கிறதா?” என்று கேட்டார். “நாங்கள் எவ்வளவோ முயற்சித்தோம். ஆனால் இன்னும் பணம் கிடைத்த பாடில்லை” என்று தாழ்மையுடன் அவரிடம் பதில் கூறினோம். தொலைபேசியிலே என் மாமனார் தான் அவரோடு பேசினார். வயதில் பெரியவர் என்று கூட மதிக்காமல், “காசில்லாத நீங்களெல்லாம் எதற்காக கட்டிடத்தை வாங்க வந்திருக்கிறீர்கள்” என்று வாய்க்கு வந்தபடி தொலைபேசியில் அடுத்த முனையிலிருந்து பேசினார் உரிமையாளர்! கண்ணீர் விட்டபடியே அமர்ந்திருந்தார் என் அன்பு மாமனார். சகோதரர் தினகரன் அவர்களை பார்க்க வந்திருந்த ஒரு அன்பான நபர் இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தார். என் மாமாவுக்கு அவர் இருந்தது தெரியாது. தொலைபேசியை இவர் கீழே வைத்தவுடன், “என்ன ஐயா நடந்தது” என்று அந்த நபர் கேட்டார். நடந்ததை மாமா விவரிக்க, அவர் துடிதுடித்துப்போனார். கடைசியில், “நான் நாளை காலை உங்களை ஒரு வங்கிக்கு அழைத்துச் செல்கிறேன். என்னால் இயன்றை உதவியை இந்த விஷயத்தில் செய்கிறேன். கவலைப்படாதிருங்கள்” என்று கூறி விடைபெற்றார்.

அடுத்தநாள் அவர் கூறியபடியே வங்கி ஒன்றிற்கு அழைத்து சென்று, வேண்டிய உதவிகளை செய்து, தேவையான பணத்தை கடனாக வாங்கித்தந்தார். அந்தப் பணத்தை சரியான நேரத்தில் இடத்தின் உரிமையாளரிடம், குறிக்கப்பட்ட அதே நாளில் சேர்த்தபொழுது, அவருக்கு ஆச்சரியம்! ஆனால் எங்களுக்குத் தான் எங்கள் ஆண்டவர் கண்ணீரைக் காண்கிறவர் என்றும், அன்று காகத்தைக் கொண்டு தம் ஊழியனாகிய எலியாவை போஷித்தவர், இன்றும் தம் ஊழியர்களின் தேவைகளை அறிந்து, மக்களை ஏற்ற சமயத்தில் அனுப்பி, அவர்களைப் போஷிக்கிறார்" என்ற உண்மை தெரியும்.

அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?... சகரியா 4:10

ஆரம்பம் அற்பமாய் இருக்கலாம். கவலைப்படாதிருங்கள்! கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் நாம் வேறு யாருக்குக் கீழ்ப்படியப் போகிறோம்? தேவனுடைய ஊழியர்களாகிய பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் மனிதருக்குப் பயப்படாமல், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, ஏராளம் மக்களை ஆண்டவரண்டைத் திருப்பினார்கள் (அப்போஸ்தலர் 5:29). ஆகவே கர்த்தர் உங்கள் கையிலே கொடுக்கிற திட்டங்கள் எதுவாயினும் அவருடைய வழிநடத்துதலின்படி பயத்தோடும், நடுக்கத்தோடும் நிறைவேற்றுங்கள். எதிராளியாகிய பிசாசு மலைபோன்ற பிரச்சினைகளைக் கொண்டுவருவான். ஆனால், முடிவு சமாதானம்! எந்த மக்கள் இவைகளைக் குறித்து பரிகாசமாய்ப் பேசி, நிந்தித்துத் தூஷிக்கிறார்களோ அந்த மக்களை கர்த்தர் கவனித்துக்கொள்வார். அவரே நீதியுள்ள நியாயாதிபதி! நாமோ, முன்னானவைகளை நாடி, இலக்கை நோக்கித் தொடருவோம் (பிலிப்பியர் 3:13,14).

ஒவ்வொரு திட்டத்தையும் கர்த்தருடைய கிருபையினாலும், ஆசீர்வாதத்தினாலும் முடிக்கும் பொழுது

எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? எத்தனை நாளைக்கு இந்த உலகத்தில் இருக்கப் போகிறோம்?

எனவே, என் அன்பு சகோதரிகளே! நீங்கள் செய்யும் ஊழியத்திலோ அல்லது உங்கள் கணவரோடு சேர்ந்து நீங்கள் உழைக்கும் காரியத்திலோ இப்படிப்பட்ட பாடுகள், நிந்தைகள், அவமானங்கள் வரும்பொழுது சற்றும் கவலைப்படாமல், சோர்ந்துபோகாமல் தைரியமாயிருங்கள். பாடுகளை ஜெயித்த பரமன் இயேசு உங்களைப் பாதுகாப்பார். வீராங்கனைகளைப் போன்று ஜெபத்திலும், உபவாசத்திலும் தரித்திருந்து, தேவனுக்கென்று எழும்பிப் பிரகாசியுங்கள்! கர்த்தர் உங்களை வல்லமையுள்ள பட்டயமாக மாற்றுவார்! கிறிஸ்துவின் நற்கந்தமாய் நீங்கள் விளங்க அருள்புரிவார்! உங்களை வாலாக்காமல் தலையாக்குவார். நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்!

7

மேன்மையை ஈர்க்கும் ரோஜா!

பூக்களிலெல்லாம் மேன்மை பெற்றது ரோஜா மலர்! ஆனால், சாரோனின் ரோஜாவாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோ, அந்த மேன்மையிலும் நிகரற்ற மேன்மைக்கு பாத்திரமானவர்!

நான் சாரோனின் ரோஜாவும் பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமுமாயிருக்கிறேன். உன்னதப்பாட்டு 2:1

இப்பூவுலகில் நம் பொருட்டு அவர் மனிதனாக வாழ்ந்த காலத்தில் அடைந்த பாடுகளைப் பற்றி நாம் முந்தின அத்தியாயங்களில் தியானித்தோம். தேவ குமாரனாகிய அவர் பாடுபட்டதின் காரணம், நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர் நடந்த மாதிரியே நடந்து, ரோஜா மலர் போன்று மேன்மை பெற்ற வாழ்வு வாழவேண்டும் என்பதற்காகவே *(1 பேதுரு 2:21)*. தேவாதி தேவனின் திருக்குமாரனாக அவர் இருந்தபோதிலும், இவ்வுலகில் மக்கள் படுகிற பாடுகளை தம் வாழ்க்கையில் மகிழ்ச்சியோடு அனுபவித்தார் *(எபிரெயர் 5:8)*.

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்;...

ஏசாயா 53:4

இயேசு கிறிஸ்துவானவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப் பட்டும் இருந்தார். கர்த்தராகிய தேவன் அவ்வண்ணம் அவரை நொறுக்கச் சித்தமாகி பாடுகளுக்குட்படுத்தினார்.

இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம், அவருடைய ஆத்துமா நம் ஒவ்வொருவருக்காகவும் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்பதே. அவர்தாமே மக்களுடைய அக்கிரமங்களை சுமந்து, அதன் பலனாக தம்மைப் பற்றி அறிகிற அறிவினால் அநேக மக்களை, தேவனைப் பின்பற்றுகிற நீதிமான்களாக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருந்தது (ஏசாயா 53:12). மனிதர்கள் படவேண்டிய பாடுகள் அனைத்தையும் அவர் தம் வாழ்வில் அனுபவித்தார்.

> ...அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். **எபிரெயர் 2:18**

ஆம், எல்லா சோதனைகளினூடே அவர் கடந்துசென்று பாடுகளை அனுபவித்தபடியால், சோதிக்கப்படுகிற தம்முடைய அடியார்களுக்கு உதவி செய்ய, இன்று அவர்கள் அவரை நோக்கிக் கூப்பிடுகையில் ஓடோடி வருகிறார்.

> தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது;... **2 நாளாகமம் 16:9**

பாடுகள், நிந்தனைகள், அவமானங்கள் இவற்றினூடாக அவர் கடந்து சென்ற காலங்களில், அவர் கண்களுக்கு முன்னதாக ஒரே காரியம் காட்சியளித்தது. தேவன் அவரை இவ்வுலகிற்கு அனுப்பிய நோக்கத்தை நிறைவேற்றி முடித்தார். மரித்து, உயிரோடு எழுந்தவராய் பரலோகம் சென்று, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் அவர் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கிறார் (எபிரெயர் 12:2). உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற இவர், தேவ தூதரைப் பார்க்கிலும்

அதிக மேன்மையுள்ளவரானார்" (எபிரெயர் 1:3,4). தேவன் அவரை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணியிருக்கிறார். தேவதூதர்களும், அதிகாரங்களும், வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது (1 பேதுரு 3:22).

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி,
எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

எபேசியர் 1:22,23

ஆம்! மேற்கண்ட காரியங்களை அவர் தம்முடைய கண்முன் நிறுத்தி தன்னை தேவனுக்குள் பலப்படுத்திக் கொண்டார்.

அன்பானவர்களே! ஆண்டவர் இயேசு எத்தனை அதிகமாய் பாடுகளை அனுபவித்தாரோ அத்தனை அதிகமாக தேவனால் மேன்மைப்படுத்தப்பட்டார். முட்களுக்குள்ளே ரோஜா மலர் மேன்மைபெற்று விளங்கியது போல, அவருடைய வாழ்க்கையும் அமைந்தது.

அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.

1 யோவான் 2:6

அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாகிய இருபத்து நான்கு மூப்பர்களும் அங்ஙனமே தேவனுடைய ராஜ்யத்தின் சிங்காசனத்தில் என்றென்றும் வீற்றிருக்கிறார்கள். பன்னிரெண்டு கோத்திரப் பிதாக்கள் ஒருபுறமும், பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மறுபுறமுமாக தேவனுடைய சமூகத்தில் என்றென்றும் இருக்கும் மேன்மையை இவர்கள் யாவரும் பெற்றிருக்கிறார்கள். இவ்வுலகின்கண் அவர்கள் யாவரும் ஜீவித்த நாட்களில் அடைந்த பாடுகள் தான் எத்தனை, எத்தனை!

அதுபோன்றே ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட (சங்கீதம் 78:70) அவர்தம் அடியானாகிய தாவீதும் இவ்வுலகில் சிறுவயதிலிருந்தே தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்து வந்தான். அவரைப் புகழ்ந்து பாடுவதிலும், அவரோடு நெருங்கி ஜீவிப்பதிலும், பேரானந்தம் கொண்டான். அவனுடைய வாழ்க்கைப் பாதை மென்மையாய் இருந்ததா? இல்லவே இல்லை. கண்ணீர் நிறைந்த கடினமான பாதைதான் அது. ஆனாலும், அவனுடைய நம்பிக்கை கர்த்தரின் மேலேயே எப்பொழுதும் இருந்தபடியால், அவன் இந்த உலகத்தின் பாடுகளைக் குறித்து அஞ்சாமல், எல்லா நேரங்களிலும் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.
வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். **சங்கீதம் 121:1,2**

அவன் ஆண்டவரைத் துதித்துப் பாடின அருமையான சங்கீதங்கள், இன்று நம் மனதை எத்தனையாய் ஆறுதல்படுத்துகின்றன! சிறியவர் முதல் பெரியவர் வரை அதன் இன்பத்தை தேனை சுவைப்பது போல் சுவைத்து ஆனந்தம் கொள்கின்றனர்.

உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். **சங்கீதம் 119:103**

இவ்வுலகைவிட்டு தேவனுடைய ராஜ்யத்திற்குச் சென்ற தாவீது, அங்கும் சதாகாலமும் தேவாதி தேவனை புகழ்ந்து பாடிக்கொண்டே இருக்கிறார் என்று அக்காட்சியை தரிசனத்தில் கண்ட தேவதாசன் ஒருவர் கூறினார்.

தேவனால் அழைக்கப்பட்ட ஊழியக்காரனாகிய எலியாவும் கர்த்தருக்கென்றே தன் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டு, அவர்தம் இணையற்ற தேவ ஊழியத்தை மிகுந்த வைராக்கியத்துடன் செய்து வந்தார்.

எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்... யாக்கோபு 5:17

அவரையும் இந்த பாடுகள் விட்டபாடில்லை. உண்மை ஊழியர்களுக்கு பாடுகளற்ற வாழ்க்கை ஏது? அவரும் மனங்கசந்து போகும்வரை பாடுகளை அனுபவித்தார். அவருடைய முடிவு எத்தனை மேன்மையானது என்பதை வேதத்தில் காணலாம். அக்கினி ரதமும், அக்கினிக் குதிரைகளும் அவரைப் பரலோகத்திற்கு ஏற்றிச்செல்ல வந்தது. எலியா, சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப் போனார் *(2 இராஜாக்கள் 2:11)*. எத்தனை மேன்மையான முடிவு பாருங்கள்!

தேவனுடைய தாசனாகிய ஸ்தேவான் மரிக்கும் தருவாயில், பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணார்ந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான் *(அப்போஸ்தலர் 7:55)*.

ஐசுவரியவான் ஒருவனைக் குறித்தும், லாசரு என்ற ஏழை மனிதனைக் குறித்தும் வேதத்தில் வாசிக்கிறோம் *(லூக்கா 16:19,31)*. இந்த ஐசுவரியவான் உலகப்பிரகாரமான பல்வேறு மேன்மைகளை இப்பூவுலகில் வாழும் போது அனுபவித்தான். ஆனால், இயேசுவுக்கும் அவனுக்குமோ வெகுதூரம்! தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களை அலட்சியமாக எண்ணினான்.

அவனுடைய வாசலிலே ஒரு தரித்திரன் இருந்தான். அவனுடைய பெயர் லாசரு. வறுமை மாத்திரம் அவனை

வாட்டவில்லை. சரீரமெல்லாம் பருக்கள் நிறைந்த வியாதி யும் அவனை துன்பத்தின்மேல் துன்பமடையச் செய்தது. ஐசுவரியவான் வீட்டிலிருந்து விழுகிற எச்சில் ஆகாரத்தை அவன் புசித்து, நாட்களைக் கடத்தி வந்தான். அவனுக்கு இருந்த நண்பர்களெல்லாம் நாய்கள் தான். அந்த நாய்களும் அவன் பருக்களை நக்குவதற்காகவே அவனண்டை வந்தன. எத்தனை பயங்கரமான வாழ்க்கை!

ஆனால் இருவரும் இந்த உலகத்தில் அப்படியே இருந்து விட்டார்களா? இல்லை. ஒருநாள் ஆண்டவருடைய ராஜ்யத்தில் போய்த்தானே ஆகவேண்டும். தரித்திரனாய் இருந்த லாசரு அந்த நிலைமையிலும் தேவன் மேல் பற்றுதலாயிருந்ததினிமித்தம் தேவதூதரால் பரலோகத் திற்கு அவன் எடுத்து செல்லப்பட்டான். அதுமாத்திரமின்றி தேவனுடைய மனுஷனாகிய ஆபிரகாமின் மடியிலே செல்லமான நிலைமையிலே கொண்டுபோய் விடபட்டான்.

என் பிரிய சகோதரிகளே! "இந்த உலகத்தில் தரித்திர நிலைமையில் இருந்து அவதிப்படுகிறேனே! ஆண்ட வருடைய அடியார் என்று சொல்லுகிற எனக்கு இந்த தரித்திரம் என்ற நிலைமை மாறாதா?" என்றெல்லாம் உங்கள் உள்ளம் கலங்கித் தவிக்க வேண்டாம்.

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.
கொலோசெயர் 3:2

கர்த்தரையே மேன்மைப்படுத்தி வாழும் வாழ்க்கையின் முடிவு, லாசருவின் முடிவைப்போல் நிச்சயம் நிகரற்ற மேன்மை பெற்றதாய் விளங்கும். ஐசுவரியவானோ இந்த உலகத்தில் மேன்மையான நிலைமையினால் பெருமிதம் கொண்டு வாழ்ந்த பொழுதிலும், அவனுடைய முடிவு பரிதாபமாய் இருந்தது. மரித்த பின்பு நித்திய ஜீவனுக்கு பாத்திரவானாகும் பாக்கியம் அவனுக்குக் கிட்டவில்லை.

பாதாளத்திலே அவன் வேதனைப்பட்டான் (லூக்கா 16:23). "இந்த அக்கினி ஜுவாலையிலே வேதனைப்படுகிறேனே! ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பும்" என்று கதறி கூப்பிட்டான்.

இந்த நிலைமை அந்த ஐசுவரியவானுக்கு மாத்திரமல்ல, இந்த உலகத்தில் இயேசுவைப் பின்பற்றுவதின் மேன்மையை அலட்சியம் பண்ணுகிற ஒவ்வொருவருக்கும் நிச்சயம் வரும். ஆகவே, இவ்வுலகில் ஆண்டவரைத் தேடாமல் வாழ்கிற நம்முடைய இனத்தார், ஜனத்தார், நண்பர்கள் அனைவரையும் எவ்வளவாய் அன்போடுகூட எச்சரிக்க முடியுமோ அத்தனையாய் கிறிஸ்துவின் அன்புடனும், கருணையுடனும், பாசத்துடனும் நல்வழியில் திருப்ப நாம் முயல்வோம். நம் குடும்பங்களில் அப்படிப்பட்ட இடறல் உண்டாக்குகிற மக்கள் "தான் போகும் வழியே சரி" என்று பெருமிதம் கொண்டிருப்பார்களாயின், அவர்களுக்காக கண்ணீர்விட்டு, உபவாசத்தோடு பிரார்த்தனை செய்வோம்.

> தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.
>
> யாக்கோபு 5:20

ஒரு சமயம் தேவ மனிதர் ஒருவர் ஒரு தரிசனம் கண்டார். ஒரு பெண் தன் குடிகாரக் கணவனின் கொடுமையினால் அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு படாத பாடுகளை அனுபவித்தாள். அவளுடைய கணவனிடமிருந்து பெற்ற அடியினால் உண்டான காயங்களினால் சரீரமெல்லாம் தழும்புகளால் நிறைந்திருந்தது. எவ்வளவோ பொறுமையாய் அந்த நிலைமையிலும் அவனுக்காக ஜெபித்து, கண்ணீர்விட்டு, கர்த்தரின் பாதத்தில் கதறி வந்தாள். ஆனால், அந்த அன்பின் மேன்மையை அறியாமல் அவளை அலட்சியமாய் அடித்துத் துன்புறுத்தி மரணத்திற்

குள்ளாக்கினான் அந்த பாதகன்! துன்பங்களின் மத்தியிலேயும் இயேசுவின் அடியாளாய் வாழ்ந்த அப்பெண்ணின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. மறுநிமிஷம் பரலோகத்திற்கு அவளுடைய ஆத்துமா கொண்டு செல்லப்பட்டபோது, இயேசு தாமே நேரில் வந்து, அவளை அழைத்துச் செல்ல காத்திருந்தார். இயேசுவைக் கண்ட மாத்திரத்தில் ஓடோடி வந்து அவருடைய பாதத்தை பற்றிக்கொண்டாள். அன்பு தகப்பனாகிய இயேசுவின் ஆணியடிக்கப்பட்ட கரங்கள், அவருடைய குமாரத்தியாகிய அவளை அணைத்து முத்தமிட்டன.

ஆண்டவருடைய அன்பின் அரவணைப்பில் பேரானந்தம் கண்ட அப்பெண், "தகப்பனே! பூவுலகில் நான் வாழ்ந்த நாட்களில் என் புருஷனால் மிகவும் கொடுமைப்படுத்தப் பட்டேன். குடித்துவிட்டு, வீட்டுக்கு வந்து யாதொரு காரணமு மின்றி என்னை நையப்புடைப்பார். துடிதுடித்துக் கதறுவேன். உடல் முழுவதும் காயங்களால் நிறைந்திருக்கும்; மனதிலும், சரீரத்திலும், நான் அடைந்த வேதனைகளுக்கு அளவேயில்லை.

ஆனால், அந்த பாடுகள் அனைத்தும் அத்தனை கொடியதாய் இருந்தாலும், இப்பொழுது நான் அனுபவிக்கிற இந்தப் பேரானந் தத்திற்கு முன்பு அவைகள் ஒன்றுமேயில்லை. என் ஆண்ட வரை முகமுகமாய் தரிசிக்கும் சிலாக்கியம் பெற்ற நான் எத்தனை பாக்கியசாலி" என்று ஆனந்தக் கூத்தாடினாள்.

அதுபோன்றே எத்தனையோ தேவனுடைய ஊழியர்கள், உண்மையாய் ஆண்டவருக்காக உழைத்து, அதினிமித்தம் பாடுகளை அனுபவித்திருக்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களை அங்கு வாழும் மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்த தோடு, அப்படி வருகிற ஊழியர்கள் எவரையும் கொலைசெய்து, துன்பப்படுத்தி வந்தனர். அதைக் கண்டும் அஞ்சாநெஞ்சம் கொண்டவரும், அந்த மக்களின் ஆத்துமாக்களைப் பற்றிய

பாரம் கொண்டவருமான ஊழியர் ஒருவர் எப்படியாவது இம்மக்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவே வேண்டும் என்ற வைராக்கியத்துடன் புறப்பட்டுச் சென்றார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உள்ளத்தி லிருந்த அன்புப் பிரவாகம் அவருடைய உள்ளத்திலிருந்தும் புறப்பட்டோடியது.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; பிலிப்பியர் 2:5

...பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்;...
1 யோவான் 4:18

என்ற வேத வாக்கின்படி, அவர்களைப் பற்றிய பயம் அவர் உள்ளத்திலிருந்து முற்றிலுமாக அகன்றது. அந்த மக்களின் தலைவன் ஏனைய தேவ ஊழியர்களை, அம்புகளை எய்து கொன்றது போன்று இவரையும் கொல்ல முயற்சித்தான். ஆனால் அவன் எய்த அம்பு அவர் நெஞ்சில் பாய்ந்து அவருக்குக் கேடு ஒன்றும் வராமல் கீழே விழுந்தது. கீழே விழுந்த அம்பை அந்த ஊழியர் தன் கரங்களில் எடுத்து, அந்தத் தலைவனிடம் கொடுத்து தன் மீது மீண்டுமாக எய்யும்படி சொல்லிவிட்டு திரும்பவும் போய் அதே இடத்தில் நின்று கொண்டார். இவருடைய இந்த செயல், கொடியவனான அந்தத் தலை வனின் உள்ளத்தைத் தொட்டது.

"நீ யார்? எதற்காக இங்கு வந்திருக்கிறாய்?" என்று அவரை வினவினான். இயேசுவைப் பற்றியும், அவரைப் பின்பற்றுவதின் மேன்மையைப் பற்றியும், நித்திய ராஜ்யத்தின் இன்பத்தைக் குறித்தும் மிகுந்த ஞானத்தோடு பகிர்ந்து கொண்டார் இந்த தேவ ஊழியர். நாளடைவில் தேவ மகிமை இம்மக்களுக்குள் ளும் இறங்கியது. இயேசுவின் அடியார்களாய் அவர்களும் மாறினர்!

...ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயி ருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. 2 கொரிந்தியர் 5:17

அந்த மக்கள் மத்தியிலே, இன்று ஆண்டவருக்காகத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யும் மக்கள் பலர் எழும்பி யிருக்கிறார்கள். ஆம், இந்த மேன்மையான வாழ்க்கையை ருசித்து பார்ப்பவர்களுக்குத்தான் அதன் அருமை விளங்கும்!

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
சங்கீதம் 34:8

ஒருமுறை மலைநாடு ஒன்றிற்கு நாங்களும், வேறு சில நண்பர்களுமாக சென்றோம். எங்களுடைய வாகனம் திடீரென்று மலையில் ஏறுவதற்குப் பதிலாக வேகமாகக் கீழ்நோக்கி இறங்க ஆரம்பித்தது. வாகனத்தை ஓட்டியவரின் முயற்சியினால் எப்படியோ அப்படியே நின்றுவிட்டது. “வாகனம் முன்னேறிச் செல்வது எவ்வளவு கடினமாய் இருக்கிறது. ஆனால், பின்னோக்கி வருவது எவ்வளவு சுலபமாய் இருக்கிறது” என்று எங்களில் ஒருவர் விமர்சித்தார். ஆம், அது உண்மைதான்! பாடுகளைக் கண்டு, “ஐயோ, என்னால் முடியாது” என்று முன்செல்வதை விட்டு பின்னேறுவோர், ஆவிக்குரிய வாழ்விலும் ஏராளம் பேர்! ஆனால், மேற்கண்ட ஊழியரைப்போன்று முன் வைத்த காலை பின்வைக்காமல், முழுமுயற்சியுடன், ஆண்டவருக்காக உழைப் பவரே, ஒப்பற்ற மேன்மையான வாழ்வை இவ்வுலகிலும், மறு உலகிலும் அனுபவிப்பர்.

மற்றொரு ஊழியர் எப்பொழுதும் “ஆண்டவருக்கு ஸ்தோத் திரம், அல்லேலூயா” என்று சொல்லிக் கொண்டே இருப்பார். பாவத்தைக் குறித்து கண்டனம் பண்ணி கடிந்து பேசுவார். ஆண்டவருக்குப் பிரியமில்லாத, அகந்தையான வாழ்க்கை வாழ்ந்த சில மக்களுக்கு, இவர் இவ்வாறு கடிந்து பேசுவதும்,

அல்லேலூயா என்று சொல்லுவதும், எரிச்சலையும், கோபத்தையும் உண்டுபண்ணியது.

இந்த மனிதனை தூக்கிக்கொண்டுபோய் கடலிலே எறிந்துவிடலாம்; அதன்பிறகு அவன் எவ்வாறு "அல்லேலூயா" சொல்லிகொண்டிருப்பான்; அதோடு அவன் வாழ்க்கை முடிந்துவிடும், நமக்கும் தொல்லை தீரும் என்று ஒரு நாள் தீர்மானித்தனர். அத்தீர்மானத்தின்படி, நான்குபேர் சேர்ந்து அவரைத் தலையிலே தூக்கிக் கொண்டார்கள். அங்ஙனம் அவர்கள் தூக்கிச் செல்லும் போதும், அவர் சும்மா இருக்கவில்லை. "ஆண்டவரே ஸ்தோத்திரம். அல்லேலூயா" என்று சத்தமிட்டு கூச்சலிட்டார். "சாகப்போகிற நேரத்திலுமா உன் கூச்சலை விடமாட்டாய்" என்று அந்த மக்கள் அவரை அதட்டியபோது, "ஐயா! நான் எப்படி பேசாமல் இருப்பேன்? யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்; ஒரு ராஜாவை கனப்படுத்துவது போன்று என்னை எத்தனையாய் மேன்மைப் படுத்தி நீங்கள் தலையில் சுமந்து செல்கிறீர்கள், அல்லேலூயா" என்று மறுபடியும் ஆரவாரம் செய்தார். தூக்கிச் சென்ற மக்களுக்கு இன்னும் அதிகமாகக் கோபம் வந்தது. அப்படியே, அந்த இடத்திலேயே தூக்கி எறிந்துவிட்டு போய்விட்டார்கள். அவரோ, அல்லேலூயா சொல்வதை நிறுத்தவேயில்லை.

நம்முடைய வாழ்க்கையிலும் இத்தகைய பாடுகள் கொஞ்ச நாட்கள் தான். நம்முடைய ஆத்துமாக்களில் சோர்ந்து போகாமல், இயேசுவையே நோக்கி பார்ப்போம். தேவனுடைய வழியில் கடந்து சென்று, விபரீதங்களை சகித்த இயேசுவையே நினைத்துக் கொள்வோம். அவர் இரத்தம்சிந்தி தம் உயிரை கொடுத்தது போன்று, அத்தனை கடுமையான சோதனைகள், பாடுகள் நமக்கு வரவில்லையே! ஆகவே, கொஞ்சமும் தைரியத்தை இழந்துவிடாதிருங்கள்; கர்த்தருக்குள் திடன்கொள்ளுங்கள்.

...பலங்கொண்டு திடமனமாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். யோசுவா 1:9

என்று மோசேயைப் போன்று யோசுவாவுக்கு வாக்கருளிய கர்த்தர், அவனை அப்படியே மேன்மைப்படுத்தினார். அங்ஙனமே உங்களையும் மேன்மைப்படுத்துவார்.

என் வாழ்க்கையிலே நான் கடந்து வந்து பற்பல பாடுகளைப் பற்றி எழுதியிருந்தேன். ஆனால், இன்று அவைகளை குறித்து கவலைப்படுவதில்லை. ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர், நான் நம்புகிறவர் இன்னாரென்று அறிவேன். அவருக்காக நான் செய்யும் தியாகங்கள், படும் பாடுகள் ஒவ்வொன்றுக்கும் அவர் உடனுக்குடன் இரட்டிப்பான நன்மை தருகிறவராயிருக்கிறார்.

உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலட்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள். அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும். ஏசாயா 61:7

இங்கு மாத்திரமல்ல, இவ்வுலகில் கண்களை மூடி, கர்த்தரண்டை நான் செல்லும் நாட்கள் சீக்கிரமாய் வரும். "...தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு. அது அதிக நன்மையாயிருக்கும்" *(பிலிப்பியர் 1:23)*.

அன்று, "என் மகளே! எனக்காக நீ செய்த தியாகங்களுக்காக என் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று ஆண்டவர் கட்டி அணைத்து, முத்தமிட்டு, மகிழ்வார். அந்த நாள் எத்தனை பேரின்பான நாள்! அந்த நாள் வரும்வரை அவருக்காக, பாடுகள், துன்பங்கள் மத்தியில் உழைப்பதே என் வாழ்வின் நோக்கமாகும். அவருக்காகவே வாழ்வேன், அவருக்காகவே மரிப்பேன்" என்பதே என் வாழ்வின் இலட்சியம்!

நிச்சயமாக ஆண்டவர் தமது கிருபையினால் இந்த இலட்சியத்தை நிறைவேற்ற உதவி புரிவார் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். நாம் ஒருமனதுடன் நம் ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்துவோம். இவ்வுலகின் பாடுகளைக் கண்டு அஞ்சாதிருப்போம்.

நான் அடிக்கடி எழுதுவதுபோல, உலகத்தின் மேன்மைகளுக்காக எத்தனையோ பெண்கள், எவ்வளவோ வைராக்கியத்துடன், விடாமுயற்சியுடன் பாடுகளைக் கண்டு அஞ்சாது பற்பல வீரசெயல்களை புரிந்து மேன்மையடைகிறார்கள். இவ்வளவுக்கும் அவைகள் யாவும் அழிந்து போகிற அநித்தியமான காரியங்கள். ஆனால், நாம் பின்பற்றுவதோ என்றென்றும் அழியாத நித்தியத்திற்குரிய காரியங்கள்!

எனவே, என் அன்பு சகோதரிகளே! எழும்பிப் பிரகாசியுங்கள்! கர்த்தரையே உங்கள் கண்களுக்கு முன்னதாக வைத்து, முன்னேறுங்கள். சாரோனின் ரோஜாவாகிய ஆண்டவர் இயேசு, முட்களிடையே மலரும் ரோஜாவைப் போன்று உங்களையும் தேவனுக்கு நற்கந்தமாக விளங்கச் செய்து, இவ்வுலகிலும், மறுஉலகிலும் மேன்மைப் படுத்துவார்.

சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.

நீதிமொழிகள் **31:30**

ஆசிரியரைப்பற்றி...

...நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோவான் 6:63

என்ற அருள்வாக்கிற்கேற்ப தன்னுடைய 16–வது வயதில் தன் உள்ளத்தை ஆண்டவருக்கு பறிகொடுத்து, அன்று முதல் இன்றுவரை கிறிஸ்துவோடு நடக்கிற தன் ஆழமான அனுபவத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவரின் துணை யோடு அநேக புத்தகங்களை எழுதவும், அதை வாசிக்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் ஜீவனைப் பெற்று, அவர்களும் ஆண்டவருக்கென்று எழும்பிப் பிரகாசிக்க வேண்டும் என்ற ஆத்தும தாகத்தோடு, தன் அனுபவப் பாதையை ஒரு திறந்த புத்தகமாக எழுதி வெளியிட்டு, மக்களுக்கு தெய்வீக ஒளியைக் காண்பிக்கும் கிருபா பாத்திரமாக சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்கள் விளங்கி வருகிறார்.

தேவ கிருபையால் ஆண்டவர் இம்மட்டும் 'விலையுயர்ந்த முத்து', 'புத்தியுள்ள ஸ்திரீ', 'கனிதரும் செடி', 'முள்ளில் ரோஜா', 'ஜெபமே ஜெயம் – பாகம் 2', 'என் வேண்டுதலின் சத்தம்', 'சின்னஞ்சிறு தீபம்', 'தெய்வீக பரிசுத்தம்', 'கிறிஸ்துவுக்குள் நற்கந்தம்', 'பாக்கியம் பெறும் குடும்பம்', 'நாளுக்கு ஓர் நல் வார்த்தை', 'இருளில் வெற்றி தரும் வாழ்வு', 'பாடுகளும் மகிமையும்', 'இனிய இல்லறம்', 'அழைப்பின் மேன்மை', 'கர்த்தர் அருளும் குழந்தை செல்வம்' ஆகிய புத்தகங்களை அவருடைய சித்தத்தின்படி எழுதி வெளியிட உதவி செய்திருக்கிறார்.

இவ்வுலகின் பாடுகள், துன்பங்கள், ஏமாற்றங்கள், இவைகள் அனைத்தின் மத்தியிலும், முள்ளின் நடுவே காணப்படும் ரோஜாவைப் போன்று மணம் வீசவும், பாடுகள் அனைத்திலும் ஆண்டவரின் அருளாலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாய் நாம் மேன்மை பெற்ற வாழ்வு வாழவும் வழிசெய்கிறது, "முள்ளில் ரோஜா" என்ற இந்த ஒப்பற்ற புத்தகம்.

அன்பு சகோதரி அவர்களை இந்த நற்பணியில் கரம்பிடித்து வழி நடத்திவரும் ஆண்டவராகிய இயேசு தாமே, இதிலும் பெரிதான தெய்வீகக் கிரியைகளை புத்தகங்கள் வாயிலாக நிறைவேற்ற, அவர்களுக்கு தேவையான சுகம், பெலன், ஜீவன் அளித்து, தொடர்ந்து கோடிக்கணக்கானவர்களுக்கு ஆசீர்வாதமாய் திகழ அருள்புரிவாராக!

1990–ஆம் வருடம் சகோதரி ஸ்டெல்லா தினகரன் அவர்கள் எழுதிய சிறப்புமிக்க நூலான "முள்ளில் ரோஜா" என்ற இந்த புத்தகம், மீண்டுமாக 2011–ல் மறுபதிப்பாக வெளியிடப்படுகிறது.

உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண் டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத் துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்கு தரிக்கப்பட்டிருக்கிறது. எரேமியா 15:16

ISBN-978-93-81334-21-8
07010013